உ.வே.சா. அறக்கட்டளை

உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு

திரு. எஸ். டி. காசிராசன். இ.ஆ.ப.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

GIFTED BY
INDIAN EXPRESS LIBRARY
CHENNAI

உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு

திரு. எஸ். டி. காசிராசன், இ. ஆ. ப.,
போக்குவரத்து ஆணையர்;
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் சங்கம், மற்றும்
தலைவர் பச்சையப்பன் அறக்கட்டளை.
சென்னை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி. டி. ஐ., தரமணி, சென்னை-600 113.

அறக்கட்டளைப்பொழிவு வரிசை.

Bibliographical Data

Title of the book	:	U. Ve.Sa.. Oru Tamil Valvu
Author	:	S. T. KASIRAJAN, I.A.S., Transport Commissioner, Special Officer, World Tamil Sangam & Chairman Pachayappa's Trust.
Publisher	:	International Institute of Tamil Studies, T. T. T. I., Tharamani, Madras - 6000 113.
Publication Number	:	128
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	Feb - 1987
Paper used	:	14.6 T, White Printing
Size of the Book	:	21X14 cms
Printing Type used	:	10 Point
Number of Copies	:	1200
Number of Pages	:	Viii + 136
Price	:	Rs. 15 -
Printers	:	Aarthi Printing House, 416-A, Mount Road, Nandanam, Madras-600 035
Binding	:	Card Board
Artist	:	Mr. Sigamani
Subject	:	A Study on U Ve. Sa.

பதிப்புரை

டாக்டர் அ. நா. பெருமாள்
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.

இந்தியப் பெருநாடு ஆழ்ந்தகன்ற பண்பாட்டு நெறிகளைக் கொண்ட தொன்மரபு சான்ற நன்னாடு. அறிவியல் வளர்ச்சியில் விண்ணேறிப் பறக்கும் மேலைத் தேயத்தார்போல் ஆன்மீக வளர்ச்சியில் மண்ணிலிருந்தே விண்ணைக்காணும் சான்றோர்கள் பலர் வாழும் உயர்நாடு. இவ்விந்தியப் பெருநாகரிகத்தின் அடிப் படைக் கூறுகள் திராவிட நாகரிகத்தினவே என்பதைக் கில் பர்ட் சிலேட்டர் முதலான மேனாட்டறிஞர்கள் ஆய்ந்துரைத் துள்ளார்.

டாக்டர் கால்டுவெல் அவர்கள் யாத்த திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் திராவிடமொழிபற்றிய கண்ணோட்டத்தை உலக அரங்கில் திசை திருப்பியது. வரலாற்றில் புதைந்துபோன உண்மை களாக இருந்த சிந்தனைகளை வெளிப்படுத்தியவர் என்னும் பெருமைக்குரிய டாக்டர் கால்டுவெல் அவர்களை யடுத்து தமிழ் மொழியின் வரலாற்றையும் தமிழர்கள் வரலாற்றையும் மீட்டுக் கொடுத்த பெருந்தகை என்ற வரிசையில் நம்முன் டாக்டர் உ. வே. சாமிநாதர் அவர்களே தோன்றுகின்றார்.

டாக்டர் உ. வே. சா. அவர்களின் ஒப்பரும் பணிகளை அவர் பெயரால் இயங்கும் நிறுவன அறக்கட்டளைப் பொழிவு கள் தமிழ்கூறும் நல்லுலகுக்கு எடுத்துரைத்து வருகின்றன. இதுவரை மூன்று பொழிவுகள் நிறைவேறியுள்ளன.

'உ. வே. சா. ஒரு தமிழ்வாழ்வு' என்னும் இப்பொழிவு அறக்கட்டளை நிரலில் நான்காவதாகும். முற்பொழிவுகள் சங்கவிலக்கியம், காப்பியம், இலக்கணம் ஆகிய துறைகளில் பதிப்புத் தந்தை ஆற்றிய சிறப்புக்களை உரைத்தன. இப் பொழிவு டாக்டர் உ. வே. சா. அவர்கள் வாழ்வு எவ்வாறு தமிழ்வாழ்வாகவும் தமிழுக்கென்றே உழைத்த வாழ்வாகவும் அமைந்ததென்பதை மையமாக்கிச் செல்கின்றது.

இப்பொழிவினை அளிக்கும் திரு. எஸ். டி. காசிராசன், இ. ஆ. ப., அவர்கள் தமிழ்த் தென்றல் திரு. வி. க அவர்களின் மாண்பு பேசி அவர்தம் தொண்டுரைக்கும் நன்மனத்தினர் ஆவர். அவர்கள் இப்பொழிவினை ஆற்ற இசைந்து அதனை நூல்வடிவமாக்கித் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

நிறுவனம் மேற்கொண்டுவரும் பன்முகப் பணிகட்கும் நற்றுணையாய் இருந்து வரும் நிறுவனத் தலைவர் தமிழ் நாட்டரசின் கல்வி, சட்ட அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்களுக்கு நிறுவன சார்பில் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுவின் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களின் அன்பும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களின் வழிகாட்டுதலும் நிறுவனப்பணிகளை வளமாக்கி வருகின்றன. இப்பெருமக்களுக்கும் நன்றி தெரி வித்துக்கொள்கின்றேன்.

மிகக் குறைந்த காலத்தில் இந்நூலை நேர்த்தியான முறை யில் அச்சிட்டுத் தந்த ஆர்த்தி அச்சக உரிமையாளர் திரு. க. செயகுமார் அவர்கட்கும் அச்சக ஊழியர்கட்கும் அட்டை ஓவியம் வரைந்து தந்த ஓவியர் திரு. சிகாமணி அவர்கட்கும் என் வாழ்த்துக்கள்.

நூல் அச்சாகுங்காலத்து உடனிருந்து மெய்ப்புப் பணி களைப் பார்த்துத் தந்த டாக்டர் கு. இராசேந்திரன், திரு. பெ. அனந்தசயனம் ஆகியோர்க்கு என் ஆசிகள்.

சென்னை
18-2-87

அன்புடன்
அ. நா. பெருமாள்

முன்னுரை

வாழ்க்கை ஒழுங்குடையது; தெளிவான வரையறைகள் கொண்டது; அதனாலேயே இவ்வுலகில் மனிதர்கள் நடமாடும் நாட்கள் மட்டும் வாழ்நாட்கள் என்றழைக்கப்பட்டு வருகின்றன. மற்ற உயிரினங்களின் வாழ்வில் வந்து போகும் நாட்கள் இவ்வாறு சுட்டப் பெறுவதில்லை.

மனிதர்க்கு வாய்த்த பெருமைக்கும் சிறப்பிற்கும் உரிய இவ் வாழ்நாட்களை அவற்றின் அருமை கருதி எல்லோருமே அதற்கேற்ப கடமையாற்றுகின்றார்கள் என்று நாம் கூறிவிட முடியாது. இம் மன்பதையில் மிகச்சிலரே உள்ளுணர்வு பெற்று பயன் வாழ்வு வாழ்கின்றனர். இயல்பான மனிதரின் நடைமுறை யிலிருந்து இச்சிலரின் வாழ்க்கையைப் பிரித்துரைக்கவே இவர்களை வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் என்றும் மனிதருள் மனிதர் என்றும் சிறப்பிக்கின்றோம். இவர்கள் தாம் செய்த செயல்களால் தமக்குப் பின்வரும் மாந்தர்தம் வாழ்வுக்கெல்லாம் மூலமாகி அவர்களின் வாழ்வோடு என்றும் நிலைபெற்று விடுகின்றார்கள்.

வாழ்க்கைச் சிறப்பை, அதன் நீள அகலங்களை, இவ்வுலகில் ஆறாக ஓடிக் கொண்டிருக்கும் அதன் வற்றா மூலஊற்றை இலக்கியங்கள் என்பனவே தொட்டும் தொடர்ந்தும் காட்டு கின்றன என்று பலவேளைகளில் நான் கருதுவேன்.

இலக்கியங்களைக் கற்கும்போதெல்லாம் அவற்றை யாத்த புலவோர் மீது எல்லையற்ற மதிப்பு என்னுள் தோன்றவே செய்தது. அதே வேளையில் இப்புலவர் பெருமக்களையும் அவர்தம் சிந்தனைகளைத் தாங்கிக் கொண்டு அமிழ்தக் கட்டி களாய்க் கையிலிருக்கும் பாடல்களையும் நமக்கு இனங்காட்டி யவர் யார் என்பதையும் எவ்வாறு இவை நமக்குக் கிடைத்தன என்பதையும் நினைத்துப் பார்க்கவே செய்தேன். இதற்கு எனக்குக் கிடைத்த விடை சாமிநாதன் சாமிநாதன் என்பதாக இருந்தது.

ஆயிரம் ஆண்டுகட்கும் இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முன்னர் வாழ்ந்த சான்றோர்கள் எழுதி வைத்த பாடல்கள் பலரின் வீடுகளில் தப்பும் தவறான பாடங்களுடன் பூச்சரித்த பனையோலைகளில் எழுதப்பட்டுக் கிடந்ததையெல்லாம் தேடித் தொகுத்து அவற்றினூடே யிருக்கும் சிந்தனைச் செல்வங்களை யெல்லாம் இவை யிவை என்றும் இன்னின்ன செல்வம் இங்கிங்கு உள்ளன என்றும் வகுத்துக் காட்டி எல்லோர்க்கும் அறிவுக் கொடை வழங்க ஒரு சாமிநாதனால் எவ்வாறு முடிந்ததென்று அவர் வரலாற்றைக் கற்கும்போதெல்லாம் நான் வியந்து வினா எழுப்பி யிருக்கிறேன். அதற்கு எனக்குக் கிடைத்த விடை சாமிநாதனுக்கு இந்தத் தமிழர் வாழும் வீடுகளெல்லாம் தம் வீடாகக் காட்சியளித்தது என்பதாகும்.

சாமிநாதன் கற்கத் தொடங்கிய ஐந்தாம் அகவை முதல் பணிமுடித்த எண்பத்தேழாம் அகவை வரை கற்றதும் ஆய்ந்ததும் தமிழ் ஆதலால் அவர் வாழ்வையே தமிழ் வாழ்வு என்று இப் பொழிவில் மையமாக்கியுள்ளேன். அவர் மேற்கொண்ட வாழ்வு தமிழ் வாழ்வாக எவ்வாறமைந்ததென்பதையேதொடர்ந்து ஐந்துத் தலைப்புக்களில் விளக்கி அதன் மூலம் அவர்வாழ்வு தமிழுக்கும் தமிழர்க்கும் பெறலரும் பேறாக அமைந்ததென்று முடிபுரைத் துள்ளேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டு செய்த பெருமக்களின் பெயரால் அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தி அவற்றை நூல்களாக்கி வெளியிட்டு வருவதைப் பெரும்பணி என்றே போற்றுகின்றேன். அவ்வகையில் தமிழுக்கு மூலப்பணியாற்றிய டாக்டர் உ. வே. சா. பெயரால் அமைந்த அறக்கட்டளைப் பொழிவில் அவர்தம் பதிப்புப்பணிகள் பற்றிப் பேசவாய்ப்புக்கிடைத்தமையைப் பேறாகக் கருதுகிறேன் இதற்காக நிறுவன இயக்குநர் டாக்டர் அ. நா. பெருமாள் அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் உ. வே.சா.அவர்களின் தமிழ்த் தொண்டினை ஒட்டு மொத்தமாகத் தொகுத்துப்பார்க்க வேண்டுமென்றும் அவ்வாறே. உரைக்க வேண்டுமென்றும் கருதியே இந்நூலில் செய்திகளை அமைத்துள்ளேன். நூலின் பக்கவரையறை கருதி உ. வே. சா. ஆற்றிய தமிழ்ப் பணியை அவர் வாழ்ந்த தமிழ் வாழ்வை மேலும் விளக்கமாக உரைக்க முடியவில்லை. வேளை வரும்போது இன்னும் விரிவாக எழுதத் திட்டமிட்டுள்ளேன். டாக்டர் உ.வே. சாமிநாதனின் தொண்டுணர்வை நாம் எல்லோரும் பெற்றாகல் வேண்டுமென்பதே இந்நூல் வழி நான் உரைக்கும் செய்தியாகும்

சென்னை | அன்புள்ள
18-2-87 | எஸ். டி. காசிராசன்

உள்ளுறை

		பக்கம்
	பதிப்புரை	III
	முன்னுரை	V
1.	தமிழ் வாழ்வு	1
2.	தமிழ்க் காதலர்	7
3.	பதிப்புத்துறை முன்னோடிகள்	18
4.	ஒரு திருப்பம்	23
5.	பதிப்புத் திறம் சிற்றிலக்கியங்கள்	30
6.	உயர்ந்த உழைப்பாளர் - இமயப்புலமை	64
7.	பெறலரும் பேறு	106
	பின்னிணைப்புகள்	121

1. தமிழ்வாழ்வு

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

என வருஉம் பொய்யாமொழிக்கு டாக்டர் உ. வே. சாமிநாதன் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

"சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார்; தமிழிலே வாழ்ந்தார்; அவர் பிறப்பும் தமிழ்; வளர்ப்பும் தமிழ்; வாழ்வும் தமிழ். அவர் மனமொழி மெய்களெல்லாம் தமிழே ஆயின. அவர் தமிழாயினர்; தமிழ் அவராயிற்று; அவர் தமிழ்; தமிழ் அவர்.

ஐயரின் இளமைக் காலமும் இடைக்காலமும் சோதனைக் குரியன. அவர் சோதனை வலையில் சிக்கினார் இல்லை. அஃது அவரது தவப்பயன். அக் காலம் சண்டைமயமானது. ஐயர் புலமை அவரைச் சண்டையில் புகுத்தவில்லை; தமிழ்த் தொண்டில் புகுத்தியது. அத்தொண்டு அவரை மஹாமஹோபாத்தியாயர் ஆக்கிற்று; தாக்ஷிணாத்திய கலாநிதி ஆக்கிற்று; டாக்டர் ஆக்கிற்று; தமிழ்த்தாத்தா ஆக்கிற்று; தமிழ்க்கோயில் ஆக்கிற்று.

பழந்தமிழ் வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர்; சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்."

இம்மணிமொழிகள், திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் என்னும் அரும் பெரும் பேழையுள் பொதிந்து வைக்கப் பட்டுள்ளன.

உ. வே. சாமிநாதனின் உணர்வு, உழைப்பு, பண்பியல், பதிப்பு ஆகியவற்றின் முழுதுறு பிழிவுகளாக இப்பொருண் மொழிகள் அமைந்து

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்."

என்ற முது மொழியையும் நினைவுறுத்திக் கொண்டுள்ளன.

வினையாற்றல் :

சாமிநாதன் தோற்றம் (பிறவி) அருமை மிக்கது ; பெருமையும் மிக்கது. அவர் தோற்றத்தால் தமிழ் பெற்ற ஏற்றம் மிகுதி. அவர் பதிப்பித்த நூல்களின் சீர்மைக்கு இணையாக, இந்நாள் கூட நூல்கள் வெளிப்படாமை எடுத்துக் காட்டாம்.

மலையானால் என்ன ? காடானால் என்ன? வயலானால் என்ன ? கடலானால் என்ன ? நிலத்தின் இயல்பில் என்ன இருக்கிறது? அங்குச் செயல் திறம் மிக்க மக்கள் தோன்றியுள்ளனரா? அந்நிலம் உயர்நிலம் ! உயிர் நிலம் என **ஒளவையார்** பாடினார். அதற்கு எடுத்துக்காட்டென இலங்கியவர் சாமிநாதன்.

சாமிநாதன் சிறப்புக்கு அடிப்படைகள் பலப்பல. அவற்றுள் தலையாயது **உழைப்பு !** அவ்வுழைப்பு ஆக்கவழியில் செல்லாக்கால், ஆக்கும் பயன்தான் என்ன ? "குறிக்கோளிலாது கெட்டேன்" என்பார் **நாவுக்கரசர்.** அக்குறிக்கோள் எத்தகைய சீர்மையது ?

குறிக்கோள் :

குறிக்கோள் கொண்டதே இலக்கியம் ; குறிக்கோள் கொண்டதே இலக்கணமும். 'இலக்கு' என்பதன் பொருளே குறிக்கோள். அக்குறிக்கோட்பணியைக் குறிக்கோள் இல்லாமல் செய்தால் என்னாம் ? அதனினும் மிகுந்த கேடு ஒன்று இருக்க முடியுமா ?

'குறிக்கோள் கட்டாயமானது' என்பதால்தான் நூலுக்குக் 'குறி' என்பது ஒரு பெயர். நூல் இயற்றுதலுக்கும், பயிற்றுதலுக்கும் 'கொடை' என்பது பெயர். அதனைப் பெறுதலுக்குக் கொள்ளுதல், என்பது பெயர். "கொள்வோன் கொள்வகை அறிந்து கொடுத்தல்" என்பதும், "கோடல் மரபு" என்பதும் இலக்கண நூற் கொள்கைகள். இக்கொள்கைகளை இளமையிலேயே அறிந்து தம்பொருள் ஆக்கிக் கொண்டவர் சாமிநாதன். அவர் தம் குறிக்கோளுக்குக் குறிக்கோளாக ஓர் அரிய தூண்டல் அவர் பதிப்பித்த **'தமிழ் விடு தூது'** என்னும் நூலில் கிடைக்கக் கண்டார் ; அதனைக் கிளர்மணி எனக் கொண்டார். அஃது எது?

கொள்கைக் காட்சி :

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் ; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்பதே அது !

இக்கனியைச் சாமிநாதன் கண்டதையும் குறிக்கோளாக் கொண்டதையும் அவர்தம் பதிப்புத்துறையில் உடனாகி இருந்த பெருமகன் திரு. ச. கு. கணபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

(இக்கண்ணி) "அவர்களை நிரம்ப உருக்கிவிட்டது. அவர்கள் பலமுறை அதனை வார்த்தைகளாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வின் இலட்சியமும் அதுவே ; செந்தமிழ் நூலில் ஒரு பாட்டு அதனைக் கூறுமெனின் மனம் உருகாதா ? ஒருவர்க்கு உள்ளூற அமைந்துகிடக்கும் தனி உணர்ச்சியை வேறொருவர் தாமாக எடுத்துக் கூறுகையில் எவ்வளவு கனிவு ஏற்படுகிறது ?

பாட்டிலே—மற்றவர் பாடியதே யாயினும்—நமது அநுபவம் ஒத்திருந்தால் அந்த நொடியிலேயே நாம் நம்மை மறந்து விடுகிறோம் அல்லவா?......",

"ஆகவே அக்கண்ணி நம் ஆசிரியர்பிரான் மனத்தைக் கசிய வைத்தது. பலமுறை அதனைப் படிக்கக் கேட்டார்கள். அக்கருத்தை அவ்வாறே வெளியிட வேண்டும். அதுவே தம்முடைய கருத்தென்று தமிழுலகம் அறியவேண்டும் என்னும் மீதூர்ந்த அவா அவர்கள்பால் எழ, அது,

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்—திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்"

என்ற வெண்பாவாக முகிழ்த்தது." [1]

---

1. டாக்டர் உ. வே. சா. சதாபிஷேக மலர் பக். 128, 129

ஆட்படுத்துதல் :

'தக்கது இன்னதே' என ஒன்றை உறுதி கொண்டிருக்கிறோம். அதனை உள்ளும் புறமுமாக ஒத்தநிலையில் உறுதிப் படுத்திக் கொண்டிருக்கிறோம். நம் படிப்பறிவும் பட்டறிவும் அம் முடிவே முடிவென முழுமையாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றன. அம்முடிவே ஒரு பெரும் புலமைச் சான்றோர் முடிவாக இருத்தலை எதிர்பாரா நிலையில்-எதிர்பாரா வகையில்-காண்கிறோம். நம் வியப்புக்கு எல்லை இருக்குமா? நம் மகிழ்வுக்குக் கரைதான் இருக்குமா? அவ்வேளையில் உடல் விதிர் விதிர்க்கவும் மெய்ம்மயிர் பொடிக்கவும் பூரிக்கவும் ஆன நிலைக்கு ஆளாகிறோம் அல்லவா? அவ்வாறே, தமிழ் விடு தூதின் 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' என்னும் கண்ணி சாமிநாதனைத் தன் வயப்படுத்தி மீளா அடிமைக்கு ஆட் படுத்தி நின்றதாம்.

ஒரு சிறு பொழுதுக்கு ஏற்படும் இன்பமே, நம்மைப் போற்ற வைக்கிறது. ஒரு வேளை உணவும், உவகைப் படுத்துகிறது. சிறிதளவே பெறும் செல்வமும், பாராட்ட வைக்கிறது. தினைத்தனைத் தேனும் தித்திக்க வைக்கிறது. ஆனால், என்றும் நினைக்குந்தொறும், கேட்குந்தொறும், படிக்குந்தொறும் அனைத்து எலும்பும் உள்நெக ஊற்றெடுத்து இன்பஞ் சேர்க்க வல்ல அழியா அமுதப்பெருக்கு, திருவருட்பேற்றால் கிடைக்கப் பெறுமானால் அவ் இன்பப் பேற்றை ''நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து'' அமைவதையன்றி வேறென்ன செய்ய முடியும்?

இவ்வகையில் தமிழ்விடுதூது, சாமிநாதனுக்கு வாழ்வு நோக்கை வனப்புறக் காட்டியது. வழிமுறையைக் கண்முன் கூட்டியது. கொண்டிருந்த உறுதியைக் குறைவற நிலை பெறுத்த ஏவியது; **சாமிநாதன் தமிழானார்; தமிழ் அவராயிற்று!**

தமிழ்க் கோயில் :

தமிழாயினார் காட்சி, எப்படி இருக்கும்? கேள்வி எப்படி இருக்கும்? நினைவு எப்படியிருக்கும்? எல்லாம் தமிழ்; எதிலும் தமிழ்; ஊனும் தமிழ்; -என்றே இருக்கும்; வணங்கும் தெய்வமும் தமிழ்; செய்யும் வழிபாடும் தமிழ் என்றே ஆகியிருக்கும்;

அவ்வாறு ஆனவர் தமிழ்க் காட்சி, நோக்குமிடமெல்லாம் நீக்கமறத் தமிழ்த் தெய்வக் காட்சியாகவே திகழும் அல்லவோ;

இதோ; அக்காட்சிகள் இரண்டனைச் சுவடிக்கலை வடித்துக் காட்டுகின்றது.

ஏடுகளைத் தொகுத்தலும் ஆராய்தலும் பதிப்பித்தலுமே தவ வாழ்வாகக் கொண்டவர் பெரும் பேராசிரியர் தென்மொழிச் செல்வர் அறிஞர் உ. வே. சா. ஆவர். தாம் வாழ்ந்த இல்லத்தைத் தமிழ்க் கோயில் ஆக்கிய பெருந்தகை அவர். தாம் கண்டு களிகூர்ந்து கனிந்துருகி வழிபட்ட தமிழ்க்கோயில்களை **என்சரித்திரத்தில்** இயம்புகிறார்.

''திருநெல்வேலி மேலை வீதியில் உள்ள **கவிராஜ ஈசுவர மூர்த்திப்பிள்ளை** வீட்டில் புத்தக அறை இருந்தது. அது தான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந் தார்களோ? என்று விம்மித மடைந்தேன். ஏட்டுச்சுவடிகளை அடுக்கடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடி களைக் கட்டிவைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடு ஒன்று கலக்கவில்லை. **தமிழ்த் தெய்வத்தின் கோயிலென்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்.''**

பத்துப் பாட்டுச் சுவடிகளைத் தேடிக்கொண்டு உ. வே. சா. அலைந்த காலம் அது. அச் சுவடி அங்கேயும் முழுமையாகக் கிடைக்கவில்லை. 'இனி வேறு எங்கே கிடைக்கப்போகிறது' என்று துயருற்றார். ''சங்கப் புலவருடைய வீட்டைப்போல விளங்கும் இவ்விடத்தில் தமிழ்ச் செல்வம் முழுவதும் கிடைக்கும் என்று முதலில் எண்ணினேன். நான் எதைத்தேடி வந்தேனோ அது முற்றும் கிடைக்கவில்லையே; தமிழுலகத்தில் இந்தத் **தமிழாலயத்தைக்** காட்டிலும் சிறந்த இடம் எங்கே இருக்கப் போகிறது; இங்கே அகப்படாதது வேறு எங்கே அகப்படும். சங்கத்துச் சான்றோர் இயற்றிய நூல்களைத் தமிழுலகம் இப்படி

ஆதரவின்றிப் போக்கிவிட்டதே'' என்று வருத்தத்தோடு டாக்டர் உ. வே. சா. கூறினார்.

மிதிலைப்பட்டி என்றவுடன் தமிழாராய்ச்சியாளர்களுக்கு அழகிய சிற்றம்பலக் கவிராயர் நினைவே உண்டாகும். அப்புலவர் பெருமகனார் வீட்டுக்கு உ. வே. சா. ஏடுதேடிச் சென்றார். அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீட்டிலுள்ள ஏட்டுச் சுவடிகளைக் கண்டார். அவர் வீடு தமிழ்மகள் ஆலயமாகத் தோன்றியது கண்டு விம்மிதம் அடைந்தார்.

ஏடுகளைத் தொகுத்துப் பாதுகாத்த புலவர் பெருமக்கள் இல்லங்களே தமிழ்க் கோயில்கள் என்பது தமிழ்த் தாத்தாவின் தேர்ச்சியுரை. அத்தமிழ்க் கோயில் தொண்டர்களாக விளங்கிய புலவர் பெருமக்களே தமிழ் ஆழ்வார்கள்; தமிழ்நாயன்மார்கள்; தமிழ்ப்பிக்குகள்; தமிழ்த்தீர்த்தங்கரர்கள்; தமிழ் அடியார்கள்; அவர்கள் அடிப்பொடி எம்முடிமேலன எனக் கொண்டுஎழுப்பப் பெறும் தமிழ்க்கோயில் இச்சுவடிக்கலை[2]. தமிழ் வாழ்வாகிய உ. வே. சா. தம் உறைவிடத்தைத் தமிழ்க் கோயிலாக்கிக் கொண்ட காட்சியை உள்ளங்கைக் கனியாய் உரைப்பவை மேற்கூறிய சான்றுகளாம்.

தமிழ்வாழ்வு :

'ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலர் ஊனுடம்பும் அதன் உயிரும், அதன் உணர்வும் தமிழாகிவிட்ட ஒருவர் உறைவிடமும் தமிழே-தமிழ்க்கோயிலே-என்பதில் ஐயமென்ன இருக்க முடியும்? அத்தமிழ்க் கோயில் வழிபாடும், தமிழின்பமும் தமிழ் மணமுமாக அல்லாமல் வேறு எவ்வாறு இருக்க முடியும்? ஆதலால் உ. வே. சா. வாழ்வு தமிழ்வாழ்வு என்போம்.

---

2. சுவடிக்கலை. இரா. இளங்குமரன், அரிமாப் பதிப்பகம், சேலம்-3. பக்கம் 2, 3.

2. தமிழ்க் காதலர்

அன்னையையும் தந்தையையும் ஆசிரியரையும் இறையெனப் போற்றியவர் உ. வே சா. தாமே கல்வி கற்பித்தும், பிறரிடம் கல்வி கற்க உதவியும் நலம் செய்த தந்தையை, இறைவனாகக் கண்ட உயர்ந்த ஒழுக்கத்தினர் உ. வே. சா. கல்வியே உறுதிப் பொருள் என்னும் துணிவைக் குழந்தைப் பருவத்திலேயே கொண்டிருந்தார் சாமிநாதன். உண்மையான கல்வி உற்ற துணையாகும் என்று இளமனத்திலே குடிகொள்ள வழி அமைத்த அந்தத் தந்தை, பின்னர் சிந்தித்துச் செயல்படவும் பெரிதும் துணை நின்றார். தந்தையின் வாழ்க்கையைச் சிந்தித்தும், அவர் கற்பித்தவற்றைச் சிந்தித்தும் சிந்தனையாளராக மாறினார் சாமிநாதன். தமிழ் இலக்கிய நூல்களோ மேலும் தொடர்ந்து சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தன. நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கிய பின் அவர் சிந்தனை சிறகடித்துப் பறந்து சிறந்தது.

தந்தைசொல் :

'எப்போதும் சிவபக்தி பண்ணிக் கொண்டிரு' என்று அறிவுறுத்தினார் சாமிநாதனின் அன்புத் தந்தை. அறிவுறுத்துவது எளிது. அதன்படி நடப்பதே அருமை. வழிகாட்டியாக எவரேனும் வாய்ப்பின் பின்பற்றுதல் எளிமையாகும். தந்தையே ஆசிரியராக இருந்து நடந்துகாட்டியமை பசுமரத்தாணியெனப் பதிவாயிற்று. அவர்தம் ஒழுக்கமும், சிவபூசையும், எளிமையும், இசைத்திறமையும் அவரைத் தெய்வமாக எண்ணும்படி செய்தன.

சாமிநாதனின் தந்தைக்கு அவருடைய பாட்டனார் வடமொழியையும், ⊛ தமிழையும் கற்பித்தார். பாட்டியோ இசையைக் கற்பித்தார். இசையும், மொழிப்புலமையும் அவருக்கு ஆர்வம் ஊட்டுவனவாக இருந்தன. அந்த ஆர்வத்தை அப்படியே மகனிடம் தோன்றச் செய்தார்.

⊛ சமற்கிருதம் என்னும் வடமொழியை இவ்வாறழைக்க வேண்டுமென்பது ஆசிரியர் கருத்து.

இளமைக்கல்வி :

ஐந்தாம் வயதில் படிக்கத் தொடங்கினார் சாமிநாதன். அவருடைய பாட்டனாரே அரிச்சுவடி சொல்லித்தந்தார். பின்னர் ஆசிரியர் நாராயணர், அரிச்சுவடியோடு எண்சுவடியையும் கற்பித்தார். அடுத்துச் 'சாமிநாதன்' என்னும் ஆசிரியரிடம் படிக்கத் தொடங்கினார். தமிழ், வடமொழி, இசை மூன்றும் அறிந்தவர் அவர். கணக்கையும் கற்பித்தார். காகிதம் அறிமுகம் ஆகாத காலம் அது. ஆதலால் சாமிநாதன் மணலில் எழுதிப்பழகினார். பின்பு எழுத்தாணியால் ஓலைச்சுவடியில் எழுதக்கற்றுக் கொண்டார்.

ஆறாம் வயதில் சிறிய தந்தை சரளி வரிசையைச் சொல்லித்தர இசையிலும் ஈடுபாடு காட்டிக் கற்கத் தொடங்கினார். சித்திரம் எழுதுவதிலும் இயற்கையாகவே ஓர் ஈடுபாடு அவருக்கு இருந்திருக்கிறது. சாமிநாத ஆசிரியரே தம்மைத் தேடி வந்த உறவினரான சிவசாமியிடம் ஆங்கில எழுத்துக்களை உ. வே. சாமிநாதனுக்குக் கற்பிக்கும்படி கூறினார்.[1] அதனால் ஆங்கில எழுத்துக்களையும், எண்களையும் கற்றுக் கொண்டார். அந்நாளில் கிராமங்களில், ஆங்கிலப் படிப்பு அறிமுகமாகவில்லை. நகரங்களிலும் சில பள்ளிக்கூடங்களில் தாம் ஆங்கிலம் கற்றுத் தந்தார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு அளவற்ற மதிப்பு இருந்தது. அரைகுறையாக ஆங்கிலம் தெரிந்தவர்களுக்குக் கூட எளிதல் ஏதேனும் வேலை கிடைத்துவிடும் காலம் அது.

பாட்டி, பாட்டனார் மறைவுக்குப்பின் சாமிநாதன் குடும்பத்தினர் அரியலூரில் குடியேறினர். அங்கே கிருஷ்ண வாத்தியாரிடம் முதலில் படித்தார். தெருவில் இருக்கும் பிள்ளையார் கோயிலில் பள்ளிக்கூடம் நடந்தது. கிருஷ்ண வாத்தியார் முதியவர். தமிழ் இலக்கியங்களில் நல்ல பழக்கமுடையவர். ஆத்தி சூடி, மூதுரை, மணவாள நாராயண சதகம் முதலிய சதகங்கள், இரத்தின சபாபதி மாலை, நாலடியார், திருக்குறள் முதலியவற்றையும் கணக்கையும் கற்றார் உ. வே. சா. திருக்குறளையும், நாலடியாரையும் மனப்பாடம் செய்யும்படி வற்புறுத்தினார் ஆசிரியர்.

---

1. என் சரித்திரம். பக். 62

பல்வகைக் கல்வி :

தம்மைப் போலவே இசையில் பயிற்சியுடையவராக உ. வே. சா. விளங்க வேண்டும் என அவர் தந்தை விரும்பினார். அக்காலத்தில் இசை வல்லுநர்கள் தமிழ், வடமொழி, தெலுங்குக் கீர்த்தனங்களைப் பாடி வந்தனர். இசைப் பயிற்சிக்குத் தெலுங்கு துணையாக இருக்குமென்ற எண்ணத்தில் அவருடைய தந்தையார் கிருஷ்ண வாத்தியார் பள்ளிக்கூடத்திலிருந்து முத்து வேலாயுத பண்டாரமெனும் வீர சைவரிடம் சேர்த்தார். தெலுங்கு மொழியை அவர் கற்பித்தார். அவரிடம் கணிதம், வேமன்ன சதகம், இராமதாச சதகம் என்னும் நூல்களையும் கற்றார் உ. வே. சா. இங்ஙனம், வடமொழி, இசை, சித்திரம், தெலுங்கு, கணிதம் எனப் பல வகையில் சாமிநாதனுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

தம் குடும்பப் பின்னணியோ வடமொழியிலும், இசையிலும் சிறப்புற்றிருந்ததைக் காட்டும். இதனால் எல்லாத்துறைகளும் அவரால் கற்றுக்கொள்ள முடிந்தவையாக இருந்தன.

இருந்தும் தமிழில் உ. வே. சா ஆர்வம் கொண்டமை சிந்திக்கத் தக்கது. குடும்பப் பின்னணியும் தந்தையின் எண்ணமும் அவரை வடமொழிப் புலவராகவோ, இசை ஞானியாகவோ மாற்றியிருக்க வேண்டும் ; மாறாகத் தமிழின்மேல் தணியாத ஆர்வம் கொண்டவரானார்.

இசையிலும், தமிழிலும் அவரது மனம் சென்றமை போலத் தெலுங்கிற் செல்லவில்லை. அதனால் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் தாமே சதகங்களையும், வேறு நூல்களையும் கற்பிக்கத் தொடங்கினார் தந்தை. இசையிலும் சரளி வரிசை, அலங்காரம் முதலியவற்றைக் கற்பிக்கத் தொடங்கினார். தெலுங்கும் வடமொழியும் அவரைவிட்டுப் பிரிந்து நெடுந்தூரம் சென்றுவிட்டன என்றே குறித்துள்ளார்.[2]

சடகோபர் :

அரியலூரிலிருந்த சடகோபரிடம் கல்வி கற்க அனுமதித்தார் தந்தை. சடகோபரிடம் அனுப்பியமைக்குக் காரணம் இசையில்

(2) அது, பக். 69

சாமிநாதனுக்குத் தேர்ச்சி உண்டாகவேண்டும் என்பதுவேயாம். ஆனால் உ. வே. சா. தமக்குத் தமிழில் நல்ல தேர்ச்சியும் அதற்கு இசை துணையுமாக இருக்கவேண்டும் என்று விரும்பினார்; இசையைத் தமிழார்வம் வெற்றி கொண்டுவிட்டது.

தமிழில் ஆர்வம் உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற்குரு சடகோபரே என்று அத்தமிழ் விதைவிதைத்தவரைப் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார் உ. வே. சா. பொம்மையைக் காட்டிக் குழந்தைகளைக் கவர்வதுபோலத் தமிழ்ச் செய்யுட்களின் நலத்தைக்காட்டித் தம் உள்ளத்துள் இளம்பருவத்தில் ஆர்வம் ஊட்டியவர் என்பதனை நன்றியோடு உரைத்துள்ளார்.[3]

சடகோபருக்குப் பாடஞ்சொல்வதிலே சலிப்பேற்பட்டதில்லை. ''கம்பத்தை வைத்துக்கொண்டாவது பாடஞ்சொல்ல வேண்டும். கேட்பவனை மாத்திரம் உத்தேசித்துச் சொல்லக் கூடாது. பாடஞ்சொல்வதனால் உண்டாகும் முதல் லாபம் நம்முடையது. பாடம் சொல்லச் சொல்ல நம் அறிவு உரம் பெறும்'' என்பாராம் சடகோபர்.[4]

பாடம் கேட்பதால் உண்டான ஆர்வத்தைச் சடகோபரே பாடம் கற்பிப்பதால் பெருகும் என்று வழிகாட்டியதால் உ. வே. சாமிநாதனும் தமிழ்நூல்களை மேலும் மேலும் கற்கவும் முனைந்தார். கற்பிக்காதபோது எழுத முனைந்தார். பதிப்பித்து வெளியிடும் ஆர்வம் உருப்பெற்றது. சடகோபரிடம் சிற்றிலக்கிய நூல்களாகிய சதகம், மாலை போன்றவற்றைப் பாடங்கேட்டார்.

ஊர்மாற்றம் :

வறுமையின் காரணமாக மீண்டும் ஊர்மாற நேர்ந்தது. குன்னம் சென்றார். சிதம்பரம் என்ற ஒருவர் நட்பு தந்தைக்குக் கிடைத்தது. சாமிநாதனுக்குச் சிதம்பரம் ஆசிரியராக மாறிச் சிற்றிலக்கியங்களையும், திருவிளையாடற் புராணத்தையும் கற்பித்தார். தமிழ் ஆர்வத்திற்கு ஊர்மாற்றம் தடையாக இல்லை. குன்னத்தில் தமிழறிவில் மிக்கோர் பலர் இருந்த

---

3. அது, பக். 71
4. அது, பக். 74

மையும், அங்குப் புலமையாளர் பலர் வந்துபோனமையும் சாமிநாதனின் தமிழ் ஆர்வத்தை வளர்த்த வண்ணமிருந்தன.

குன்னத்திற்கு ஒருமுறை வந்த கஸ்தூரி என்பவர் சாமிநாதனிடம் உரையாடி, அவரது தமிழ்நிலையையும் அறிந்து கொண்டார். தம்மூரான கார்குடிக்கு வந்தால் சாமிநாதனுக்கு வசதி செய்து தந்து தமிழ் கற்பிப்பதாகக்கூறினார். தந்தையும் அவரது ஆர்வத்திற்குத் தடையாக இருக்கவில்லை. கார்குடியில் கல்வி கற்பதோடு செய்யுட்கள் இயற்றும் திறமையும் வளர்த்துக் கொண்டார். கார்குடியிலிருந்து, களத்தூர் போன பின்பு தமிழ் நூல்களைத் தக்கவரிடம் கற்றுக் கொள்ளத் தேடினார். ஆர்வம் மேலும் மேலும் பெருக்கெடுத்ததால் ஆசிரியர் பலரை அவர் மனம் தேடலாயிற்று. பதினாறு வயதானதால் மணமும் நடந்தேறியது. தலை தீபாவளிக்கு உத்தமதானபுரம் வந்தார்.

அளப்பருந் தமிழ்க்காதல் :

புது மனைவியோடும் பிறந்த மண்ணோடும் மகிழ வேண்டிய அந்நிலையிலும், தமிழ் ஆர்வம் பெருகிப் பாடம்கேட்கவே அவரைச் செலுத்தியது. அருகிலுள்ள பாபநாசத்தில் இராகவன் என்பவரிடம் பாடம் கேட்கப் போனார். அவர் கற்பிக்கும் போதே தம் குருவாகிய தியாகராசரையும், மீனாட்சி சுந்தரம் அவர்களையும் பெருமையாக அடிக்கடிப் புகழ்ந்தார். ஏழை ஆசிரியருக்கு ஏதும் தரமுடியாத வறுமை நிலை சாமிநாதனுக்கு இருந்தமையால் இராகவனிடம் பாடம் கேட்பதை நிறுத்திக் கொண்டார். ஆனால் தமிழ் ஆர்வம் குறைந்திலது.

இந்நிலையில் கும்பகோணம் சென்ற தந்தையையும் மகனையும் வழக்குரைஞர் வேங்கடராவ் பார்த்தார். தியாகராசரிடம் தமிழ் படிப்பதைவிட ஆங்கிலத்தை எவரிடமாவது படிக்கட்டும். குடும்பத்திற்கு அதனால் வருவாயும் சாமிநாதனுக்கு வேலையும் கிட்டும் என்றார். தந்தை அவரது ஆர்வத்தைக் காட்டி வேங்கடராவிடம் இருந்து விடை பெற்றார். தமிழ் ஆர்வத்திற்குத் தடைகள் இப்படிக் காரண காரியத்தோடு வந்தன. ஆயினும் தம் கொள்கையில் விடாப்பிடியாக இருந்தார் சாமிநாதன். மீனாட்சி சுந்தரத்தின் பெருமையைப் பலர் உரைத்தது அவரை எழுச்சி கொள்ள வைத்தது.

செங்கணம் விருத்தாசலம் என்பவர் சாமிநாதனின் மொத்த உறுப்பினர்களடங்கிய குடும்பத்தைப் பாதுகாத்துச் சாமிநாதனுக்குத் தமிழையும் கற்பித்தார். ''மீனாட்சி சுந்தரனாரே சாமிநாதனுக்கு ஏற்ற குரு'' என்று கூறி அவரிடம் அனுப்பியும் வைத்தார். அந்த மகாவித்துவானைச் சந்திக்க இருந்தபோது முன் நிகழ்ச்சிகளையெல்லாம் நினைத்துப் பார்த்தார் உ. வே. சா

திருவருள்:

''ஒரு நல்ல காரியத்திற்கு எத்தனைத் தடைகள் உண்டாகின்றன. நான் தமிழ் படிக்க வேண்டுமென்று தொடங்கிய முயற்சி வறுமையாலும், வேறு காரணங்களாலும் தடைப்பட்டுத் தடைப்பட்டுச் சோர்வடைந்தது. ஆனாலும் அப்படியே நின்றுவிடவில்லை. பந்துக்களில் பலர் நான் சமஸ்கிருதம் படிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். இராமாயண பாரத பாகவத காலக்ஷேபம் செய்து சமஸ்கிருத வித்துவானாக விளங்க வேண்டுமென்பது அவர்கள் கருத்து.''

''வேறு சில கனவான்களோ நான் இங்கிலிஷ் படித்து விருத்திக்கு வரவேண்டுமென்று எண்ணினார்கள். உதவி செய்வதாகவும் முன் வந்தனர். நான் உத்தியோகம் பார்த்துப் பொருளீட்ட வேண்டுமென்பது அவர்கள் நினைவு. என் தந்தையாரோ சங்கீதத்தில் நான் வல்லவனாக வேண்டுமென்று விரும்பினார். அவர் விருப்பம் முற்றிலும் நிறைவேறவில்லை; எல்லோருடைய விருப்பத்திற்கும் மாறாக என் உள்ளம் இளமையிலிருந்தே தமிழ்த் தெய்வத்தின் அழகிலே பதிந்துவிட்டது.''

''மேலும் மேலும் தமிழ்த் தாயின் திருவருளைப் பெறவேண்டுமென்று அவாவி நின்றது. சமஸ்கிருதம், தெலுங்கு, இங்கிலிஷ் இவற்றுள் ஒன்றேனும் என் மனத்தைக் கவரவில்லை. சில சமயங்களில் அவற்றில் வெறுப்பைக்கூட அடைந்தேன். சங்கீதம் பரம்பரையோடு சம்பந்தமுடையதாகவும் என் தந்தையாரது புகழுக்கும் ஜீவனத்துக்கும் காரணமாகவும் இருந்தமையால் அதன்பால் எனக்கு அன்பு இருந்தது. ஆனால் அந்த அன்பு நிலையாக இல்லை.

''என் உள்ளத்தின் சிகரத்தைத் தமிழே பற்றிக்கொண்டது; அதன் ஒரு மூலையில் சங்கீதம் இருந்தது. எந்தச் சமயத்தி

லும் அந்தச்சிறிய இடத்தையும் அதனிடமிருந்து கவர்ந்து கொள்ளத் தமிழ் காத்திருந்தது''.

''மற்ற யாவருமே வேறு வேறு துறையில் என்னைச் செலுத்த எண்ணியபோது என் எண்ணம் நிறைவேறுவது எவ்வளவு கஷ்டமானது. திருவருளின் துணையால் அது நிறைவேறும் நிலைமையில் இருந்தது''[5] என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் அவர்களைக் காணக் காத்திருந்தபோது சிந்தித்ததாக எழுதியுள்ளார். இயற்கைத் தடைகளையும் செயற்கைத் தடைகளையும் தகர்க்க இறைவன் அருளோடு சாமிநானுக்கும் ஆர்வம் இருந்தமையே இச்சிந்தனை காட்டுகிறது.

பசி தீர்த்த வள்ளல் :

இடர்ப்பாடுகளைக் கடந்து மகாவித்துவானை அடைந்த பிறகு மகிழ்வோடு உ. வே. சா. இருந்தாரா என்னும் வினாவுக்கு அவரே விடை எழுதியுள்ளார்.

''எனக்கிருந்த தமிழ்ப்பசி மிக அதிகம். மற்ற இடங்களில் நான் பாடம் கேட்டபோது அவர்கள் கற்பித்த பாடம் யானைப் பசிக்குச் சோளப் பொரி போல இருந்தது''.

''பிள்ளையவர்களிடம் வந்தேன் ; என்ன ஆச்சரியம் ! எனக்குப் பெரிய விருந்து, தமிழ் விருந்து கிடைத்தது. என் பசிக்கு ஏற்ற உணவு ; சில சமயங்களில் அதற்கு மிஞ்சிக்கூடக் கிடைக்கும். அமிர்த கவிராயரிடம் திருவரங்கத்தந்தாதியில் ஒரு செய்யுளைக் கேட்பதற்குள் அவர் எவ்வளவோ பாடு படுத்திவிட்டாரே ! அதற்கு மேல் சொல்லுவதற்கு மனம் வராமல் அவர் ஓடிவிட்டாரே ! அந்த அனுபவத்தோடு இங்கே பெற்ற இன்பத்தை ஒப்பிட்டுப் பார்த்தேன்''.

'' அடேயப்பா ! என்ன வித்தியாசம் ! தெரியாமலா அவ்வளவுபேரும் சொன்னார்கள் ?'' என்று எண்ணினேன்.

'இனி நமக்குத் தமிழ்ப்பஞ்சம் இல்லை; என்ற முடிவிற்கு வந்தேன்''[6] என்பது அப்பகுதியாகும்.

---

5. அது, பக். 156-157.
6. அது, பக். 188

தமிழின் மீது கொண்ட அளவற்ற ஆர்வமே இங்ஙனம் சொல்ல வைத்தது.

ஓர் ஆசிரியரின் குறையைச் சுட்டியதுகூட மகா வித்துவானின் நிறையைக் காட்டவே என்று கொள்ள வேண்டும்.

தளிரால் தளிர்த்த தமிழ் :

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்களே தமக்குப் பாடம் சொல்ல வேண்டும் என்று கருதினார் சாமிநாதன். அதற்கு என்னவெல்லாம் செய்யலாம் என்று சிந்தித்தார். அதற்கு அவ்வாசிரியரை ஆராய்ந்தார். நாள்தோறும் அவர் செய்யும் வேலைகளைக் கண்டார். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் தம் வீட்டுத் தோட்டத்துச் செடிகளை ஆசிரியர் பார்வையிடுகிறார். அவற்றில் ஏதேனும் பட்டுப் போயிருக்கின்றதா எனப் பார்ப்பார். தளிர்த்திருக்கின்ற புதியதையும் பார்ப்பார்; நீர்வார்ப்பார். இவற்றை யெல்லாம் சிந்தித்துத் தாமே முதலில் எழுந்து எல்லாவற்றையும் கவனித்து வைத்தார் சாமிநாதன். ஆசிரியர் வந்தவுடன் தளிர்களை யெல்லாம் அடுத்தடுத்துக் காட்டினார். ஆசிரியர் மன மகிழ்ந்தார். அன்பும் தளிர்த்தது. தாமே பாடம் சொல்ல லானார். தளிரால் தளிர்த்த தமிழ் அன்பு, பின்னே தனிமணம் பரப்பலாயிற்று.

திருக்குடந்தை திரிபந்தாதி :

எதனையும் முன்கூட்டிச் சித்தித்து வைப்பது சாமிநாதனுக்கு வழக்கமாக இருந்தது. இதனைக் கற்கத் தொடங்கியபோது முறையாகத் தெரிந்து கொண்டார் என்பதனை மேற்கூறிய தளிர் ஆராய்ச்சி நமக்கு காட்டும். அவ்வாறே அவர் ஆசிரியர் பாடம் சொன்ன முறைகளையும் சிந்தித்துப் பார்த்துச் செயல் படுத்தினார். மீனாட்சி சுந்தரம் அவர்கள் 'திருக்குடந்தைத் திரிபந்தாதி' என்னும் நூலையே முதலில் பாடம் சொன்னார். இந்நூலை எழுதியவரும் அவரே. ஒரு நூலை இயற்றிய ஆசிரியரிடமே அதனைப் பாடம் கேட்பது சிறப்பானது. எதற்காக எப்படியெல்லாம் எழுதினார் என்பது வெளிப் பட்டது. நூலின் செய்திகளோடு நூலுக்குப் புறம்பாக உள்ள பிற அனுபவச் செய்திகளும் நிரம்பவே வெளிப்பட்டன. இந்

நூலுக்குப் பிறகு பல அந்தாதிகளைத் தொடர்ந்து ஆசிரியரிடம் பாடங்கேட்டார் சாமிநாதன்.

சாமிநாதன் தம் ஆசிரியரிடம் முதலில் கேட்ட பாடம் சிற்றிலக்கியமே. தம் மாணாக்கர்கட்கும் சாமிநாதன் சிற்றிலக்கிய நூல்களையே பாடஞ்சொன்னார். அவற்றுள்ளும் தாம் தம் ஆசிரியரிடம் பாடங்கேட்டவற்றையே முதலில் கற்பித்தார். அதற்கும் காரணங்கள் இருந்தன. மீனாட்சி சுந்தரம் அவர்கள் நூலைப் பாடங்கேட்டதைச் சிந்தித்தார். தம் காலச் சூழலில் இயற்றப்பட்டு, இயற்றியவரே விளக்கியதால் எளிமையாக மனதில் பதிந்தது. மாணாக்கர்கட்கு முதலில் மனத்தில் பதிந்தது. மாணாக்கர்கட்கு முதலில் மனத்தில் பதியும் நூல்கள் தம் காலத்திற்கு அண்மையில் எழுந்த நூல்கள்தாம் எனச் சிந்தித்தார். மேலும் பாடங் கேட்டபோது ஆழமாகப் பதிந்தவை, எடுத்து விளக்கும் போது எளிமையாகவும் சிறப்பாகவும் அமையும் என்பதைச் சிந்தித்து உணர்ந்தே செயல்பட்டார். தம் கால மொழிநடை, சொற்களுக்குள்ள பொருள், அக்காலப் பின்னணி போன்றவை எளிதில் மாணாக்கர்க்கு நூலை விளங்கிக் கொள்ள உதவுகின்றன. இங்ஙனம் கற்ற நூல்களைப் பற்றிய சிந்தனையோடு கற்பிக்கும் முறைபற்றிய சிந்தனையையும் கொண்டிருந்தார் சாமிநாதன்.

நூல் வரிசை :

கற்பிக்கும் பாடநூல் வரிசையையும் சிந்தித்துப் பார்த்தவர் சாமிநாதன். அந்தாதிகட்குப் பின் அவருடைய ஆசிரியர் மீனாட்சி சுந்தரன், பிள்ளைத்தமிழ் நூல்களைக் கற்பித்தார்; அடுத்துக் கோவை நூல்களைக் கற்பித்தார். பாடஞ்சொல்லுகின்றபோது நூலேதும் கையில் கொள்ளாமலே பாடம் நடத்தினார் ஆசிரியர். அவ்வளவு நூல்களையும் பாடஞ்செய்து வைத்திருந்தமையை நினைவிலிருத்தினார் சாமிநாதன். தாமும் பாடஞ்சொல்லும் முறையை ஆசிரியரின் வரிசைப் பாட்டிலேயே கொண்டார். நிரம்பவே பாடமும் செய்தார். இவை சிற்றிலக்கிய நூல்களையும் பிறநூல்களையும் குறிப்பெழுதிப் பதிப்பிக்கும் போது பெருந்துணையாக அமைந்தன. தம் ஆசிரியரிடம் பெருமளவில் சிற்றிலக்கிய நூல்களையே கற்றார் என்பதையும் இவற்றின் வழி நம்மால் உணர முடிகின்றது.

இசைப் பயிற்சியைவிடுதல் :

இசையையும் தமிழையும் வளர்த்துக் கொள்ளும் நிலைமையில் இருந்தும் அறவே மாற வேண்டிய சூழலும்உ. வே. சா.வுக்கு நேர்ந்தது. தம் ஆசிரியர் குறிப்பின் படியே தம் குடும்பச் சொத்தான இசையையும் விட்டுக் கொடுக்க முடிவெடுத்தார்.

கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் சாமிநாதன் இசைப் பயிற்சி செய்து வந்தார். இதனை முதலில் மகாவித்துவானுக்குத் தெரிவிக்கவில்லை. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரமும் பாரதியும் பழகுகிறவர்கள். பாரதியார் சிவபக்தர் என்பதனால் மகாவித்துவான் அவர்மேல் மதிப்பு வைத்திருந்தார். தமிழறிவு போதிய அளவு பாரதியாரிடம் இல்லையென்பது ஆசிரியரின் எண்ணம். பாரதியார் இயற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் இலக்கணப் பிழைகள் உள்ளன என்ற காரணத்தால் மீனாட்சி சுந்தரம் அச்சரித்திரத்தைப் பாராட்டினாரல்லர். ஆனாலும் அதில் கனிந்து ததும்பும் பக்திச் சுவையில் ஈடுபட்டுச் சிறப்புப் பாயிரம் ஒன்று அளித்துள்ளார். அவர்கள் இருவரும் ஒருமுறை சந்தித்தபோது சாமிநாதனைப் பற்றிய பேச்சு வந்தது. தம்மிடம் அவர் இசைப் பயிற்சி பெறுவதாகப் பாரதியார் பகர்ந்தார். ஆசிரியர் விரைந்து சாமிநாதனிடம் வந்து ''நீர் முடிகொண்டான் பாரதியாரிடம் இசைப்பயிற்சி செய்து வருகிறீராமே'' என்று கேட்டார்.

ஆசிரியரிடம் சொல்லாமல் இசைப்பயிற்சி செய்து வந்தது பிழைதான் என்று நினைத்ததும் அதனைச் சொல்வதறகுச் சாமிநாதன் அஞ்சினார். பாரதியார், 'மீனாட்சி சுந்தரம் இசைக்கு எதிரி' என்று சொல்லியிருந்ததனால், 'நின்ற வரையிலும் நெடுஞ்சுவர்' என்ற எண்ணத்துடன் இசைத் தெய்வத்தை மறைவாக உபாசனை செய்து வந்தாராம். அதனால், பழக்கம் விட்டுப் போகாமல் இருப்பதற்காக அவரிடம் இசை கற்றுக் கொள்ளும்படி என் தகப்பனார் சொன்னார் என்று வாய் குழறிக்கொண்டே சொன்னார்.

இயற்றமிழை மட்டும் தனித்து விரும்பும் அப் புலவர் தலைவர் இதுவரையில் அந்த விஷயம் தெரியாது, இசையில் அதிகப் பழக்கம் வைத்துக் கொண்டால் இலக்கண இலக்கியங்களில் தீவிரமாகப் புத்தி செல்லாது'' என்று சொன்னார்.

மறுநாள் முதலே பாரதியாரிடம் இசைப்பயிற்சிக்காகச் செல்வதை நிறுத்திக் கொண்டார் உ. வே. சா. இது குறித்து அவர் எழுதியுள்ள குறிப்பால் அவரது தமிழார்வம் புலப்படுகிறது. ''இந்நிகழ்ச்சியால் எனக்கு அதிக மனவருத்தம் உண்டாக வில்லை. சங்கீதம் எங்கள் பரம்பரைச் சொத்து. அதற்காக அதிகச் சிரமப்பட வேண்டியதில்லை. தமிழறிவோ கிடைத்தற் கரிய பெரும்பேறாக எனக்கு இருந்தது. ஆதலின் அதற்கு முன்னே வேறு எந்தப் பொருளும் எனக்குப் பெரியதாகவே தோன்றவில்லை'' [7] என்று குறிப்பிட்டுள்ளார்.

இசை கற்பதையும், பிறமொழிகளைக் கற்காமல் விட்டு விட்டதைப் போலவே விட்டுவிட்டார். சாமிநாதன் தமிழ்ப் பேரார்வலர் என்பதற்கு இவற்றைவிடத் தக்க சான்றுகள் இல்லை எனலாம்.

---

7. அது, பக். 192.

3. பதிப்புத் துறை முன்னோடிகள்

டாக்டர் உ. வே. சா. பதிப்புத் துறையில் ஈடுபடுதற்கு முன், அத்துறையில் ஈடுபட்டு அழுந்தி நின்றோர் பலர். அவர்கள் தொண்டு பெருமதிப்பிற்குரியது. அறிவியல் வளர்ச்சியால் அச்சுக்கூடம் ஏற்பட்டமையும் அவர்கள் தொண்டினைப் பெரு நலத்திற்குரியதாக ஆக்கியது எனலாம்.

அச்சுச் சட்டம் :

அச்செழுத்தை, ''எழுதா எழுத்து'' என்றும், ''தீட்டுதவிலா எழுத்து'' என்றும் குறித்தனர். அவ்வெழுத்தால் நூல்கள் வெளிப்பட வாய்ப்பு இருந்தும், அந்நாள் இருந்த **அச்சுச் சட்டம்** தமிழ் நூல்கள் அச்சில் வெளிப்பட இடந்தரவில்லை. அதனைப் பற்றிச் **சுவடிக்கலை சுட்டும்** செய்தி அறியத் தக்கது.

கூட்டன்பர்க்கு என்னும் செருமானியர் (German) கி. பி. 1440இல் அச்சுப் பொறியைக் கண்டுபிடித்தார். அச்சுக்கலை மேற்கு நாடுகளில் செழித்து வளர்ந்தது. ஆயினும் கி. பி. 1556 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறாம் நாளிலேயே போர்த்துக்கீசியக் கப்பல் ஒன்றில் கோவா நகருக்கு அச்சுப் பொறிகளுடன் அச்சடிப்பாளர்களும் வந்து சேர்ந்தனர். (அச்சுக்கலை பக்கம் 142) அம்பலக்காடு, புன்னைக்காயல் முதலிய இடங்களில் அச்சகம் அமைத்தனர். இக்கடமையை மேற்கொண்டவர் ஏசு மத சபையினரே ஆவர். அவர்கள் தம்சமயம் தொடர்பாக முதற்கண் வெளியிட்ட நூல் 'கிறிஸ்தவ வேதப் புத்தகம் (Doctrina Christam) ஆகும். இந்திய மொழிகளில் முதன் முதலாக அச்சில் வெளிவந்த புத்தகம் தமிழ்ப்புத்தகமே. அது கி. பி. 1578 ஆம் ஆண்டில் அச்சிடப் பட்டது. இவ்வாறு அச்சக வாய்ப்பு ஏற்பட்டும் ஏட்டுப்படிகள், அச்சு நூல்கள் ஆவதற்கு உடனடியான வாய்ப்பு ஏற்பட வில்லை. ஏனெனில் அச்சுச்சட்டம் ஒன்று தடையாக இருந்தது;

''ஆள்பவர் தங்களுக்கு வாய்ப்பாகவும், தங்கள் சமயப் பரப்புதலுக்காகவுமே அச்சுப் பொறியைக் கொண்டுவந்து அச்சு எழுத்துக்களைப் படைத்து அச்சடித்தனர். அவ்வச்சகத்தை இந்தியர் அமைப்பதற்கும் நூல்களை வெளியிடுவதற்கும் தடுக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு தடுத்தற்கு அமைக்கப்பட்ட சட்டமே, அச்சுத்தடைச்சட்டமாகும். அச்சட்டம் கி. பி. 1835 ஆம் ஆண்டுவரை இருந்தது. ஆனால், அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே சட்டத்தின் வன்மை சற்று குறைந்து விட்டது. ஆதலால் கி. பி. 1812ஆம் ஆண்டில் திருக்குறள் மூலமும், நாலடியார் மூலமும் ஒருங்கிணைந்த நூலாக வெளிப் பட்டன. அதன் முதற்பக்கத்தில் 'தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில், தஞ்சை நகரம் மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப் பிரகாசத்தினால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம் இ ஆண்டு கஅகஉ 1812' என்றுள்ளது. அதே ஆண்டில் 'Tirukkural on Virtue' என்னும் பெயருடன் 'F. W. Elli's Commentary' இணைந்த முதற் பதிப்பும் வெளிப்பட்டுள்ளது. ''ஏறத்தாழ 250 ஆண்டு களாக இருந்த ஏட்டுச் சுவடிகளையும் காக்க முடியாவண்ணம் செய்துவிட்டது'' 1

அச்சிடும் நிலைமை உருவாகியதும் மிகப்பலர் தாம்விரும்பும் நூல்கள் பலவற்றை அச்சிடுதலில் ஈடுபட்டனர். ஏடுகள் அச்சூர்தி ஏறும் நிலைமை உண்டாயிற்று. அச்சகங்கள் தோன்றினவுடன், பதிப்பகங்களும் உண்டாயின. தமிழ் அறிந்தவர்களும், ஆர்வம் உடையவர்களும் அப்பணியில் ஈடுபட்டனர்.

பதிப்புத் துறை முன்னோடிகள் :

ஓர் அறிஞர் ஒரு துறையில் இறங்கி வழிகாட்டியபின், பிறரும் அத்துறையில் ஈடுபட்டு முன்னை அளவினும் சிறப்பினும் உயர்ந்த பணிகளை மேற்கொள்வது மரபு. முன்னோடிகள் அத்துறையில் செய்த பணி சிறிதளவாகவேகூட இருக்கலாம். எனினும் அப்பணியின் மதிப்பு மிக உயர்ந்ததே. அவ்வகையில் உ. வே. சா. அவர்கட்கு முன்பே பலர் தமிழ் இலக்கிய நூல்களைத் தேடிப் பதிப்பிக்கத் தொடங்கியிருந்தனர்.

1. சுவடிக்கலை பக்கம் 48, 49,

புதுவை நயனப்பன், திருவேங்கடாசலம், கொட்டையூர் சிவக்கொழுந்து, வில்லிவாக்கம் தாண்டவராயன், களத்தூர் வேதகிரி முகவை இராமானுசக் கவிராயர், திருத்தணிகை சரவணப் பெருமாள், ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம், கனகசபை போன்றோர் முன்னோடியராகப் பதிப்புத்துறையில்விளங்கினர்.[2]

உலகப் பொதுமறையாகிய திருக்குறளையும், பாரதத்தை யும், சைவ நூல்களையும், ஆறுமுக நாவலர் பதிப்பித்தார். வித்துவான் தாண்டவராயர் திவாகர நிகண்டையும், பாடநூல்கள் சிலவற்றையும் பதிப்பித்தார். தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்தார் மழவை மகாலிங்கம்.

களத்தூர் வேதகிரி நாலடியார், நைடதம் முதலியவற்றை அச்சிட்டார். திருத்தணிகை விசாகப்பெருமாள் பிரபுலிங்க லீலை, சூடாமணி நிகண்டு முதலியவற்றைப் பதிப்பித்தார். திருக்குற ளுக்குத் தெளிபொருள் எழுதி அச்சிடும் முயற்சியில் ஒரு வளர்ச்சி நிலையையும் அவர் உண்டாக்கினார்.

இராசகோபாலன் இராமாயணத்தை வெளியிட்டார். அவரே நாலடியாரையும் பதிப்பித்தார்[3]. சாமுவேல் தொல்காப்பிய நன்னூல் என்ற பெயரில் தொல்காப்பிய மூலத்தை வெளியிட்டார்.

தாமோதரம் :

சி. வை. தாமோதரம் தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்படும் பொது மரபில் முதல் நிலையைக் கடந்து, அடுத்த நிலையைத் தொடங்கியவர் எனலாம். முதல் இலக்கண நூலான தொல் காப்பிய மூலத்தை மட்டும் ஒருவர் பதிப்பித்தார். மற்றொருவர் எழுத்ததிகாரத்தை மட்டும் உரையுடன் பதிப்பித்தார். தாமோத ரமோ தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய

---

2. பொ. பூலோகசிங்கம் பிள்ளை, பதிப்புப் பேராசிரியர் தாமோதரம்பிள்ளை - தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள், யாழ்ப்பாணம், முதற்பதிப்பு, 1970 ப. 91.

3. வையாபுரிப்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, மேலது ப. 233.

மூன்று பகுதிகளையும் நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தார். சேனாவரையர், பேராசிரியர் ஆகியோர் உரைகளையும் பதிப்பித்திருக்கின்றார்.

வேறு இலக்கண நூல்கள் உள்ளனவா என அவர் தேடினார். ஒரு நூலுக்குத் தொடர்பான, வளர்ச்சியாக உள்ள நூல்களைத் தேடிப் பதிப்பிக்கும் எண்ணத்தைப் பதிப்பாசிரியரிடையே அவரே தோற்றுவித்தார். தொல்காப்பியத்திற்குப் பின் வந்த இலக்கண வளர்ச்சியைக் காட்டும் இறையனார் அகப்பொருள், வீரசோழியம், இலக்கண விளக்கம் போன்ற நூல்களைப் பதிப்பித்தார். எல்லா இலக்கண நூல்களையும் உரையுடனேயே அவர் பதிப்பித்தார்.

இலக்கணநூலுக்குப் பின் சங்க இலக்கியங்களை எவரும் பதிப்பிக்கவில்லை என்றே கூறவேண்டும். முதன்முதலில் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகையைத் தேடும் ஆர்வத்திற்கு வித்திட்டவர் என்றும் அப்பதிப்பைத் தொடங்கி வைத்தவர் என்றும் அவரைக் கூறலாம்.

அதனால் தமிழ்மொழி அமைப்பினையும், சிறப்பினையும், தமிழ் இலக்கிய உயர்வினையும் அறிந்துகொள்ள உதவும் பழைய இலக்கண நூலான தொல்காப்பியம் முழுவதையும் உரையுடன் பதிப்பித்த பெருமை தாமோதரம் அவர்களுக்கே உரியது. பின்னர் சங்க நூல்கள் உ. வே. சா. அவர்களால் நன்கு பதிப்பிக்கப்பட்டு வெளிவர இந்தத் தொல்காப்பியப்பதிப்பே துணைபுரிந்தது என்று அறிஞர் பாராட்டுவர்.[4] தாமோதரம், வேறு சில நூல்களையும் பதிப்பித்துள்ளார். அவை தணிகைப்புராணம், நீதிநெறி விளக்கம் முதலியனவாம்.

முதலில் நூல்களைப் பதிப்பிக்கும்போது ஏட்டுப் பிரதிகளில் உள்ளவற்றை உள்ளபடியே பதிப்பிக்கவேண்டும் என்று எண்ணுவதே இயல்பு. ஏட்டுச்சுவடிகளில் காணும் பிழைகளை அறிந்தும் திருத்தாமலே பதிப்பித்தனர். திருத்துவதால் இடைச்செருகல் நிகழ்ந்ததாகக் குறைகூற வாய்ப்பு ஏற்படும் என அஞ்சினர்.

---

4 ஆ. வேலுப்பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, தற்காலத்தமிழ் முன்னோடிகள், சென்னை, முதற்பதிப்பு 1975 ப. 4.

உண்மை நிலையுடன் வெளிவரவேண்டும் என்பதும், ஆழமான பொருள் ஒருவாறு விளங்காமல் இருக்கக்கூடும் என்பதும் அவர் தம் எண்ணங்களாக இருந்தன. இலக்கிய இலக்கண நூல்களிலே போதிய தெளிவு பெற்றதாக எண்ணிய பிறகே திருத்த முற் பட்டனர்.

ஒருபாடத்தைத் திருத்துவதற்கு முன் அதனை இயற்றிய நூலாசிரியரின் சமயத்தோரையும், பிற நூல் விற்பன்னரையும் கண்டு ஆராய்ந்து அதன் பின்பே திருத்தி வெளியிட்டனர். எங்கெங்கே திருத்தம் பெற்றிருக்கின்றன என்பதனையும் அவர்கள் குறித்துள்ளனர். பாடவேறுபாடு சுட்டும் முயற்சியை இதுவே ஊக்குவித்தது. இத்தகு வளர்ச்சியைத் தாமோதரம் கொண்டுவந்தது, பதிப்பு முயற்சியில் அவரை முன்னோடி என எண்ண வைத்ததாகக் கூறுவர். [5]

பண்டைத் தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றைப் பதிப் பித்து ஆராய்ச்சி உரையோடு வெளியிட்ட உ. வே. சா. அவர்கட்கும் தாமோதரம் அவர்கட்கும் நெருங்கிய தொடர்பும் இருந்திருக்கின்றது. சீவகசிந்தாமணியை உ. வே. சா, பதிப் பிக்கும்போது அவருக்கு ஊக்கமூட்டியிருக்கின்றார். ஏட்டுச் சுவடிகளை அவரிடம் தந்து மகிழ்ந்திருக்கின்றார். அவர்கள் இருவரும் நண்பர்களாக இருந்து பதிப்புக் கலையில் சிறந்த மாற்றம் நிகழ உதவினர் எனலாம்.

பதிப்பாசிரியர் படும் துன்பத்தை உணர்ந்துகொள்ளத் தமக்கு உ. வே. சா. அவர்களும், அவருக்குத் தாமுமே சாட்சி என்று தாமோதரம் கூறியுள்ளார். தாமோதரம் தமிழ் நூல் களைப் பதிப்பிக்க முயன்று பட்ட துன்பங்களை அவர் எழுதிய பதிப்புரைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். உ. வே. சா. 'என் சரித்திரம்' நூலெழுதி விரிவாக விளக்கியுள்ளார்.

நூலாசிரியர் அறிவும், உரையாசிரியர் அறிவும், கற்பிக்கும் ஆசிரியரின் அறிவும் ஏட்டுச் சுவடியை ஆராய்வோருக்கு வேண்டும் என்று கலித்தொகையின் பதிப்புரையில் தாமோதரம் கூறியுள்ளார். உ. வே. சா. பதிப்புத்துறையில் துறைபோகியவர் என்பதனை அவரது பதிப்பு நூல்கள் பறைசாற்றுகின்றன.

5 அது பக். 8

4. ஒரு திருப்பம்

தமிழ் இலக்கியம் எங்கெல்லாம் அறிமுகமாகியிருக்கின்றதோ அங்கெல்லாம் உ. வே. சா. பெயரும் அறிமுகமாகியிருக்கும். மறைந்துபோக இருந்த தமிழ் இலக்கிய நூல்களைத் தேடிக்கண்டுபிடித்துத் தொகுத்துப் பதிப்பித்துப் புத்துயிர் பெறச் செய்தவர் உ. வே. சா. அவரைத் தமிழாராய்ச்சி உலகம் நன்றியோடு என்றும் பாராட்டும்.

ஆய்வுகள் :

உ. வே. சாமிநாதன் பதிப்புப் பணியைப் பலப்பலர் ஆய்ந்துள்ளனர். 'டாக்டர் உ. வே. சா. பதிப்புப்பணி — ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்து நூலாக்கியுள்ளார் **டாக்டர் பூ. சொல்விளங்கும்பெருமாள்**. உ. வே. சா. அவர்களின் சங்க இலக்கியப் பதிப்புகளை மட்டும் ஆய்வுப் பொருளாக அமைத்து அருமையாக அவருடைய சிறப்புகளை வெளிப்படுத்தி நூலாக்கியவர் **டாக்டர் குளோரியா சுந்தரமதி**. காப்பியப் பதிப்புகளை ஆராய்ந்து நூலாக்கியவர் **டாக்டர் இரா. காசிராசன்**. இலக்கணப் பதிப்புகளை வெளியிட்டவர் **டாக்டர் கி. நாச்சிமுத்து**. இறுதி மூன்று நூல்களும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள டாக்டர் உ. வே. சா. அறக்கட்டளையின் சொற்பொழிவுகளாகும். நான்காவது சொற்பொழிவாக என்னுடைய இப்பொழிவு இப்பொழுது நூல்வடிவம் பெறுகின்றது.

முதன் முதற் பதிப்பு :

டாக்டர் உ. வே. சா. தனது இருபத்து மூன்றாவது வயதிலேயே முதல் நூலைப் பதிப்பித்திருக்கின்றார். 1878ஆம் ஆண்டு வெளியிட்ட, கொலு மண்டபம் என்னும் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு' என்பது அந்த நூலின் பெயராகும்.

திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் இயற்றிய பாடல்களையும் பல வித்துவான்களின் பாடல்களையும் திருவாவடு

துறை குமாரசுவாமித் தம்பிரான் இயற்றிய தோத்திரச் செய்யுட்களையும் நீதிபதி வேதநாயகம், தேசிகரைப் பாராட்டிப் பாடிய பாடல்களையும் கொண்டது அந்நூல். வேணுவனலிங்கத் தம்பிரானின் வரலாற்றுச் சுருக்கமும் அந்நூலில் உள்ளது. பதிப்பில் நேர்ந்த பிழைகளின் திருத்தமும் சேர்த்து முப்பத்திரண்டு பக்கங்கள் கொண்டதாக ஆயிற்று அந்நூல். உ. வே. சா. அவர்களின் நூற்பதிப்பிற்கு வித்திட்டது இந்நூல் எனலாம்.

பிறபதிப்புக்கள் :

தம் குருநாதர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் இயற்றிய திருக்குடந்தைப் புராணத்தை இரண்டாவதாகப் பதிப்பித்தார். இருபத்தெட்டாவது வயதில் இந்நூல் வெளிவந்தது. இந்நூலிலும் மூலம் மட்டுமே அச்சானது. இதனை வடல்மொழியிலிருந்து ஆசிரியர் மொழி பெயர்த்திருந்தார். அதனால் உ. வே. சா. முதன்முதலில் ஒப்புநோக்கிப் பார்த்தார். சில இடங்களில் திருத்தவேண்டி வந்தது. தம் ஆசிரியருடைய நூலாக இருந்தமையால் அவருக்குக் குறை உண்டாகாதபடி திருத்தி 1883 இல் பதிப்பித்தார். 6

இந்த இரண்டாம் நூலுக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து மூன்றாம் நூலைப் பதிப்பித்தார். இந்த நூலாலும் ஒரு மாற்றம் உ. வே. சா. அவர்கட்கு நேர்ந்தது. திருவிடைமருதூர் விசாரணைக் கருத்தராகிய சுப்பிரமணியத் தம்பிரான், தல புராணங்களைப் படித்துப் பொருள் தெரிந்து கொள்பவர் அருகியே உள்ளனர் என்றும், அதனால் திருவிடை மருதூர் தல புராணத்தை உரைநடையில் எழுதவேண்டும் என்றும் அதற்குப் பொருளுதவி செய்வதாகவும் சாமிநாதனிடம் சொன்னார். இதனால் கொட்டையூர் சிவக்கொழுந்து இயற்றிய திருவிடைமருதூரைப் பற்றிய புராணத்தைக் குறிப்பெடுத்து 'ஸ்ரீமத்தியார்ச்சுன மான்மியம்' என்ற உரைநடை நூலை உ. வே. சா. எழுதினார். அது 1885 இல் வெளியானது.

முதல் நூலை அப்படியே பதிப்பித்தார். பின்னர் பிழை திருத்தப் பகுதியைச் சேர்த்தார். அடுத்த நூலின் செய்யுட்

6. உ. வே. சா. என் சரித்திரம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1982, ப. 553.

களில் சில திருத்தங்களைச் செய்தார். மூன்றாம் நூலை உரை நடையாகத் தாமே எழுதினார். இவை பதிப்பின் வளர்நிலை களாம்.

மூன்றாம் பதிப்பு வெளிவந்த இரண்டாண்டுகளில் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியைப் பதிப்பித்தார்.

இங்ஙனம் பதிப்பிக்கும் ஆர்வம் படிப்படியாக வளரவே வாய்ப் புகளும் மெல்ல மெல்ல உருவாயின.

தமிழைக் கற்க வேண்டும் என்னும் ஆர்வம் ஒவ்வோர் ஆசி ரியராலும் உ. வே. சா. அவர்கட்கு வளர்ந்ததைப் போலவே பதிப்பிக்கும் ஆர்வமும் ஒவ்வொரு நூலாலும் வளர்ந்தது.

தமிழ் ஆர்வத்தினால் அவர் படித்த நூல்களின் பட்டியல் விரிந்திருந்தது. அவற்றை அவர் வாயாலேயே அறிந்து கொள்ளும் வாய்ப்பு சேலம் இராமசாமி அவர்களுக்கு வாய்த்தது. அவருடன் முதன்முதலில் உரையாடியதைச் சாமிநாதன் **என் சரித்திரத்தில்** குறிப்பிட்டுள்ளார்.

சங்க நூற் செய்தி :

கும்பகோணத்தில் சேலம் இராமசாமி நீதிபதியாக இருந்த போது 21-10-1880-இல் அவரை முதன்முதல் சந்தித்தார் சாமிநாதன். தாம் கல்லூரியில் பணியாற்றுவதையும், திருவாவடு துறை மடத்தில் கல்வி கற்றதையும் எடுத்துரைத்து அறிமுகப் படுத்திக் கொண்டார். அப்பொழுது அயலாரிடம் பாராமுக மாகப் பேசுவதுபோல் நீதிபதி பேசினாராம். 'அதிகாரப் பதவி யால் இப்படி இருக்கிறார்; தமிழ் படித்தவராக இருந்தால் இப் படியா நம்மிடம் பேசுவார் ?' என்று எண்ணினாராம் உ. வே. சா. "நீங்கள் யாரிடம் பாடம் கேட்டீர்கள்?" என்று அவர் கேட்டார். "மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டேன்" என்றார் உ. வே சா.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பெயரைக் கேட்டவுடன் அவரிடம் ஏதாவது கிளர்ச்சி உண்டாகுமென்று எதிர்பார்த்தார். தம்முடைய தொழிலுக்காகத் தம்மை மகிழ்விக்காவிட்டாலும், மகாவித்துவானின் மாணாக்கர் என்ற முறையில் மனங்கலந்து

பேசுவார் என எதிர்பார்த்தார். அவரோ கணக்காகவே பேசினார். தமிழின்மீது அன்பு கொண்டவராக இவர் இருக்க முடியாது என்றே முடிவு கொண்டாராம் உ. வே. சா. நீதிபதியோ கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை. ''என்ன என்ன பாடம் கேட்டீர்கள்?'' என்றார்.

இதற்குப் பதில் சொல்லும் வகையில் இவரை வியப்புறச் செய்துவிடலாம் என்ற எண்ணத்துடன் சாமிநாதன் தாம் படித்த நூல்களின் பட்டியலை ஒப்பிக்கலானார்.

குடந்தையந்தாதி, மறைசையந்தாதி, புகலூர் அந்தாதி, திருவரங்கத்து அந்தாதி, அழகர் அந்தாதி, கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி, மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக் குமாரசாமிப் பிள்ளைத்தமிழ், அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை என்று சொல்லிக்கொண்டே போனார். அப்பட்டியல் அந்தாதிகளில் இருபது, கலம்பகங்களில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத்தமிழ்களில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் பல என்று நீண்டிருந்தது.[7]

நூற்றுக்கணக்கான நூல்களின் பெயர்களை ஒப்பிப்பதற்கே நல்ல நினைவாற்றல் வேண்டும். அவ்வளவு நூல்களையும் படித்து நினைவில் கொள்ள வேண்டுமானால் எத்தகைய ஞானம் இருக்கவேண்டும்? அவற்றுள் எந்த நூலில் கேள்வி கேட்டாலும் விடை சொல்லுகின்ற மன உறுதியும் அல்லவா இருக்கவேண்டும்! இவ்வளவு நூல்களைப் படித்தார் என்பதே பெருமைக்குரியது.

ஆயினும் இவையாவும் சிற்றிலக்கியங்கள் என்பதே இங்கு நோக்க வேண்டிய ஒன்று. சிற்றிலக்கியப் பயிற்சி அவருடைய தமிழ் ஆர்வத்திற்கு வளம் காட்டியதைப்போலவே சிற்றிலக்கியப் பதிப்புக்கும் ஆர்வத்தை யூட்டியது என்பது இதனால் காணக்கிடைக்கிறது. இதோடு உ. வே. சா. அவர் களின் பட்டியல் முடிந்துவிட்டதா என்றால் இல்லை. சேலம் இராமசாமி மேலும் கேள்விகளைத் தொடுத்த வண்ணம் இருந்தார். அதனால் பட்டியலும் நீண்டுகொண்டேயிருந்தது.

---

7. அது, பக்கம் 530 - 531.

'இதெல்லாம் படித்து என்ன பயன்?' என்றொரு கேள்வியைப் பட்டியல் ஒப்புவித்தலின் இடையே கேட்டார் நீதிபதி. அப்போதும் விடாமல் தம் பட்டியலைப் புராணமாக்கினார் உ. வே. சா. திருவிளையாடற்புராணம், திருநாகைக் காரோணப் புராணம், மாயூரப் புராணம், கந்தபுராணம், பெரியபுராணம், நைடதம், பிரபுலிங்கலீலை, சிவஞானபோதம், சிவஞான சித்தியார் உரை என உரைத்துக் கொண்டேயிருந்தார். இவ்வளவு பெரிய பட்டியலில் இன்றியமையாத ஒரு நூலைச் சேர்க்காமல் விட்டுவிட்டது நினைவுக்கு வரவே தம் ஆசிரியர் பிரானிடம் கம்பராமாயணத்தின் சில காண்டங்களைப் பாடம் கேட்டிருப்பதாகவும், தாமே இரண்டு மூன்று முறை முழுமையாகக் கம்பராமாயணத்தைப் படித்திருப்பதாகவும் கூறினார்.

கற்சிலையாக, முகத்தில் எந்த மாற்றத்தையும் காட்டாமல் முழுக்க முழுக்க நீதிபதியாகவே இருந்துகொண்டு இராமசாமி அவர்கள், 'சரி, அவ்வளவுதானே' என்றாராம். பின்பு, "இந்தப் பிற்காலத்து நூல்களையெல்லாம் படித்தது சரிதான். பழைய நூல்களில் ஏதாவது படித்தது உண்டா?" என்றாராம்.

ஒரு திருப்பம் :

பழைய நூல்கள் பற்றி உ. வே. சா. அவர்கள் நீதிபதியிடம் விளக்கம் கேட்டபோது அவர் **சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம்** முதலிய நூல்களைப் பற்றிச் சொன்னாராம். அவர் சொன்ன நூல்களை உ. வே சா. படிக்கவில்லை என்பதை மட்டுமல்லாமல் தம் குருநாதர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் அவர்கட்கும் இவை தெரியா என்றும், அவரும் படித்ததில்லை என்றும் குறிப்பிட்டார். குருநாதரே படிக்காதவை. ஆயினும் தாம் அவற்றைப் படிக்கும் அளவுக்குத் தைரியம் கொண்டிருப்பதாக இயம்பினார்.[8]

தமிழ் ஆர்வம் தம்மை மறந்து பேசும் நிலைக்கும், படிக்க வேண்டும் என்னும் உணர்வு தோன்றுவதற்கும் காரணமாக அமைந்துவிட்டது. சிந்தாமணி, மணிமேகலை. சிலப்பதிகாரம் போல்வன எத்தன்மையன என்று அறியாமலேயே துணிவாக உரைத்தமை அவருடைய தமிழ் ஆர்வத்தையே காட்டுகின்றது

8. அது, பக். 531 - 532

மீனாட்சிசுந்தரம் எழுதிவைத்த சிந்தாமணி ஏட்டுப்பிரதியைத் திருவாவடுதுறை மடத்தின் தலைவர், மடத்திலிருந்து ஒப்பு நோக்க எடுத்துத்தந்ததையும் கூறியுள்ளார் உ. வே. சா.[9] அதனால் பழைய இலக்கியங்களை மீனாட்சிசுந்தரம் பயின்று படி யெடுத்துப் போற்றிய செய்தி விளங்கும். எனினும் அவர் சிற்றிலக்கிய நூல்களையே பாடம் சொல்லிக் கொடுத்தார். சாமிநாதனும் சிற்றிலக்கிய நூல்களையே அழுந்திக் கற்றார். பிறகு பதிப்பிக்கும்போது சிற்றிலக்கியங்களையே முதலில் பதிப்பித்தார். ஆக அவர் வாழ்வு சிற்றிலக்கியத்தில் பிறந்து, வளர்ந்து முதிர்ச்சியுற்றது என்பது வெள்ளிடைமலை.

சீவகசிந்தாமணியின் முதற்பாட்டே, குறிப்பாக முதல் தொடரே, தமிழ் நூற்பரப்பை ஒருவாறு அறிந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருந்த அவரின் எண்ணத்தை மாற்றி, அவர் அறிந்தவற்றிற்கும் மேலாக பெரிய இலக்கிய உலகம் ஒன்று உண்மையை எடுத்துக் காட்டியதாம். உலகம் நிலையாமை உடையதென்ற செய்தியை மிகுதியாகக் கேட்டுப் பழகியிருந்த அவருக்குச் சிந்தாமணியின் முதல் தொடரான ''மூவா முதலாவுலகம் ஒரு மூன்றும்'' என்பது புதிய கருத்தாக நெஞ்சில் நின்றது.

முதல் தொடரே புதிய பொருளைத் தரத்தொடங்கியமையால் ஒரு பிரதியை வைத்துக் கொண்டு படிக்கலாகாது என்ற சிந்தனை தோன்றியது. அதனால் ஊர் ஊராகத் தேடியலைந்து சிந்தாமணி ஏட்டுச் சுவடிகள் பலவற்றைத் தொகுத்தார்.

உ. வே. சா அவர்களின் ஆர்வத்திற்கு உறுதுணையாகக் கல்லூரிகளில் தமிழைப் பாடம் வைக்கும் முறையும் அமைந்திருந்தது. அந்தக்காலத்தில் கல்லூரி வகுப்புக்களுக்குத் தமிழ்ப் பாடம் வைக்கும் முறை விந்தையானது. பேர் மட்டுமே தெரிந்த நூலிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியைப் பாடமாக வைத்து விடுவார்களாம். ஏட்டுச் சுவடியைத் தேடி எடுத்து உள்ளது உள்ளபடியே எவரேனும் பதிப்பித்து வெளியிட்டு விடுவார்களாம். அதை வைத்துக்கொண்டு தெரிந்தோ தெரியாமலோ எல்லாவற்றையும் குழப்பித் தமிழாசிரியர்கள் பாடம் சொல்வார்களாம்[10].

---

9. அது பக்கம் 536
10 அது பக். 519

சிலப்பதிகார நூலின் சில பகுதிகளைப் பாடமாகக் கல்லூரியில் வைத்திருந்தமையைச் சுட்டி நகைச்சுவையாக எழுதியுள்ளார் உ. வே. சா. 'இந்திர விழவூரெடுத்த காதை' பாடமாக இருந்ததாம். சிலப்பதிகாரச் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேறு துணைக் கருவிகள் இல்லை. அதனால் 'இந்திர விழாவினை ஊர் எடுத்த காதையா ? இந்திர இழவூரெடுத்த காதையா ?' என்றுகூட அறியுமாறில்லை என்று எழுதியுள்ளார்.

தமிழாசிரியர்கள் குழப்பி விட்டதாகச் சொன்னது மிகைப்பட்டதுபோலத் தோன்றினாலும், பெரும்பான்மையோர் வேறு துணைக் கருவிகள் இன்றி இருந்தனர் என்று எடுத்துக்காட்டவே அங்ஙனம் இயம்பினார் சாமிநாதன் எனக் கருதலாம். அதனால் பதிப்புத் தொண்டில் மேலும் ஆர்வம் வளர்ந்தது. நல்ல துணைச் செய்திகளுடன் நூலைப் பதிப்பித்தால் தான் தமிழாசிரியர் இடர்தீரும் என்னும் சிந்தனை அவரது ஆர்வத்திற்கு உற்ற துணையாயிற்று. தூண்டல் தானே துலங்கலுக்கு மூலம்.

5. பதிப்புத்திறம்-சிற்றிலக்கியங்கள்.

"கண்ணும் சடையாமல் கையும் தளராமல்
உண்ணப் பசியெழுவ தோராமல்-எண்ணியெண்ணிச்
செந்தமிழ்த் தாய்க்குச் செய்த திருத்தொண்டுக்
கிந்நிலத் துண்டோ இணை"[1]

எனக் கவிமணி தேசிகவிநாயகம் பாராட்டிய பெருந்தகையாளர் உ. வே. சா.[2] பதிப்புப்பணி என்றும், எழுத்துப்பணி என்றும் ஓய்வின்றி உழைத்தவர் அவர். மறைந்து போக இருந்த பல தமிழ் மொழியின் பழம் பெருமையைத் தமது ஆய்வறிவால் காட்டி, அதற்குப் புதுப் பொலிவைத் தந்தவர். இன்றுவரை, தனிப்பட்ட எவரும், இவரைப் போன்று நிரம்பப் பழந்தமிழ் இலக்கண நூல்களை ஆய்வுக் குறிப்புக்களோடு பதிப்பித்தவரிலர். ஆய்வு செய்து வெளியிட்ட நூல்களுக்காக உ. வே. சா. அவர்களைத் தமிழ் ஆராய்ச்சி உலகம் என்றும் போற்றும். மிகச் சிறந்த ஆய்வாளராக விளங்கி நடுநிலையோடு வழிகாட்டினார். ஆய்வு நெறிமுறைகளையும் தம் வரலாற்று நூலில் ஆங்காங்கே வெளிப்படுத்தினார்.

பதிப்பிக்குமுன் :

ஒரு நூலைப் பதிப்பிக்கும் முன்பு நன்கு ஆழமாகப் படித்தார். அந்நூலுக்குத் தொடர்பான செய்திகள் எவையெவையென ஆராய்ந்தார். அந்நூலின் பிரதிகள் எவரெவரிடமெல்லாம் இருக்கக்கூடும்எனச் சிந்தித்தார். அவர்களிடம் பிரதிகளைப் பெறும் முறைகளையும் எண்ணினார். நூலின் கருத்து விளக்கம் பெறுவதற்கு தொடர்பான நூல்களை ஆராயும் போக்கினையும் கொண்டிருந்தார். பலவகை அகராதிகளையும் முதற்கண்ணே தொகுத்துக் கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அரும்பத முதலியவற்றின் அகராதி, விசேடச் செய்திகள் அகராதி, சிறந்த பாடற் பகுதி அகராதி, விளங்கா மேற்கோள் அகராதி முதலிய பல அகராதிகளை தொகுத்தார். பதிப்பிக்க இருந்த நூல்களுக்கும் இவ்வாறு அகராதியைத் தொகுத்திருந்தார்.[3]

---

1. சி. தேசிகவிநாயகம் பிள்ளை கலைமகள் ஜூன் 1942 ப.569
2. டாக்டர் உ. வே. சா. பதிப்புப்பணி. ஓராய்வு ப. 1
3. மு. கோ. ராமன், தினமணி சுடர், 4—3—73, ப 1

நூலைப் பதிப்பிக்கும் முன் நன்கு ஆராய்வார். பின் அகராதியாக்குவார். பின்பே ஓலைச்சுவடிகளைப் பார்த்துப் பாட வேறுபாடுகளையெல்லாம் தொகுப்பார்.[4] இங்ஙனம் அமையும் அகராதிகளுள் நூலிலுள்ள மூலம், உரை இவற்றிலுள்ள சொற்களும் உவமைகளும் அடங்கும்.[5] இப்படி ஒரு நூலுக்கெனத் தொகுத்த அகராதிகள் பிறநூல் பாட ஆய்வுக்கும் பயன்படும். இதனைப் பெருங்கதை நூலுக்கு அவர் எழுதித் தொகுத்த அகராதி மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றிற்கு முறையே எழுதிய அரும்பத உரைக்கும், நூலாராய்ச்சிக்கும் பயன்பட்டமையால்அறியலாம்[6]

இச்சிந்தனை அவருக்களித்த பயனால், தாம் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூலுக்கு மட்டுமின்றி அதற்குத் தொடர்புடைய நூல்களுக்கும், தாம் பதிப்பிக்காத நூல்களுக்கும், பல்வேறு அகராதிகளை அவர் அமைத்துக் கொண்டார். விளங்காத பல பகுதிகள் இம்முறையினால் விளக்கம் பெற்றன.[7]

ஓலைச் சுவடிகளில் ஒற்றெழுத்தின்மேல் புள்ளி வைத்து எழுதமுடியாத நிலையிருந்தது. அதனால் பொருள் பொதிந்த நிறுத்தப்பொருள் குறித்த குறியீடுகளைச் சுவடிகளில் பயன்படுத்தும் வழக்கம் இல்லாமலிருந்தது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், விவிலிய நூலினை மொழி பெயர்த்தபோது அக்குறி வகைகளைப் பின்பற்றியமையால் ஏற்பட்ட பயன்களை அறிந்தார் உ. வே. சா.[8]. தம் நூல்களிலும் ஏற்ற இடங்களில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முழுப்புள்ளி, வளைவுக் குறிகள், கவிழ்குறி, வியப்புக்குறி, வினாக்குறி, நெடில்குறி, ஒற்றுப்புள்ளி போன்றவற்றை எளிதில் பொருள் விளங்கப் பயன்படுத்தும் சிந்தனையைக் கொண்டார். மேலும் சிந்தித்துத்

---

4. கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், உ. வே. சா. நூல்நிலையம், 1872, முகவுரை, ப. 4
5. பரிபாடல், முகவுரை, ப 11.
6. பெருங்கதை, முகவுரை, ப. 38.
7. டாக்டர் பூ. சொல்விளங்கும் பெருமாள், டாக்டர் உ.வே.சா. பதிப்புப்பணி—ஓராய்வு, மதுரை, 1981, 4—88.
8. மு. கணபதிப் பிள்ளை, ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள். சென்னை, 1967, ப. 25.

தமிழ் எண், உரோமானிய எண், உடுக்குறி, சிலுவைக்குறி போன்ற பலவற்றையும் மேலும் விளக்கம் தந்திடச் சேர்த்துக் கொண்டார். தாமே சிந்திப்பதோடு பிறர் சிந்தனை நன்மை தருமானால் அதனையும் கேட்டுப் பின்பற்றி நன்றியையும் தெரிவித்துக் கொண்டார் உ. வே. சா.

தம் கைக்குறிப்புக் காகிதங்களில் பாட்டு, பொழிப்புரை, விசேடவுரை எல்லாவற்றையும் ஒரே தன்மையாக எழுதி வைத்திருந்தார். பதிப்புக் கலையில் தேர்ந்த தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராஜகோபாலன் என்பார் அவற்றைக் கண்டு, "மூலத்தைப் பெரிய எழுத்திலும், உரைகளைச் சிறிய எழுத்திலும் அச்சிடவேண்டும். பொழிப்புரையையும் விசேட உரையையும் தனித்தனியே பாரா பாராவாக அமைத்து விட்டால் அவை, வேறு வேறு என்று தெரியவரும் எனவும் ஏட்டுப் பிரதியிலுள்ள குழப்பங்களையெல்லாம் அச்சில் மாற்றி விடலாம் என்றும் வழிகூறினார். இதனை என் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் உ. வே. சா. [9]

மேலும் சிந்தித்து நூற்பெயர், உள்தலைப்புப் பெயர், தலைப்பு, மூலம், உரை, மேற்கோள் போன்றவற்றிற்கும் வெவ்வேறு அச்செழுத்துக்களைப் பயன்படுத்தலானார். அடிக் குறிப்புக்கு உடுக்குறி முதலியனவும் அமைத்தார். நிறையப் பிரதிகள் கிடைக்கும் போது நிரம்பவே பாடவேறுபாடுகள் இருந்தன. அதனால் குறிகளை அதிகம் பயன்படுத்த வேண்டியிருந்தது; அதற்காக 1, 2 என வரிசை எண்கள் இட்டு எளிமையாக்கும் சிந்தனையும் அவருக்குத் தோன்றியது.

முதலில் பதிப்பித்த 'வேணுவனலிங்க விலாசச்சிறப்பு நூலுக்கும் அதற்குப் பின் பதிப்பித்த புறநானூறு, குறுந்தொகை நூல்கட்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் அவரது சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சியையே காட்டுகின்றன. "பிற்காலத்தில் எவ்வளவோ புத்தகங்களைப் பரிசோதித்து வெளியிடும் வேளையில் ஈடுபட்ட நான், முதன்முதலாகப் பதிப்பித்தது அந்தப் பாடல் திரட்டே. அக்காலத்தில் பதிப்பு முறை சிறிதும் எனக்குத் தெரியாது" [10] என்றே உ. வே. சா. குறிப்பிட்டுள்ளார்.

9. என் சரித்திரம், ப. 580.
10. அது, ப. 450

டாக்டர் உ. வே. சா. பதிப்பித்த நூலின் முகப்பில் சுவடியில் இருந்த பழைய அமைப்பையும் அப்படியே பதிக்கலானார்.

"உ
கணபதி துணை

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தைச் சேர்ந்த செவந்திபுரத்தில் மேற்படியாதீனம் பெரிய காறுபாறு வேணுவனலிங்க சுவாமிகள் இயற்றுவித்த சுப்பிரமணிய தேசிக விலாசச்சிறப்பு. மேற்படி திருவாவடுதுறையில் மேற்படி சுவாமிகளியற்றுவித்த கொலுமண்டபமென்னும் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு. இவை பல வித்துவான்களாற் பாடப்பட்டு மேற்படி ஆதீன அடியார் குழாங்களிலொருவராகிய ஆறுமுக சுவாமிகளாலும் மேற்படி திருவாவடுதுறை வேங்கட சுப்பஐயரவர்கள் புத்திரராகிய சாமிநாத ஐயரவர்களாலும் பார்வையிடப்பட்டு, திருநெல்வேலி முத்தமிழாகர அச்சுக்கூடத்திற் பதிக்கப்பட்டன. வெகுதான்ய ஹூ ஆனி மீ"[11]

இப்படிப் பதிப்புத்துறையில் காலடி வைத்தவர் பிறநூல்களின் பதிப்புக்களாலும், அனுபவம் வாய்ந்தோரின் சிந்தனைகளாலும், தாமே சிந்தித்துச் செயற்பட்டதாலும் பெருவளர்ச்சியினைப் பெற்றார். கற்றனைத்து ஊறும் அறிவு என்பதுபோல் **பட்டறிவனைத்து ஊறும் பதிப்பு** எனச் சிறந்தது அவர் பதிப்பு.

அச்சீட்டின்போது :

பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து ஒரு நூலை அச்சிட்டு வெளியிடும்போது உ. வே. சா நன்குச் சிந்தித்துப் பின்னரே பதிப்பித்துள்ளார். ஏட்டுச்சுவடியில் தவறாகப் பிரதி செய்யப்பட்டிருந்தாலும் உள்ளவாறே பதித்துள்ளார். இதனை அவரே தம் பதிப்புச் சிற்றிலக்கிய நூலான **திருப்பூவண நாதருலாவில்** "அடிமடக்குகளிலும் சிலேடைகளிலும் பேதமில்லாமல் நகர னகரங்களும், எதுகைகளிற் பன்மை வரவேண்டியவிடத்து ஒருமையும் ஒருமை வரவேண்டியவிடத்துப் பன்மையும் இந்

11 அது. பக். 450-451.

நூலுட் சிலவிடத்து வந்திருக்கின்றன; மாற்றக் கூடாமையால் அவை உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டன'' என்று முகவுரை எழுதியுள்ளார்.[12] ஏட்டுச் சுவடியில் ஆதாரமின்றித் தாமே திருத்தும் எண்ணம் கொண்டாரல்லர் என்பதனை இதனால் அறிய முடிகின்றது.

மேலும் சீவக சிந்தாமணி முகவுரையில் உள்ளதை உள்ளவாறே பதிப்பதைக் கொள்கையாகக் கொண்டமையை வலியுறுத்தியுள்ளார் :

''புராதன தமிழ் நூல்களும் உரைகளும் பண்டை வடிவங் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டியும் உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம் போனவாறு அஞ்சாது பதிப்பித்தேனல்லேன். ஒருவாறு பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யானாக ஒன்றுஞ் செய்திலேன்''[13] என விவரமாக எடுத்துரைத்துள்ளார்.

விளங்காத செய்திகளை, நேர்மையுடன் 'விளங்கவில்லை' என்று ஒப்புக்கொள்ளும் தூய எண்ணம் உ. வே. சா. அவர்களிடம் இருந்தது என்பதனை மான்விடுதூதிற்குக் குறிப்புரை எழுதியதன் வழி அறியமுடிகிறது.

''இதனுள் வந்துள்ள மான்றேயம், புல்வாய்மாது முதலியவற்றைப் பற்றிய செய்திகள் விளங்காமையால் குறிப்புரை எழுதக்கூடவில்லை. நாளடைவில் விளங்குமென்றெண்ணுகின்றேன்''[14] என்று எழுதித் தம் தூய சிந்தனையைப் புலப்படுத்தியுள்ளார்.

திருவாவடுதுறைக் கோவை என்னும் சிற்றிலக்கியநூலை இரண்டாம் பதிப்பாக 1926-இல் பதிப்பித்துள்ளார். அதன் முதல் பதிப்பு 1903-ஆம் ஆண்டு வெளியாயிற்று. இந்நூலுக்கு மேற்கோளாக நாற்பத்திரண்டு நூல்களிலிருந்து எடுத்துக்காட்டி

---

12 திருப்பூவணநாதருலா, (இரண்டாம் பதிப்பு), முகவுரை, ப. 2

13 சீவக சிந்தாமணி (ஏழாம் பதிப்பு), முகவுரை, ப. 7

14 மான்விடுதூது, முகவுரை, ப. 6.

விளக்கம் தந்துள்ளதாகப் பட்டியல் கூறுகிறது. தாம் பாடங் கேட்ட நூல்களிலிருந்தும், பதிப்பித்த நூல்களிலிருந்தும் மேற் கோள் நூல்களைப் பட்டியலிட்டிருக்கின்றார். இரண்டு நூல்கள் குறிப்புரையில் காணப்படவில்லையென்றாலும் அந்தநூல்களின் கருத்துக்களைச் சிந்தனை :[வயப்படுத்தி உணர எழுதியிருக்கக் கூடும். அதனால் பரிபாடல், கலைசைச் சிலேடை வெண்பா ஆகிய நூல்களின் பெயர்களையும் பட்டியலில் இணைத்துள்ளார்.

நாற்பத்துநான்கு நூல்களின் மேற்கோள்கள், ஒரு சிற்றி லக்கிய நூலுக்குத் தேவைப்பட்டன என்பது வியப்பான செய் தியே. இவ்வளவு நூல்களையும் சிந்தனையில் தேக்கி வைத் திருந்து தகுந்த இடங்களில் பயன் படுத்தினார் என்பதும் மிக வியப்புக்குரிய செய்தியே. இவற்றோடு மேலும் ஒரு செய்தி யும் உள்ளது. திருவாவடுதுறை கோவைக்கு உரை எழுதத் துணை நின்ற நூல்கள் மேலும் பதினாறு உள்ளன. திருக்குறள், நல்வழி, முதுமொழிக்காஞ்சி போன்ற இலக்கிய நூல்களையும் நம்பியகப்பொருள், நேமிநாதம் ஆகிய இலக்கண நூல்களை யும், சீகாழிக்' கோவை போன்ற சிற்றிலக்கிய நூல்களையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். அவற்றைத் துணைநூல் பட் டியலில் சேர்க்காமைக்குரிய காரணம் விளங்கவில்லை. இப்பதி னாறு நூல்களையும் சேர்த்தால் அறுபது நூல்கள் ஒருநூலுக் காகப் பயுன்படுத்தப்பட்டுள்ளமை புலனாகும். ஒரு சிற்றிலக் கிய நூலுக்கே இவ்வளவு நூல்களைப் பயன்படுத்தத் துணை நின்ற அவரது சிந்தனையாற்றல் வியப்பானதுதானே! தம் நினைவில் நிரம்ப ஈர்த்த நூல்களையே துணை நூல் பட்டிய லில் சேர்த்தார் எனலாம். இவற்றை எப்படியும் எங்கேயா வது இந்நூலில் கையாண்டிருப்போம் எனக் கருதிப் பட்டியலில் சேர்த்தார் எனக் கொள்ளலாம். பத்துப்பாட்டு என்று பொது வாகவும், முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடு கடாம் எனத்தனித்தனி நூல்களாகவும் மேற்கோள் நூல்பட்டி யலில் குறித்துள்ளார். இந்நிலையும் சிந்தித்தற்குரியதே.

மேற்கோள் காட்டி விளக்குவது பயனுள்ள ஆய்வாகும். ஒப்பிலக்கியத்துறை வளரவும் இது வழிகாட்டும். இத்தகு மேற் கோள் ஆய்வைத் தொடக்கி வைத்தவர்களுள் உ. வே. சா. அவர்களும் ஒருவர்.

சங்க இலக்கிய நூல்களைப் பதிப்பித்தபோது இதனை மேலும் செம்மைப்படுத்தினார். ஒரு நூலுக்குப்பிற நூல்களிலி ருந்தும் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் பகுதிகளை ஆங்காங் குக் குறிப்பதே வழக்கம். சாமிநாதன் அவர்களும் முதலில் அவ்வாறே செய்து வந்தார். ஆனால் புறநானூற்றைப் பதிப் பித்த போது, அப்புறநானூற்றுப் பாடல்கள் எங்கெங்கு யாரால் எடுத்தாளப் பட்டுள்ளனவென்று குறிக்கும் சிறப்பியல்பைப் புகுத் தியுள்ளார். பிறரிடம் காணாத சிறப்பு இஃதென்பதை அறியலாம்.

அதுபோலவே ஒரு நூலைப் பிறர் உரையுடன் பதிப்பிக்கும் போது சிறப்புத்தன்மையைக் கையாண்டுள்ளார். ஒரு நூலின் உரையில் காணப்படும் மேற்கோள்களை இடஞ்சுட்டி விளக்கு வதோடு அந்நூலின் பாடல்களும், பாடற்பகுதிகளும் பிற உரைகளில் எடுத்தாளப்பட்டிருத்தலையும் இடஞ்சுட்டித் தொகுக்கும் இருமுனை விளக்கமும் அவரது சிந்தனைத் திறத்தைக் காட்டுகின்றது.[15]. பிற பதிப்பாளரிடமிருந்து வேறுபட்டுச் சிறப்பாக விளங்க வேண்டும் என்னும் இச் சிந்தனை தமிழ் ஆய்வுக்குப் புதிய பரப்பை ஏற்படுத்தித் தந்தது எனலாம்.

சிற்றிலக்கிய நூல்களைப் பதிப்பித்தபோது தாமே உரை எழுதியமையால், சங்க இலக்கியப் பதிப்புகளைப் பதிப்பித் தமைபோல் பதிப்பிக்கவில்லை. நூற்பெயர் முதலியவற்றின் முதற் குறிப்பகராதி, முகவுரை, நூலாசிரியர் வரலாறு, நூலா ராய்ச்சி, பிழையும் திருத்தமும், நூலின் பாடல்களும் அரும்பத உரையும், அரும்பத உரையின் அநுபந்தம், கிளவிக்கொத்து, செய்யுள் முதற்குறிப்பு அகராதி ஆகிய பிரிவுகளை அமைத்துப் பதிப்பித்துள்ளார். பாடம் நடத்திப் படிக்காமல் தாமே படித்து அறிந்து கொள்ளும் வண்ணம் பதிப்பித்துள்ளார். அருந் தொடர்களையும், நூலின் கருத்துத் தொடர்களையும் எளிதில் அறிந்து கொள்ளவே கிளவிக்கொத்து அமைக்கப்பட்டுள்ளது. நூலின் பொருட் சுருக்கம் எனக் கிளவிக்கொத்துக்குப் பதிலாகச் சில சிற்றிலக்கிய நூல்களில் இணைத்துள்ளார். ஒரு நூலைப்

---

15 டாக்டர் அ, தாமோதரன், திருக்குறள் மேற்கோள் விளக்கம், மதுரை, 1970, ப. 26.

பதிப்பித்தவுடன் அப்படியே பிறநூல்களைப் பதிப்பித்திடும் எண்ணமில்லாமல் மேலும் மேலும் சிந்தித்து நூலைக் கற்பதை எளிமைப் படுத்தியுள்ளார்.

தமிழ்விடுதூது ஆழ்ந்த ஆய்வு :

1900 ஆம் ஆண்டில் **தமிழ்விடுதூது** என்னும் சிற்றிலக்கியத்தின் சுவடி அவருக்குக் கிடைத்தும் 1930 இல் தான் பதிப்பித்து வெளியிட்டார். ஒரு சிறு நூலுக்கு முப்பது ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தமையால்தான் நூலின் வளம் கனிந்திருக்கின்றது. அந்நூலுக்கு உ. வே. சா. உழைத்த உழைப்பினையும், அவரது ஆய்வுப் புலமையினையும் வெளிக் காட்டும் வண்ணம் அவரிடம் பாடங்கேட்ட ஒருவர் எழுதிய கடிதம் காட்டுகிறது.

''ஸ்ரீமத் ஐயரவர்கள் எந்த நூலைப் படித்தாலும் படிப்பித்தாலும் அதிலுள்ள அரிய கருத்துக்கள், உவமைகள், அரும்பதங்கள் முதலியவற்றைக் குறியிட்டும் இடுவித்தும் வைப்பது வழக்கம். பின்னர் மற்றொரு நூலைப் படிக்கையில் அந்தக் குறிப்பு அந்நூற் கருத்தை நன்கு விளங்க வைக்கும்''.[16]

தமிழ்விடுதூது :

''22-ஆம் கண்ணியில் சார்பெழுத்து இருநூற்று நாற்பதென ஆசிரியர் பாடியிருக்கிறார். அதற்குரிய ஆசிரிய வசனங்களைத் **தொல்காப்பியம்** முதலியவற்றில் தேடியும் கிடைக்கவில்லை. கடைசியில் **இலக்கண விளக்கத்தில்** இந்தக் கணக்குக் காணப்பட்டது. ஆகவே இந்நூலாசிரியர் இலக்கண விளக்கக் காரருக்குப் பிற்பட்டவரென்று உடனே—அந்த இளமை முறுக்கில் நான் கூறினேன் ; ஏன் ? நீங்களுமே கூறுவீர்கள்[17]'' என்கிறார்.

இதற்குப் பொறுமையாகப் பதிலளித்தாராம் உ. வே. சா.

---

16. டாக்டர் உ. வே. சா. சதாபிஷேக வரலாறு, சென்னை, 1936, பக் 127.

17. அது, பக். 127

"அவசரப்படாதே, நான் பழம் புண்ணாளி; இலக்கண விளக்கத்தார் எதனையும் சொந்தமாகச் செய்யவில்லை; பல நூல்களில் உள்ள கருத்துக்களையும் சூத்திரங்களையும் அப்படியே எடுத்து அமைப்பவர்; ஆகையால் அவருடைய சார்பெழுத்துத் தொகைக்கும் வேறு நூலில் மேற்கோள் இருக்கும்; எனவே தமிழ்விடுதூது இலக்கண விளக்கத்துக்குப் பின்புதான் இருக்கவேண்டும் என்று துணிந்து கூறமுடியாது; என்றாலும் அதனை ஒரு பட்சமாகக் கருதலாம்" 18 என நடு நிலையான ஆய்வு மனத்தோடு அளித்த விடை அவரை அரிய பெரிய ஆய்வாளர் என நன்கு விளக்குகிறது,

மேலும் அந்த மாணாக்கர் உ. வே. சா. அவர்களின் ஆய்வறிவை விளக்கியுள்ளார்:

"34-ஆம் கண்ணியிலே 'அட்டாதச வன்னனைகள்' என்று கூறப்பட்டிருக்கிறது. இலக்கணங்களெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தும் அதற்குரிய மேற்கோள் கிடைக்கவில்லை. **மாறனலங்கார** உரையாசிரியர் ஓரிடத்தில் 'பதினெட்டு வருணனையும்' என்று கூறிச் சென்றாரேனும் அவை இவையெனச் சுட்டிக் காட்டினாரல்லர். **தண்டியலங்காரம்** காப்பியநிலை பேசுங்காலை பலபல கூறுகின்றது. பதினெட் டென்னும் எண்ணிற்கு வழியில்லை. அச்சூத்திரத்தில் கூறப் படும் பிறவற்றை ஒழித்துப் புனையத் தகுவனவாகக் கூறப் படும் மலைகடல் முதலியவற்றை எண்ணுகையில் வழக்கம் போலவே சிறு பொழுது ஐந்தென்றே கொண்டு எண்ணினோம். மொத்தம் பதினேழு வருணனைகள் வந்தன. இன்னும் ஒன்றுக்கு வழியில்லை. திடீரென்று 'இருங்கள் இருங்கள்! கண்டுபிடித்துவிட்டேன்' என்றார்கள் எங்கள் குருமூர்த்திகள். நாங்கள் ஈப்புகுவதும் தெரியாமல் வாயைத் திறந்து அவர்களைப் பார்த்து நின்றோம். அவர்கள் தோளைத் தட்டிக்கொண்டே காலை அசைத்தார்கள். மிகவும் உற்சாகம் உண்டாகும் பொழுது தமிழ்த் தெய்வம் இக்கோலம் கொள்வதை நாங்கள் பன்முறை கண்டிருக்கிறோம். அவர்கள், 'சிறுபொழுது ஆறாக வைத்து எண்ணிப்பாருங்கள்' என்றதுதான் தாமதம், 'அப்பொழுது

18. அது, பக். 127

சரியாகப் பதினெட்டாயின' என்று முறுவலுடன் உள்ளக் களிப்பு வெளியிற் குதிக்கக் கூறினோம்.''[19]

சொல்லிய கருத்தை விளங்கிக் கொள்வதற்கே ஆய்வறிவு தேவைப்பட்டது. சாமிநாதனும் நன்கு தகுமுறையால் ஆய்ந்து பதினெட்டு வருணனைகட்கும் விளக்கங்கண்டார். ஆராய்ச்சியில் வெற்றி கிடைக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி, பட்ட துன்பங்கள் யாவையும் மறக்கச் செய்துவிடும். அவர் ஆராய்ந்து சொன்னதைக் கேட்ட மாணாக்கர் உள்ளமே மகிழ்வால் துள்ளிற்று என்றால் அந்த ஆய்வாளரின் மனநிலையைக் கூற வேண்டா.

சாமிநாதன் சிறு பொழுது ஆறு என்பதனையும் தாமாக வரையறுத்துக் கொண்டாரல்லர். 'சிலருடைய கொள்கை சிறு பொழுது ஆறென்பது; அதன்படி பதினெட்டு வருணனைகள் இந்தத் தண்டியலங்காரச் சூத்திரத்தாலே ஏற்படுகின்றன; இப்பொழுது இச்சூத்திரத்திற்கு உண்மையான மிக அரியவுரை கண்டு கொண்டோம்; இதற்கு முன் இவற்றை யார் எண்ணிப் பார்த்தார்கள்''[20] என்று மனம் நெகிழக் கூறியிருக்கிறார். ஆய்வு முடிவு பிறவற்றுக்கும் பொருந்தி வருகின்றபோது ஆய்வு முழு வெற்றி என்றே கொள்ள வேண்டும்.

தமிழ்விடு தூது நூலில் இருந்த ஒரு தொடருக்கு ஆராய்ந்து விளக்கங் கண்டதால் உ.வே.சா. அவர்களுக்கு, தண்டியலங்கார நூற்பாவுக்கும் அரிய உரையைக் கண்டு கொள்ள முடிந்தது. ஆய்வுப் புலமை நல்ல ஆய்வாளரை இனங் காட்டுவதோடு, பல நூல்களின் பொருட்கும் விடியலைத் தோற்றுவிக்கின்றது என்பதும் இத்தொடர் நமக்குக் காட்டும். இதனை எண்ணிப் பார்த்த சாமிநாதனின் தமிழ்நெஞ்சம் கசிந்துருகுகிறது.

''இந்தச் சிறுநூல் (தமிழ்விடு தூது) அன்றோ இந்தச் சூத்திரத்தை விளக்குவித்தது என்று சொல்லி, எதையோ நினைத்து சிலநேரம் வாளாவிருந்தார்கள். அவர்கள் கண்ணில் நீர்

19. அது, பக் 127-128
20. அது பக். 128

ததும்பியது. நாங்கள் ஒன்றும் அறியாது இருந்தோம். அவர்கள் நாத்தழுதழுத்துக்கொண்டே, 'இந்தப் புலவர் (தமிழ் விடுதூதின் ஆசிரியர்) எப்படி இருந்தாரோ! யார் இவருக்குப் பாடங் கற்பித்தாரோ! இவரைப் போன்ற எத்தனை பேர்கள் இந்தத் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள்! அவர்கள் காலத்தில் இருந்திருப்போமானால் எவ்வளவு விஷயங்கள் அறிந்து எவ்வளவு இன்பமாகக் காலத்தைக் கழித்திருப்பேன்! என்று இரங்கினார்.''21 என்று அந்த மாணாக்கர் எழுதியுள்ளார். தமிழை ஆய்ந்தறியும் ஆர்வத்தால் அக்கால நிலையை எண்ணி எண்ணித் தவித்தார் சாமிநாதன். பல செய்திகளை அறிந்து உரைக்க முடியாமல் போயிற்றே எனத் துவண்டார்.

சிற்றிலக்கியப் பயன் :

சிற்றிலக்கிய நூல்களையே நிரம்பப் பாடங்கேட்டமையும், அவற்றையே பாடஞ்சொன்னமையும், பல நூல்களைப் பதிப்பித்தமையும் அவருள் ஒரு கொள்கையையே தோற்று வித்துவிட்டன. இக்கொள்கையைப் பற்றியும் அம் மாணாக்கர் விளக்கியுள்ளார்.

''பிரபந்தங்கள் பலவற்றை ஒருவன் படித்தாலன்றி தமிழின் உள்ளுறையாகிய மறைபல கொள்ளுதல் அரிதாம் என்பது ஐயரவர்களின் கொள்கையாகும். யாரேனும் பாடம் கேட்கவரின் முதலில் பிரபந்தங்களைக் கேள் என்பார். அவைதாம் தமிழ் மொழியின் ஒழுக்கை அரண் கோலிக் காப்பன வென்பது அவர்கள் துணிவு. இந்தத் தமிழ்விடு தூதில் அப்பிரபந்தங்களைத் தமிழாகிய அரசிற்கு மெய்காப்பாளராக ஆசிரியர் கூறியுள்ளார். இதனைக் கண்ட நம் பெரும் பேராசிரியர், இது தமது உள்ளக் கிடக்கையோடு ஒத்திருத்தலை யறிந்து மகிழ்ந்து முகவுரையிலே இதனைக் குறித்துள்ளார்கள்'' என்று கூறியுள்ளார்.22

153-ஆம் கண்ணியில் ''அவரை நிழல்'' பற்றிய குறிப்பு உள்ளது. அந்தக் கண்ணிக்குப் பொருள் கண்டுபிடிக்கச் சாமி நாதன் செய்த முயற்சியில் நூற்றில் ஒரு பங்கால் 'கம்பராமா

21. அது, பக்: 128
அது, பக். 128.

யணம் முழுவதற்கும் பொருள் கூறிவிடலாம் என்று உடனிருந்த அம் மாணாக்கர் கூறியுள்ளார்.[23]

நுணுகி ஆராயும் போக்கும், காலம் பற்றி எண்ணாமல் உழைத்த உழைப்பும் இக் குறிப்பால் புலப்படுகின்றன. இன்று எளிதாகப் பொருள் விளங்கிக் கொள்ள முடிந்திருக்கின்றது.

"நல்ல அவரைக் கொடி படர்ந்த பந்தரின் தேடிய நிழலிலுள்ளார் [அறிவுபோல, அவரை நிழலில் இருப்பவர்களின் அறிவு தேயுமென்பது ஆயுள் நூற்றுணிபு; 'உன்னைவிட்டு மற்றொன்றெண்ணா தவரை நிழற்பாற் பயிலினு மென்மனமே' (திருக்குடந்தைத் திரிபந்தாதி, 70) வடமொழி நைஷத நூலாசிரியர் சரிதத்தாலும் இது விளங்கும்."[24] என்னும் உரை விளக்கம் அவரதுஆய்வு வன்மையைக்காட்டும். இருமொழிப் புலமைக்குச் சான்று பகரும். ஆய்வெல்லையை விரிந்து, பரந்து பட்ட அறிவோடு அணுகவேண்டும் என்பதும் இதனால் புலப்படும்.

"காசு பணங்காணிலுன்னை விற்பாரவர் பால்நீ மேவாதே" என்னும் 184—ஆம் கண்ணி அவருக்கு நடப்புலகை ஒப்பிட வைத்தது. "ஐயோ!, என்று கூவினார்கள் அவர்கள்; இரண்டு மூன்று முறை பெருமூச்சு விட்டார்கள்; 'இந்தக்காலம் பணத்தாலல்லவா எண்ணப்படுகிறது! என்னுடைய நோக்கம் காசல்லவென்பதைப் பிரமாணமாகச் சொல்வேன்; அழிந்துபோகும் நிலைமையிலுள்ள பல அருநிதியங்களாகிய நூல்களை வெளியிடக் காகிதம் வேண்டும்; அச்சுக்கூலிவேண்டும். நான் என் செய்வேன்! பிறரை வாய்திறந்து கேட்க மனம் கூசுகின்றது; ஒரு புஸ்தகம் செலவாக இருபது முப்பது வருஷங்களாகின்றனவே! நான் ஆராய்ந்து வைத்த நூல்களைப் பதிப்பிப்பதில் தோன்றும் கஷ்டங்கள் பிறருக்கு என்ன தெரியும்? ஒரு நூலுக்காக எத்தனை நூலை ஆராயவேண்டும்! எவ்வளவு செய்திருக்கிறேன்! அவ்வளவுக்கும் பணம்-காலம்-உதவி வேண்டாவோ? நல்ல உருவத்தில் இந் நூல்களையெல்லாம் நான்

---

23. அது, பக். 129.

24. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது (உ. வே. சா. பதிப்பு) சென்னை 1966, பக். 27

பார்க்க முடியுமா?' என்று சொல்லி இரண்டு நிமிஷம் தங்களை மறந்திருந்தார்கள்'' 25 என்ற மாணாக்கர் கட்டுரையிலிருந்து நடப்பியலுக்கு வந்த அவரது சிந்தனை, தம்மையும் அவ்வாறு கருதிவிடுவார்களோ என அச்சுறுத்தியது. அதனால் மனம் நொந்து உரைத்தார். உண்மை நிலையை வெளிப்படுத்தினார்.

இந்தக்கூற்று அவர் மன நிலையைக் காட்டுவதுடன், மிக உயர்ந்த ஆராய்ச்சி நோக்குடன் செயல்பட்டார் என்பதனையும் காட்டுகிறது. பல நூல்களை ஆராய்ந்து ஆய்வே நிகழ்த்திய மையை அவர் கூற்றே வெளிப்படுத்தும்.

தமிழ்விடு தூது நூலைக் குறிப்புரையுடன் டாக்டர் உ. வே. சா. வெளியிட்டபோது, வெளிவராத சொக்கநாதருலா, திரிசிரகிரியுலா முதலியவற்றிலிருந்தும் மேற்கோள்காட்டி அந்நூல்களையும். பின்னாளில் ஆராய இருப்போர்க்குக் குறிப்புக் காட்டியுள்ளார். பின்னாளில் சொக்கநாதருலாவைச் சாமிநாதனே பதிப்பித்தார்.

தமிழ்விடு தூது நூலைப் பதிப்பித்தமையால் பிற தண்டியலங் காரம் முதலிய நூல்களில் உள்ள பொருள் தெளிவாயிற்று. விளங் காப் பொருள் பிறநூல்களில் தேடியபோது விளங்கிற்று என்ப தற்கு ''அவரை நிழல்'' பற்றிய குறிப்பு மட்டும் சான்றாக அமையவில்லை. வேறொரு சான்றும் உளது. ''ஓலைப்பூ'' எனத் தாழம்பூவை இரத்தினச் சுருக்கம் மட்டுமே கூறியுள்ளது. வேறு நூலில் காணக்கிடைக்காதா என ஆராய்ந்தபோது அது தமிழ் விடுதூது நூலின் 8-ஆம் கண்ணியிலேயே இருந்ததைக் கண் டார், உ. வே. சா. 'மட்டோலைப் பூவையார்' என்னும் தொடர் அவரது ஆய்வுக் கண்ணோட்டத்தில் வெளிப்பட்டது. இவை போன்ற பல குறிப்புக்கள் ஆய்வுக்குத் துணை நிற்கின்றன.

தூதுகள் :

உ.வே.சா. அவர்களின் இந்த ஆய்வுப் புலமையே ஒரு நூலைப் பதிப்பிக்கும்போது முகவுரை எழுதவைத்தது எனலாம். அத னுள் ஆராய்ச்சியே நிகழ்ந்திருந்தது. என்பதை மறுக்கவியலாது தமிழ்விடுதூதின் முகவுரை, தூது பற்றிய இலக்கணங்களையும்,

25. டாக்டர் உ. வே. சா. சதாபிஷேக வரலாறு, பக். 129

பிற தூது நூல்களைப் பற்றிய பொதுச் செய்திகளையும் கூட வெளிப்படுத்தியுள்ளன. வடமொழியில் புலமையும் உள்ளமை யால் வடமொழி நூல்களிலும் தூது உள்ளமையைக் காட்டி யுள்ளார்.

"தமிழிற்கலி வெண்பாவாற் செய்யப்படவேண்டும்" என்று கூறி இலக்கண விளக்க நூலைச் சான்று காட்டினார்.[26] மேலும் இலக்கணத்திற்கு விளக்கமும் தந்துள்ளார். தொல்காப்பியப் பொருளியல், இரத்தினச் சுருக்கம் போன்ற நூல்களை மேற் கோள் காட்டியுள்ளார்.[27]

"அவ்வக்காலத்தில் கவிஞர்களால் காலத்திற்கும் இடத்திற் கும் ஏற்ப மேற்காட்டிய இரத்தினச் சுருக்கச் செய்யுளிற் கூறப் படாத பொருள்கள் சிலவற்றைத் தூதுவிட்டதாகப் பாடிய பிர பந்தங்களும் பல உள்ளன. அவை வசைவிடுதூது, நெல்விடு தூது, துகில்விடுதூது முதலியன; பின்னும் அன்றில், இருள்வாசி (இருவாட்சி), குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி முதலிய வற்றின் மலர்களும், புறவு, பொன் முதலியனவும் தூதுக்குரிய னவாக தத்தம் நூல்களிற் கவிஞர்கள் புலப்படுத்தியிருக்கின்றனர். புகையிலை விடுதூது என்னும் ஒரு பிரபந்தம் பிற்காலத்ததாகக் காணப்படுகிறது" என்று தூது நூல்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

முதலில் தூதின் இலக்கணம் குறித்தவர், பின் தூது நூல் களின் பட்டியலைக் குறித்தார். அடுத்து, பிற இலக்கிய நூல் களில் தூதினைப் பற்றிய செய்திகளைப் பட்டியலிட்டுள்ளார்.

அவற்றில் சிற்றிலக்கியத்தில் உள்ளவற்றை ஒரு கருத்தாக வும், பக்தி இலக்கியத்தில் உள்ளமையை ஒருகருத்தாகவும் காப்பியத்தில் உள்ளமையை ஒரு கருத்தாகவும், பிற சிற்றிலக்கிய நூலில் தமிழைத் தூது அனுப்பலாம் என உள்ளதை ஒரு கருத் தாகவும் நெறிப்படுத்தித் தொகுத்துத் தந்துள்ளார். கலம்பகம், அந்தாதி முதலியவற்றின் இடையே அமைக்கப் பெறுவதும் உண்டு என்பதனால் தனித்து முதலில் கூறியுள்ளார்.

---

26. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது, பக். 8
27. அது ப. 4

தேவாரம் முதலிய திருமுறைகளிலும், திவ்வியப்பிரபந்தம் முத லியவற்றிலும் தூதின் வகைகள் பல ஆங்காங்கு அமைந்துள்ளன.

குணமாலை கிளியைச் சீவகனிடத்தில் தூது விடுத்ததாகச் சீவகசிந்தாமணியிற் கூறப்பட்டிருக்கும் பகுதியும், வாசவதத் தையின் பிரிவாற்றாமையினால் வருந்திய உதயணன், மான் முதலியவற்றை நோக்கிக் கூறியுள்ளதாக உள்ள பெருங்கதைப் பகுதியும் (3. 2. 143-206) இங்கே அறியற்பாலன.

தமிழைத் தூது விடுத்ததாக ஒரு பிரபந்தமும் இதுகாறும் காணப்படாவிடினும் அங்ஙனம் கூறுதலும் மரபென்பது, கவிஞர் பெருமானாக விளங்கிய திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூதில், ''செந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப் பின்னை தாஞ்செல்லா'' என்று கூறியிருப்பதால் அறியலாகும்'' 28 என ஆய்வு நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு தெளி வாக்கியுள்ளார்.

காப்பியங்களைப் பதிப்பித்தமையால் அவருக்குத் தூது பற்றிய கருத்து மேலும் விளக்கம் பெற்றது. அதனால் ''தூது நூல்கள் இருவகைப்படும் என்றார். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் அவர்பால் விடுப்பது ஒருவகை; தலைவனது அருள் வேண்டித் தலைவி விடுப்பது ஒருவகை. தமிழில் இவை யிரண்டும் கலிவெண்பாவில் விளக்கப்படும்'' 29 என மேலும் விளக்கம் தந்துள்ளார்.

''புகையிலை விடுதூது'' நூலைப் பதிப்பிக்கும்போது தோன்றிய இக்கருத்தினைப் போலவே மேலும் சில கருத்துக்கள் அவருக்குத் தோன்றின. அவற்றையும் அந்நூலின் முகவு ரையில் குறித்துள்ளார். ''பாட்டுடைத் தலைவருக்கு ஏற்ற பொருளைத் தூது விடுத்தலும், புலவர் தம் விருப்பத்திற்குரிய பொருளைத் தூது விடுவதாக அமைத்தலும் வழக்கம். புகை யிலை விடுதூது 59 கண்ணிகளை உடையது. ''இத்தூதில் புகையிலையின் பெருமைகள் முதல் 53 கண்ணிகளில் சொல்

28. அது ப. 5
29. புகையிலை விடு தூது (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1939 ப. 3.

லப்படுகின்றன. தூதுவிடும் செய்தி ஏனைய ஆறு கண்ணி களிற் சுருக்கமாக அமைந்துள்ளது. இதனால் இதைப்பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.'' 30

புகையிலை போன்ற பொருட்களைப் பற்றிய நினைவு கவிஞருக்குத் தோன்றினால் இழிவைக் குறிக்கப் பயன்படுத்த லாம் என்னும் சிந்தனையும் தோன்றும். அதனால் தூது இலக்கியத்தைத் தமக்குப் பிடிக்காதவருக்குப் பயன்படுத்தும் வசை இலக்கியமாகவும் மாற்றுவர். இக்கருத்தையும் குறித் துள்ளார்.

''ஒருவரைப் புகழ்ந்து பாடுவதற்குத் தூதுப் பிரபந்தங் களைப் புலவர்கள் பயன்படுத்துவதைப்போல் இகழ்ந்து பாடு வதற்கும் இப் பிரபந்தம் ஒரு கருவியாவதுண்டு. மிதிலைப் பட்டி கவிராயர்களுள் ஒருவர் தமக்கு இடையூறு செய்த ஒருவர் மீது 'கழுதைவிடு தூது' என்று ஒரு பிரபந்தம் இயற்றியுள்ளார். அத் தூது ஒரு வசைப் பிரபந்தம்''. 31

'அழகர் கிள்ளைவிடு தூது' பதிப்பித்தபோது 'இரத்தினச் சுருக்கம்' குறிப்பிடும் பத்துப் பொருட்களை தூதாக விடப்பெற வேண்டும் என்ற வரையறைக்கு மூலம் தேடி அகப்பட வில்லை என்று நேர்மையுடன் ஒப்புக்கொண்டார். ''கவிஞர்கள் இப்பத்தும் அல்லாத வேறுபல பொருட்களை விட்டதாகவும் செய்யுளியற்றினர். இப்பத்திலும் மயில், பூவை 'குயில் என்ப வற்றைத் தூதுவிட்டதாக அமைந்த பழைய நூல்கள் இப் பொழுது காணப்பட்டில'' 32 என்று ஆய்ந்து குறித்துள்ளார். எயினம், மயில், கிள்ளை, மேகம், பூவை, பாங்கி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகிய பத்துமே தூதுப்பொருள் கள் என இரத்தினச் சுருக்கமும், பிரபந்தத் திரட்டும் கூறி யுள்ளன. ''மேலே குறித்த வரையறைக்குள் அடங்காமல், பணவிடுதூது, முகில்விடு தூது, தமிழ்விடு தூது, மான்விடு தூது

30. அது பக். 4
31. அது பக். 4
32. அழகர் கிள்ளைவிடு தூது (உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1957, பக். 8-9

வசைவிடு தூது, சவ்வாது விடுதூது, நெல்விடு தூது, விறலிவிடு தூது என்னும் தூதுகள் தமிழிலே உள்ளன. நூற்போக்கிலே புலவர்களால் புலப்படுத்தப்படும் தூதுப் பொருட்கள் பல. மலர்கள், பறவைகள், விலங்குகள் முதலிய பொருள்கள் பல வற்றையும் அவ்வரிசையிற் காணலாம். ''மேலே குறித்த தூதுப் பொருள்களை விட்டதாக அமைந்த நூல்களும், ஒரு வகையிலேயே பல இருக்கின்றன. பணவிடுதூது, நெஞ்சுவிடு தூது, விறலிவிடு தூது என்பன இதற்கு உதாரணங்களாகும்''[33] என்று விளக்கியுள்ளார்.

தமிழ்ப் பெருநூல்களான இராமாயணத்திலும் பாரதத்திலும் வரும் அனுமன் தூது, அங்கதன் தூது, கிருட்டிணன் தூது என்பன விரிவுடையதும் நாடறிந்ததுமாம் செய்திகளாம்.

முகவுரை :

ஒரு நூலை முழுமையாக அறிந்து கொள்ள முகவுரை உதவவேண்டும் என்னும் நோக்கிலேயே எல்லா முகவுரை களையும் அமைத்துள்ளார் உ. வே. சா. நூலின் இயல்புக்கு முகவுரை எழுதும் போக்கினையும் மாற்றிக் கொண்டுள்ளார் எனலாம். நூலுள் நுழைந்து ஆராய ஆராயக் காலந்தோறும் வளர்ச்சி மிகும். அவ்வளர்ச்சிக்கு ஏற்ப முகவுரையும் மாறுவது இயல்பே. பிறபிற நூல்களுக்கும் உ. வே. சா. முகவுரை எழுதியுள்ளார். அம்முகவுரைகள் அந்நூல்கள் தோன்றிய சூழ்நிலையை மையப்படுத்தியனவாக உள்ளன. தம் பதிப்புக் களுக்குத் தாம் எழுதிய முகவுரைகளில் விரிவையும் ஆய்வு நோக்கையும் மையமாகக் கொண்டிருந்தார்.

முகவுரைகளில் நூலைப் பெறுவதற்கு உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளார். சிற்றிலக்கிய நூல்களை முதலில் 'செந்தமிழ்', 'கலைமகள்', 'சிவநேசன்' போன்ற இதழ்களில் வெளியிட்டார். அதனால் அவ்விதழ்களுக்கும் நன்றி தெரிவித் துள்ளார்.

சில ஏடுகளைத் தாம் பெறுவதற்குப் பட்ட பாட்டையும் கடும் உழைப்பையும் தவறாது அம் முகவுரையில் குறிப்பிட் டுள்ளார்.

---

33. அது, பக். 9

இவ்வாறே தூது நூல்களுக்கும் முகவுரை அமைந்தன. பிற உலா, கோவை, பரணி நூல்களுக்கும் அமைந்தன. வண்டுவிடு தூது (1888), தமிழ்விடு தூது (1930), தென்றல் விடு தூது (1932), மான்விடு தூது (1936), அழகர் கிள்ளை விடுதூது (1938), புகையிலை விடு தூது (1939) போன்ற தூது நூல்களைப் பதிப்பித்தார். இந்த நூல்களின் முகவுரைகள் அமைப்பாலும், உள்தலைப்பாலும், பகுப்பாலும், போக்காலும் ஒற்றுமையே கொண்டுள்ளன.

இறைவணக்கப் பாடலை அமைப்பதை முகவுரையில் வழக்க மாக்கி இருந்தார். தென்றல் விடு தூது நூலுக்குப் பொருத்த மாகத் தேவாரப் பாடலை அமைத்தார். தமிழ்விடு தூதுக்கு ஏற்பத் திருவாலவாய்த் திருத்தாண்டகம் அமைக்கப்பட்டிருந்தது.

அடுத்து, தூதின் பொது இலக்கணத்தைக் கூறுமுகமாகத் தூதிற்கு வாயில்கள் எவை என்பதையும் அகத்திணைப் பகுதி யிலும், புறத்திணைப் பகுதியிலும், தூது அடங்கும் என்பதையும் குறித்துள்ளார். 'காமம் மிக்க கழிபடர்கிளவி' என அகத் திணைப் பகுதியாகவும், 'கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கமும்' எனப் புறத்திணைப் பகுதியாகவும் இயங்கும் என்றார்.

பாடினோர், பாடப் பெற்றோர் வரலாறு, கண்ணிகளின் எண்ணிக்கை, தூது விடும் பொருள் பற்றிய வேறு இலக்கண நூற்செய்திகள், தலப்பெருமை, மற்றைத் தூதுப் பொருட்களி னும் தூதுவிடும் பொருளின் சிறப்பும் அது இடம் பெறும் கண்ணிகளும், நூலிற் கண்ட தூதுப் பொருளின் சிறப்புகள், புராணங்களிலும் கதைகளிலும் தூதுப் பொருள் சிறப்பிடம் பெறும் வரலாறு பழமொழி, சிலேடை, தொனி, யமகம் போன்றவை இடம்பெறும் பாடல் வரிகள், இவைகளின் எண் குறித்த பட்டியல், ஏட்டுச்சுவடி கிடைத்த செய்தி, கொடுத்தவரின் வரலாறு, செய்தி பரிமாறியோர், வெளியிட்ட இதழாசிரியர்க்கு நன்றி என்றவாறு இம்முகவுரைகளைப் பகுக்கலாம்.

கோவைகள் :

உ. வே. சா. பதிப்பித்த கோவைகளுள் சீகாழிக்கோவை (1903), திருவாவடுதுறைக் கோவை (1903), கோடீசுரக் கோவை (1932), பழமலைக்கோவை (1935), கலைசைக் கோவை (1935), சிராமலைக்கோவை (1937), திருவாரூர்க் கோவை (1937), திருக்கழுக்குன்றக்கோவை (1943) (இது அவர் மறைந்தபின் வந்தது) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

அகப்பொருள் ஒழுக்கத்தை நிரல்படக் கூறுவது கோவை இலக்கியமாகும். பண்டைத் தமிழ் இலக்கிய நூல்கள் அகப் பொருள் துறைகளை நிரல்படக் கூறவில்லை. காலந்தோறும் ஏற்பட்ட வளர்ச்சியால் புதிய சிற்றிலக்கிய வகை உருவாயிற்று. கோவை இலக்கணம் முழுமையும் உள்ளடக்கிய நூல் திருக்கோவையார். அதனை மாணிக்கவாசகர் இயற்றியுள்ளார். அகப்பொருள் மரபில் தோய்ந்த கோவை நூல்களில் இது, இறை வனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. கோவை இலக் கிய வகை வளர்ச்சிக்கு நல்வித்திட்ட நூல் திருக்கோவையார் தான். அதன் வழியே தோன்றிய நூல்கள் யாவும் இறையுணர் வைப் பெருக்க எழுந்தன.

உ. வே. சா. அவர்களும் கோவைகள் நன்னெறி நூல்களாயி னமையால் பதிப்பித்தார். இக்கோவை நூல்களுக்கு எழுதிய முகவுரைகளில் பெரும்பாலும் பழைய கோவை நூல்களின் பெயர்கள், கோவை நூல்களின் பொது இயல்புகள், கோவை பற்றிய இலக்கண நூல்களின் கருத்துக்கள், எடுத்தாண்ட உரை யாசிரியர்கள், கோவை நூல்களின் வகைகள், செய்யுள் எண் ணிக்கை, பாடுபொருள், இந்நூல்கள் தோன்றக் காரணங்கள் போன்ற பல்வேறு செய்திகளும் அமைப்பு முறைமையில் மாற்றம் இன்றிக் காணப்படுகின்றன. முகவுரைகளின் முகப்பில் தேவாரப் பாடல்களே பெரும்பான்மை இடம் பெற்றுள்ளன.

''கோவை என்பது அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த தமிழ்ப் பிரபந்தங்களுள் முதன்மை வாய்ந்தது. ஏனைய சில பிரபந்தங்களில் அகப் பொருள் இலக்கியச் செய்யுட்கள் அமைந்திருப்பினும் கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து ஒருவரலாற்றுத் தொடர்ச்சி

அமையக் கோக்கப்பெற்றுப் பாடப் படுவதாதலின் இது கோவையென்னும் பெயர்பெற்றது. அகப்பொருட்குரிய ஐந்திணைகளும் அமைந்திருத்தலின் இஃது 'ஐந்திணைக்கோவை' எனவும் வழங்கப்பெறும்'' 34 என்கிறார். கோவைகள் கட்டளைக் கலித்துறை என்னும் பாவகையால் இயற்றப்பட்டன.

கோவைகள் அகப்பொருட் கோவை எனவும், நானூற்றுக் கோவை எனவும் பெயர் பெற்றன. ஐந்திணையேயன்றிக் கைக்கிளை, பெருந்திணை பற்றியும் இவை அமைந்திருந்தன. ஆண்பாற் கைக்கிளையே கூறப்பட்டது. 'வறிது நகை தோற்றல்' என்னும் துறை, கவிக்கூற்றாக உள்ளது. அகப்பொருள் காரணமாக இயற்றமிழாகவும், சந்தவகையில் இசைத் தமிழாகவும், கூற்று வகையால் நாடகத்தமிழாகவும் விளங்கும் கோவை முத்தமிழே என்று கோவை நூலின் சிறப்பினை ஆய்ந்து குறித்துள்ளார் 35 உ. வே. சா.

கோவைகள் ஒரே அமைப்புடையவனாலும், மனிதர் ஒரே அமைப்பிலிருந்தாலும் தோற்றத்தில் வேறுபடல் போல் வேறுபட்டவை என விளக்கி, இந்நூல்கள் பெரும்பான்மை தலப் பெயரோடு சேர்ந்து வருவதால் தலப் பெருமைகளையே பெரிதும் பேசும்; அதனால் ஒவ்வொரு கோவையும் தனித் தனி வகையால் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன என்பார் டாக்டர். உ. வே. சா.

நூலின் முகவுரையிலேயே பாடினோர், பாடப்பெற்றோர் பாடப் பெற்ற பாடல்களின் எண்ணிக்கை, தலப்பெயர்கள் தலப் பெயர்க்காரணம், சங்க இலக்கியங்களிற் கண்ட செய்திகள், இறைவியின் திருப்பெயர்கள், பிற இனத்தவர் பெயர்கள், துணை செய்தோர், தீர்த்தம், சிற்பம், சிலாசாசனம், மண்டபம், தேவாரம், புராணம், பிரபந்தங்கள், தனிப்பாடல், நூலாசிரியர் வரலாறு, நூலாராய்ச்சி, அவற்றிலுள்ள கதைகள், புராணச் செய்திகள், குறள் முதலியவற்றின் சொல், தொடர், பொரு

---

34. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள் (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1932, ப. க. 12

35. சிராமலைக்கோவை (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1937. ப. 5

ளாட்சி, பிறநூல்கருத்துக்கள், பழமொழி, மேற்கோளாட்சி, குறிப்பு அணிகள், அரும்பதங்கள், தம் அனுபவம், ஏடு உதவியோர், நன்றிக்குரியோர் என யாவற்றையும் தமக்கே உரிய நடையில் எளிமையாகவும் சுவையாகவும் ஆற்றொழுக்காக எழுதியுள்ளார்.

கோடீச்சுரக் கோவைக்கு நூன்முகம் எழுதியதோடு, கோடீச்சுரக் கோவையின் பொருட்டொடர்பு பற்றி அழகிய ஆய்வுக் கட்டுரையே எழுதியுள்ளார். இருபத்தைந்து பக்கங்கள் உள்ள கட்டுரை அது. இவ்விரண்டோடு மூன்றாவதாகக் 'கோடீச்சுரக் கோவை ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் நூலுள்காணும் 1) தலச் செய்திகள் 2) சிவபெருமான் திருநாமங்கள் 3) திருமேனி தொடர்பான தொடர்கள், திருக்கரம் தொடர்பான தொடர்கள், திருக்கழுத்து, முகம், வாய், விழி, செவி, முடி, பெருமை, இயல்பு, பராக்கிரமங்கள், அருட்செயல்கள், பிற சிறப்புகள், வேறு தலங்கள், பிற திருநாமங்கள் தொடர்பான தொடர்களை ஆய்வாளர்கட்குப் பயன்படும்படி பட்டியலிட்டுள்ளார். 4) தொனி, பலவகைத் தொனியில் அமைக்கப்பட்ட தெய்வப் பெயர்கள், மக்கள், வான்வகை, பிற பொருள்கள், எண்கள், இலக்கணம், நூல்களின் பெயர்கள், முத்தமிழ், நால்வகை இடம், காலம், தொழில், சாதி போன்றவற்றையும் தொகுத்தளித்துள்ளார். 5) பொருளணிகள் எனப் பதினைந்து அணிகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளமை 6) சொல்லணிகள் ஐந்து இடம் பெற்றுள்ளமையையும் 7) யாப்பு நயம் அறுவகையில் உள்ளமையையும் காட்டியுள்ளார். 8) உலக வழக்கு, 9) வழக்கங்கள், 10) பழமொழிகள் ஆகியவற்றையும் குறித்துள்ளார். இலக்கிய, இலக்கண, சமூக ஆய்வுகளையும் ஒரு நூலைப் பற்றிய அகழ்வாய்வையும் செய்து ஆய்வில் முழுமையைப் புலப்படுத்தியுள்ளார். அவரின் பரந்த ஆய்வறிவு' இந்நூலின் மூலம் நன்கு வெளிப்படுகிறது.

உலாக்கள்

உ. வே சா. அவர்கள் திருப்பூவண நாதருலா (1904) திருக்காளத்தி நாதருலா (1904), தேவையுலா (1907), திருவாரூருலா (1905) சொக்கநாதருலா (1931), தஞ்சைப் பெருவுடையாருலா (1932), கடம்பர்கோயிலுலா (1932), சங்கரலிங்கவுலா

(1933), திருவிலஞ்சி முருகன் உலா (1935), திருக்கழுக்குன்றத் துலா (1933) போன்றவற்றிற்கு முகவுரைகள் எழுதிப் பதிப்பித் துள்ளார்.

உலா நூல்களின் முகவுரைகளும் பிற சிற்றிலக்கிய நூல் களின் அமைப்பை ஒட்டியே உள்ளன. இம்முகவுரைகளின் முகப்பிலும் தேவாரம், திருவாசகம், திருவிளையாடற் புராணப் பாடல்களின் ஒன்றோ சிலவோ இடம் பெற்றுள்ளன. திருக் காளத்தி நாதருலாவில் தாம் இயற்றிய பாடலையே வெளியிட் டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

உலா நூல்களுக்கு எழுதிய முகவுரைகளிலும் பொதுவான உள்ளடக்க முறையே விளங்குகின்றன. இவற்றில் உலாவின் பொது இலக்கணம், ஏழு பருவ மகளிர் செயல், தலச்சிறப்பு, பேறு பெற்றோர், தலத்தைப் பற்றிப் பாடியோர், நூலாசிரியர் வரலாறு, பாடற் கண்ணிகளின் எண்ணிக்கை, புராணக்கதை கள், நூலின் பொருள்நயம், தேவாரங்களில் காணப்படும் தலங்கள் பற்றிய குறிப்பு, நூலாராய்ச்சி, ஏடு கிடைத்த முறை, நன்றி பாராட்டப்படுவோர் போன்ற செய்திகளே உள்ளன.

"உலாவென்பது தமிழ் மொழிக்குரிய தொண்ணூற்றாறு வகைப்பிரபந்தங்களுள் ஒன்று. தலைவன் வீதியிடைப்பவனி வரும் சிறப்பைப் பற்றிக் கூறுவதாதலின் இஃது இப்பெயர் பெற்றது; (உலா-பவனி) அவ்வாறு உலா வருகையில் பேதை முதற் பேரிளம் பெண் ஈறாகவுள்ள ஏழு பருவ மகளிரும் அத் தலைவனைக் கண்டு விரும்பி மால்கொண்டனரென்னும் பொருளை அமைத்து அவனுடைய பலவகையான மேம்பாடு களும் புலப்படக் கலி வெண்பாவாற் பாடப்படுவது இது. இவ் வேழு பருவ மகளிரும் பொதுமகளிராவார்; இது தொல். புறத் சூ. 30, நச்சினார்க்கினியருரையால் விளங்கும். இந்நூலிற் கூறப்பட்டவர்கள் உருத்திர கணிகையர்[36] என்று தமிழ்ப் பண் பாட்டில் மகளிர் நிலை உள்ளமையை மனத்தில் கருதிச் சான்றோடு ஆராய்ந்து குறித்துள்ளார்.

---

36 கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள் (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1932. பக் 218.

ஏழு பருவமகளிரும் பொது மகளிரே என இலக்கியவழியும் சான்று காட்டியுள்ளார். சீவகசிந்தாமணியில் சீவகன் உலா வருகையில், ஆசிகூறிய மகளிரைக் கற்புடையோர் என்றும், அவனைக்கண்டு மயங்கியவரை ஒழிந்தோர் என்றும் நச்சினார்க்கினியர் தம் உரையில் குறித்துள்ளமையைச் சான்றாக்கினார். மேலும் பெருங்கதையில் உதயணன் உலாவருகையில் 'உத்தம மகளிர் ஒழிய' பிறர் காமுற்ற காட்சியையும் காட்டிப் பொதுமகளிரே என நிறுவினார். 37

திருப்பூவணநாதருலா, திருக்காளத்தி நாதருலா போன்றவற்றிற்கு ஆய்வுப் பட்டியல்களைப் பதிப்பித்துள்ளார். திருக்காளத்திநாதருலாவில் சில கண்ணிகட்குப் பொருள் விளங்காமையால் உரை எழுதவில்லை என்பதனையும் 91-ஆம் கண்ணியில் சிவபெருமான் இத்தலத்தில் ஆகாய வடிவாக அமைந்துள்ளான் என்றிருப்பதற்குத் தமக்கு வேறு ஆதாரம் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டு ஆய்வு தொடர்வதற்கு வழியும் காட்டியுள்ளார்.

முருகக் கடவுளே திருஞானசம்பந்தராகத் தோன்றினார் என்னும் கொள்கையைத் திருவிலஞ்சி முருகன் உலாவை இயற்றியவர் கொண்டிருந்தார் என்னும் செய்தியை அந்நூலிலிருந்தே மேற்கோள் காட்டியுள்ளார். இந்நூலுள் பொருள் நயம், சந்தம், இசை, தசாங்கம், யமகம், மடக்கு, திரிபு, சிலேடை, உவமை, உலகவழக்கு, வட்டாரச் சொற்கள் போன்ற பட்டியல்களை அளித்துள்ளார். பேதைப் பெண்ணை விளக்குகையில், அவளது மொழி பதினெட்டு மொழிகளுக்கு மேல் 'இன்னமொரு பாஷையெனு மொழியாள்' என்று நூலாசிரியர் விளக்கியுள்ள நயத்தைப் பாராட்டியுள்ளார் உ.வே.சா.38

திருக்கழுக்குன்றத்து உலாவிற்கு முகவுரை எழுதியபோது புதிய செய்தியை இணைத்துள்ளார். ''இது புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளையுள் அடங்கும். பாடாண்

37 திருவிலஞ்சி முருகன் உலா (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1956, பக். 3-4

38 அது பக். 6-7

திணைக்குரியதுமாம்'' என்னும் செய்தியை இறுதியாகக் குறித்துள்ளார். 39

புராணங்கள் :

புராணங்களில் உ. வே. சா. முதலில் திருக்குடந்தைப் புராணத்தை 1883-ல் பதிப்பித்தார். பிறகு பல ஆண்டுகள் கழித்து திருப்பெருந்துறைப் புராணத்தைப் (1882)பதிப்பித்தார். வீரவனப் புராணம் (1903), சூரை மாநகர்ப்புராணம் (1904), தியாகராச லீலை (1905), திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (1906), தனியூர்ப் புராணம் (1907), திருக்காளத்திப் புராணம் (1912), விளத்தொட்டி புராணம் (1934), தணிகாசலப்புராணம் (1935), ஆற்றூர்ப்புராணம் (1935), வில்லைப்புராணம் (1940) முதலிய பல புராணங்களைத் தொடர்ந்து பதிப்பித்துள்ளார்.

மக்கள் மனத்தில் பக்தியை வளர்ப்பதற்காகவே புராணங்கள் இயற்றப்பட்டன என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ள உ. வே. சா. தாமும்பக்தியைப் பரப்பும் நூல்களையே பதிப்பித்திருப்பதாக உணர்த்தியுள்ளார். இப்பக்தி உணர்வினைத் தல புராணங்களே அந்நாளில் பரப்பின என்றும் எண்ணிக்கையில் பிற புராணங் களைக் காட்டிலும் கூடுதலாக இவையே உள்ளன என்றும் விளக்கினார். காப்பிய இலக்கணம் அமையச் சிலர் புராணங் களைப் பாடினர் என்பதற்குச் சான்றுகளாகச் சேதுப்புராணம், திருவிளையாடற்புராணம், திருக்குற்றாலப் புராணம், காஞ்சிப் புராணம், அருணாசலப்புராணம், திருக்கழுக்குன்றப் புராணம், சீகாளத்திப் புராணம் போன்றவற்றைக் காட்டினார்.

புராணங்களைப் பதிப்பித்து முகவுரை எழுதியபோது பொதுச் செய்திகள் ஏதும் எழுதினாரல்லர். தலபுராணங்களில் அத்தலங் களின் இருப்பிடம், அவற்றிற்குள்ள வேறு பெயர்கள், விநாயகர், தல இறைவன், தல இறைவி ஆகியோர் திருப்பெயர்கள், புராணக் கதைகள், தீர்த்தம், மரம், வழிபட்டமையால் அருள் பெற்றோர், நூலாசிரியர் வரலாறு, பாடல் எண்ணிக்கை, நூலின் உறுப்புகள், ஏடு, பொருள், உதவி போன்றவற்றைக் கொடுத்தோர்க்கு நன்றி போன்றவை முகவுரைகளின் உள்தலைப்புகளாக உள்ளன.

---

39. அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கழுக் குன்றத்துலா (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1938, ப. 3.

புராணங்களுக்கு எழுதிய முகவுரைகளில் நிரம்ப வடமொழிச் சொற்களைச் சேர்த்துள்ளார்.[40]

தம்முடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் இயற்றிய புராணங்களாயின் அவற்றைச் சிறப்பித்துச் சொல்லியுள்ளார். ஆசிரியரிடம் கொண்ட ஈடுபாடு இதனால் வெளிப்படுகின்றது.

பரணிகள் :

உயிரினங்கள் தத்தம் இனத்தைப் பெருக்கவும் நிலையான வாழ்வை அமைத்துக் கொள்ளவும் போட்டியிடுகின்றன. இப்போட்டியில் வலிமை வாய்ந்தவை நிலைபேறடைகின்றன. இக்கோட்பாடு உயிர்களுக்கு மட்டுமல்லாமல் இலக்கியத்திற்கும் பொருந்தும். சூழ்நிலைக்கு ஏற்பத் தம் நோக்கையும் போக்கையும் மாற்றிக் கொள்ளும் இலக்கிய வகைகளே வலிமையானவையாய் மக்கள் மனத்தில் நிலைத்த இடத்தினைப் பிடிக்கின்றன.

காதலும், வீரமும் பண்டைத்தமிழ் இலக்கியத்தில் பெருமளவாய் இயங்கின. போர்க்களம் மக்களிடையே சிறப்பாகப் போற்றப்பட்டது. ஏர்க்களம் அதன் இன்றியமையாமையை உயர்த்தியவுடன் புலவர் நாவில் அதுவும் பொலிந்தது. ஏர்க்களமும் போர்க்களமும் களத்தொழிலில் வேறுபட்டனவென்றாலும் அக்களத் தொழில் முறைகளில் ஒற்றுமை உள்ளன. அதனால் தொல்காப்பியர் காலத்திலேயே,

> 'ஏரோர் களவழியன்றிக் களவழித்
> தேரோர் தோற்றிய வென்றியும்' [41]

என இரண்டையும் இயைபுபடக் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் உரை எழுதியபோது,

''நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப்போர் அடித்து அதரி திரித்துச் சுற்றத்தோடு நுகர்வதற்கு முன்னே, கடவுட்பலி கொடுத்துப் பின்னர் பரிசிலர் முகந்துகொள்ள வரிசையின் அளிக்

---

40. டாக்டர் உ. வே. சா. பதிப்புப் பணி - ஓராய்வு, பக். 265.
41. தொல்காப்பியம்,புறத்திணையியல், 24.

குமாறு போல, அரசனும் நாற்படையும் கொன்று களத் திற்குவித்து, எருதுகளிறாகவாண் மடலோச்சி அதரிதிரித்துப் பிணக்குவையை நிணச்சாற்றோடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனா வேண்மாள் இடந்துழந்தட்ட கூழ்ப்பலியைப் பலியாகக் கொடுத்து எஞ்சி நின்ற குதிரை யானைகளையும் ஆண்டுப் பெற் றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலாம்'' 42 என்று நயம்பட உருவகமாக உறவுபடுத்தினார்.

ஏர்க்களமும் போர்க்களமும் அறக்களமாகக் கொண்டிருந்த இயைபு நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக மாறவும் தொடங் கின. அதனால் மறப்புகழ் அறப்புகழாக மாறியது. போர்க் களத்தில் வலிமைவாய்ந்த யானைப் படையின் சிறப்பே பெரி தும் பேசப்படும் நிலை உருவாயிற்று. அதனால் 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி என்ற இலக்கணம் தோன்றியது. போர்க்களம் பாடும் போக் கிலும் மாற்றம் ஏற்பட்டுப் பரணி வடிவெடுத்தது. இவற்றுள் 'கலிங்கத்துப் பரணி' சிறந்த நூலாக விளங்கத் தொடங்கியது. ''கலிங்கத்துப் பரணியின் செப்பத்தைப் பார்க்கும்போது அது பல புலவர் பாடிய பரணிகளைப் பயின்றதனால் உண்டான பயனென்றே எண்ணவேண்டியிருக்கின்றது'' 43 என உ.வே.சா. குறித்துள்ளார்.

இக் கலிங்கத்துப் பரணி போற்றியது போர்த்திறம் என்றாலும் நாளடைவில் 'தறுகண்மை' என்பதற்கு 'வீரம்' என்பது மாறி 'சான்றாண்மை' என்பதே பொருளாக நின்றது. 'களம்பு கலோம்புமின்' என்ற மறவுரைகளெல்லாம் பின்னாளில் அறம் உணர்த்தத் தொடங்கின. கலிங்கத்துப் பரணியிலேயே மன்னன் தெய்வத் தோற்றமாகப் போற்றப்பட்டான். அதனால் தெய் வத்தையே பரணி இலக்கியத்தின் தலைவனாக மாற்றும் போக்கு வளர்ந்தது.

உ. வே. சா. அவர்களும் மறம் வளர்த்த பரணிகளை விட்டுவிட்டு பக்தியை வளர்ப்பனவற்றைப் பதிப்பித்தார். தக்கயாகப் பரணி (1930), பாசவதைப் பரணி (1933) ஆகிய

---

42. அது
43. பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், ப.69.

வற்றைப் பதிப்பித்தார். பொதுச் செய்திகளும், நூலின் சிறப்பு ஆய்வுக் குறிப்புகளும் போல்வனவற்றை முகவுரைகளாக அமைத்தார் உ. வே. சா.

பரணியின் இலக்கணம், பெயர்க்காரணம், இடம்பெற்றுள்ள புறத்துறைகள், பழைய பரணி நூல்கள், யாப்பும் உறுப்புகளும் போன்ற பொதுச் செய்திகள் இவற்றில் இடம்பெற்றன.

பாசவதைப் பரணியின் முகவுரை செய்நன்றியறிவு, பக்தி ஞானம் போன்ற உட்டலைப்புகளைக் கொண்டு முழு பக்தி நூலாக மாறியதைக் காட்டும் வண்ணம் அமைந்திருந்தது. பாசவதைப் பரணி "பாசத்தைப் போக்கிச் சிவஞானம் அருளிய செயலை உருவக வகையிலமைத்துப் பாசமன்னனொடு பொருது வென்றதாகப் பாடப்படுகிறது" என்றும், இவ்வாறு பண்புகளை உருவகம் செய்வது திருக்குறளில் உண்டு என்றும் கூறி "அழுக்காறு என ஒரு பாவி, இம்மை என ஒரு பாவி நாணென்னும் நல்லாள்" என்ற சான்றுகளைத் தந்து விளக்கியுள்ளார் டாக்டர் [44].

அந்தாதிகள் :

உ. வே. சா. அந்தாதி நூல்களுள் திருமயிலை திரிபந்தாதி (1930). சங்கரநயினார் கோயில் அந்தாதி (1934), திருமயிலை யமகவந்தாதி (1935) ஆகிய மூன்று நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

அந்தாதி என்னும் சிற்றிலக்கியம் தோன்றிய காரணம், அந்தாதிக்குரிய இலக்கணம், அந்தாதி வகை, அந்தாதி இடம் பெறும் இலக்கிய நூல்கள், முதல் நூல்கள், பாடப்பெற்றுள்ள பாவகைகள் போன்ற ஆராய்ச்சிக் கொள்கைகளை இந்நூலில் முகவுரையாக அமைத்துக் கொண்டார்.

44, பாசவதைப் பரணி (உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1933, ப. 6

அந்தாதி, பக்தியாலும், நன்றியறிவாலும் தோன்றியது என இந்நூல்கள் வழி அறிய முடிகின்றது என்றார். 45 அந்தாதியின் வகைகளாகக் கலித்துறை அந்தாதி, வெண்பாவந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, திரிபந்தாதி, யமகவந்தாதி போன்றவை உள்ளன என ஆராய்ந்து குறித்துள்ளார். நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ள அந்தாதியைப் பயிலலாம் என்றும் பயன் நோக்கிக் குறித்துள்ளார். 46

யமகவந்தாதி நூலின் நடை கடினமாகவே அமைந்துள்ளது: ''குணம் : வைதர்ப்பம். அதனுட் 'செறிவும் தெளிவும் இன்பமும் இல்லாதவாறு ஓர்ந்துணர்க' (1, உரை) என்று இதன் உரையிற் கூறப்படுதல் காண்க. புறநடைகளாகிய இலக்கண விதிகள் பலவற்றிற்கு இலக்கியமாகிய பகுதிகளை இதிற் காணலாம். யமக நோக்கில் பலவகையான வேறுபாடுகள் இதில் அமைக்கப்பட்டுள்ளன ; அவற்றுள் இதன் உரையில் காட்டப்பட்டன வருமாறு :- ஒற்றுமிக்கது (3) ஒற்று உள்வழிக் குறைந்தது(7) தந்நகரம் சிறப்புனகரமானது. (20) மிக வேண்டிய இடத்து இயல்பானது (35)

97-ஆம் செய்யுள் ககர வரிப்பாட்டு ; அப்பாட்டில் ககர ஒற்றும் ககரவர்க்கத்து உயிர் மெய்களும் கெ, கௌ என்னும் இரண்டும் ஒழிந்த பத்துமே வந்துள்ளன. காப்பெனும் பொருளுடைய திதியென்பதை 'இதி' என்றும் (24) மகர மீனைத் 'தை' என்றும் (41) ஒன்றென்னும் எண்ணைக் 'க வெண்' என்றும் (72) இந்நூலாசிரியர் கூறுவார் ; இவை குறிப்பு மொழியென்று உரைகூறும்''47 எனக் கடினமான நூலுக்கும் ஆய்வு செய்து குறிப்புரையும், முகவுரையும் எழுதியுள்ள பாங்கு போற்றத்தக்கதாகும்.

---

45. இராமையர் இயற்றிய திருமயிலைத் திரிபந்தாதி(உ. வே. சா. பதிப்பு), சென்னை, 1946, ப. 1

46. சங்கரநயினார் கோயிலந்தாதி (உ. வே சா. பதிப்பு), மதுரை, 1934, ப. 2.

47. தாண்டவராயக் கவிராயர் இயற்றிய திருமயிலை யமக வந்தாதி (உ வே. சா. பதிப்பு), சென்னை, 1975, பக். 6-7.

இவ் வந்தாதி முகவுரைகள், பாடினோர், பாடப்பெற்றோர், நூலாசிரியர் வரலாறு, செய்யுள் எண்ணிக்கை, பாடப்பெற்ற தலம் பற்றிய பிற இலக்கியக் குறிப்புகள், அந்தாதி அல்லாத பிற சிற்றிலக்கிய வகைகளால் பாடப்பெற்றுள்ளமை, தலத்தின் பிறபெயர்கள், இறைவன், இறைவி பெயர்கள், மரம், தீர்த்தம், பேறுபெற்றோர், பிற தலவரலாறுகள், சிறந்த பாடல்கள், உரையின் அருமை, விளங்காதவை, நன்றி பாராட்டுதல் போன்ற செய்திகளை உள்ளடக்கியுள்ளன.

மாலைகள் :

மாலை, மணிமாலை நூல்களையும் பதிப்பித்துள்ளார் உ. வே. சா. திருக்காளத்தி நாதர் இட்டகாமியமாலை (1938) மகர நெடுங்குழைக்காதர் பாமாலை (1939), பழனி இரட்டை மணிமாலை (1932), களக்காட்டுச் சத்திய வாகீசர் இரட்டை மணிமாலை (1932), திருவாரூர் நான்மணிமாலை (1939) ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். வழக்கமான முகவுரை, உள்ளடக்கங்களே இவற்றிலும் உள்ளன.

மகர நெடுங்குழைக்காதர் பாமாலை முகவுரை, பதினாறு பக்கங்களையுடையது. ஆயின் நூலோ இருபது பக்கமே உள்ளது.

இம் முகவுரையில் இம் மாலை பாடிய நாராயண தீட்சிதர் திருநெல்வேலியில் சிறைப்பட்டிருந்தது, சொக்கநாத நாயக்கருடைய ஆட்சியில் அவர்தம் பிரதிநிதியாகத் திருநெல்வேலிச் சீமையை வடமலையப்பப்பிள்ளையன் ஆண்டது, பிள்ளையன் தமிழ்ப்புலமை, கொடைநலம், ஆட்சித்திறம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய சீர்மை, இம் மாலையின் அச்சுப்படி நூற்படி ஆகியவற்றைப் பெற்றமை ஆகியவற்றை உ. வே. சா. விளக்கியுள்ளார்.

அந்நாளைய அரசியல் நிலையை அறிந்து கொள்வதற்கு ஏற்ற கருவியாக இம் முகவுரை அமைந்துள்ளமை நினைவு கூரத்தக்கதாகும்.

வெண்பாக்கள் :

சிவசிவவெண்பா (1938), திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா (1939), திருக்குற்றாலச் சிலேடை வெண்பா (1940) ஆகிய வெண்பா நூல்களையும் உ. வே. சா. பதிப்பித்துள்ளார்.

சிவசிவ வெண்பாவில் பதின்மூன்று வெண்பாக்களில் தளைகள் வழு உள்ளமையைப் புலப்படுத்தியுள்ளார். முகவுரையில் தம் ஆய்வறிவைப் புலப்படுத்தியமைக்கு ஒரு சான்று இதுவாகும். மற்றைச் சிற்றிலக்கியப் பதிப்புகளில் உள்ள உள்ளடக்கச் செய்திகளே இவற்றிலும் உள்ளன.

சிலேடையமைதியாலும் வெண்பாயாப்பாலும் 'சிலேடை வெண்பா' எனப் பெயர் பெற்றது என்பதைத் **திருக்குற்றாலச் சிலேடை வெண்பா** முகவுரையில் எழுதுகிறார் உ. வே. சா. அதற்கு மாலை என்னும் பெயர் அமைந்ததைச் சான்றுகளுடன் நிறுவுகிறார்.

அஷ்டப் பிரபந்தங்களுள் சிலேடைகள் அமைந்த பிரபந்தமாகிய திருவேங்கடமாலையின் பெயரும்,

> ''சீலமறை யோர்வாழ் திருக்கழுக்குன் றத்து வெண்பா
> மாலை யொரு நூறு மகிழ்ந்துரைக்க''

என்ற திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பாச் செய்யுளும், 'குற்றால மாலைக்கு' என்ற இந்நூற் செய்யுளும் இவ்வகைப் பிரபந்தங்களை மாலை என்று வழங்கும் மரபை உணர்த்துகின்றன'' என்பது அது. இது, வெண்பாநூற்கள் மாலை எனப் பெயர் பெறுவதை விளக்குகின்றதாம்.

குறவஞ்சிகள் :

குறவஞ்சி நூல்களையும் டாக்டர் உ. வே. சா. பதிப்பித்துள்ளார். தமிழ் இலக்கிய ஆய்வுக்குப் பெருமளவில் சிற்றிலக்கிய நூல்களைப் பதிப்பித்துத் தந்தவர் உ. வே. சா. ஆனால் சிற்றிலக்கிய ஆராய்ச்சியோ சிறிய அளவிலேயே பிறரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பரணி, பிள்ளைத்தமிழ், உலா, அந்தாதி, கோவை, சதகம் போன்ற சிற்றிலக்கிய வகைகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட அளவு, ஆய்வு

முயற்சி குறவஞ்சி, பள்ளு முதலிய இலக்கிய வகைகளுக்கு மேற்கொள்ளப்படவில்லை. திருக்குற்றாலக் குறவஞ்சி அறிமுக மான அளவுக்குப் பிற குறவஞ்சி நூல்கள் பெயர் பெறவில்லை. உ. வே. சா. அவர்களும் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி (1932) திருமலையாண்டவர் குறவஞ்சி (1938) ஆகிய இரு நூல்களையே பதிப்பித்துள்ளார்.

குறவஞ்சியைப் பற்றிய செய்திகளைக் குறைவாகவே முக வுரையில் எழுதியுள்ளார். சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாட கத்திற்கு நூன்முகம், பாட்டுடைத் தலைவரான தஞ்சை சரபோஜி மன்னர் வரலாறு, குறவஞ்சி நாடக நூன்முகம் என மூன்று தலைப்புகளில் ஆய்வுரை எழுதியுள்ளார். கல்வெட்டுக்கள், செவிவழிக்கதைகளான நாட்டுப்புறக் கதைகள் முதலானவற் றையும் கொண்டு ஆய்வுரை எழுதியுள்ளார்.

திருமலையாண்டவர் குறவஞ்சியில் பேச்சு மொழிச் சொற்கள் நிரம்ப உள்ளமையைக் குறை என்று கூறியுள்ளார். **இலக்கிய யத்தில் கொச்சை வழக்கு இடம்பெற்றால் மொழியின் நிலைத்த தன்மை சிதையக்கூடும் என்னும் கோட் பாட்டினைக் கொண்டவர் உ. வே. சா.** என்பதனை இக்கூற்று நமக்குக் காட்டும்.

பஞ்சரத்தினம் :

திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம் என்னும் சிற்றிலக்கிய நூலையும் உ. வே. சா. பதிப்பித்துள்ளார். காவிரியில் மிதந்து வந்த ஏடுகளை ஒருவர் எடுத்து வந்து தர அவற்றையே பதிப்பித்ததாக முகவுரையில் கூறியுள்ளார் உ. வே. சாமிநாதன். கல்வியறிவில் சிறந்து விளங்கிய பண்டைத் தமிழர்கள் அறிவுச் செல்வங்களைத் தம் அறியாமையால் ஆற்றிலும் இட்ட கொடுமையை இந்நிகழ்ச்சி நமக்குக் காட்டுகிறது.

பிள்ளைத்தமிழ்கள்:

பிள்ளைத் தமிழ் நூல்களையும் உ வே. சா பதிப்பித் துள்ளார். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், பழநிப் பிள்ளைத்தமிழ் போன்றவற்றைத் தம் ஆசிரியர் இயற்றிய திருத்தவத் துறைப் பெருந்திருப்பிராட்டி

யார் பிள்ளைத்தமிழ், திருவெண்காட்டுப் பெரியநாயகி பிள்ளைத் தமிழ், திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ், பிரம்ம வித்தியாநாயகி பிள்ளைத்தமிழ், பெருமணநல்லூர் திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆகிய பிள்ளைத்தமிழ் நூல்களைப் பயின்ற புலமையோடு ஆய்ந்து முகவுரை எழுதியுள்ளார். தம் ஆசிரியரின் சில பிள்ளைத் தமிழ் நூல்களையும் தாமே பதிப்பித்துள்ளார்.

பழநிப் பிள்ளைத் தமிழ்நூலின் முகவுரையில், பிள்ளைத் தமிழ் நூல்கள் பருவத்திற்குப் பத்தாகப் பாடப் பெறும் மரபு மீறப்பட்டு பருவத்திற்கு மூன்றாக அமைந்துள்ளது என்றும் இந்நூலைப் பாடிய சின்னப்பன் என்பவருக்கு முன்பே இவ்விதி மீறப்பட்டுள்ளது என்றும் குறித்துள்ளார். சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் பருவத்திற்கு ஏழு பாடல்களும் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் பருவத்திற்கு ஐந்து பாடல்களும் கொண்டுள்ளன என்று உ. வே. சா. குறித்துள்ளார்.[48]

திருவிருத்தம் :

திருத்தணிகைத் திருவிருத்தம் என்னும் சிற்றிலக்கியத்தையும் பதிப்பித்துள்ளார் உ. வே. சாமிநாதன். மிக்க நோயால் வருந்தித் தம்மைச் சரணடைந்த ஒருவர் வேண்டியதால் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் முருகனை எண்ணிப் பாடினார். அப்பாடல்களைப் பாடி அவரும் நோய்நீங்கினாராம். இச்செய்தி அவர்தம் முகவுரையில் உள்ளது.

கலம்பகம் :

சாமிநாதன் திருப்பாதிரிப் புலியூர்க்கலம்பக நூலையும் பதிப்பித்துள்ளார். இதன் முகவுரையில் இரட்டைப் புலவர்கள் இதனைப் புகழ்ந்த செய்தி சுட்டப்பட்டுள்ளது. அவர்கள் நடராசர் மீது கலம்பகம் பாடத் தூண்டுகோலாயிற்று இந்

48. சின்னப்பநாயக்கர் இயற்றிய பழநிப் பிள்ளைத்தமிழ் (உ. வே. சா. பதிப்பு) மதுரை, 1932, ப. 1.

நூல் 'கயிறு சார்த்திப் பார்க்கப் பாடுவார்' என்னும் வரலாற்றுச் செய்தியை முகவுரையில் குறித்துள்ளார். 49

பிரபந்தத் திரட்டுகள் :

மூன்று பிரபந்தத்திரட்டுகளைப் பதிப்பித்துள்ளார் உ. வே. சா. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு (1910), சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு (1932), குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு (1939) என்பன அவை. பிரபந்தங்களில் பல சிற்றிலக்கிய வகைகள் உள்ளன. அதனால் தனிநூலுக்கு எழுதிய முகவுரைபோல எழுதாமல் அப்பிரபந்தத் திரட்டுகளில் காணும் சிற்றிலக்கியச் செய்திகளை எல்லாம் ஆய்ந்து கட்டுரையாக்கியுள்ளார். அந்தந்த நூல்களைப் படிக்குமுன் உ. வே. சா. அவர்களின் ஆய்வுக் குறிப்புகளைப் படித்துவிட்டால், நூல்களைப் படிப்பது எளிதாகிவிடும். "தமிழில் அடிப்படையான உணர்ச்சி வருவதற்குப் பிரபந்தங்கள் 'உதவியாக' இருந்தன எனக் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு முகவுரையில் குறித்துள்ளார். 50

பதிப்புப்பாடு :

இங்ஙனம் உ. வே. சா. அவர்கள் ஆய்வாளர் என்னும் முறையிலும், பதிப்பாசிரியர் என்னும் முறையிலும் ஆற்றிய பெருந்தொண்டு மிக உயர்ந்தனவாகும். செம்மையாகப் பதிப்பித்துள்ள இப்போதைய பேரிலக்கியங்களைப் படிப்பதோ ஆராய்ச்சி செய்வதோ எளிதானகாரியமல்ல. அவை இரண்டிற்கும் அளவிலாப் பொறுமையும், நுண்ணிய ஆராய்ச்சி அறிவும் வேண்டும். இவற்றுக்கே இவ்வளவு தேவையெனில் ஏடுகளை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து வெளியிடுதல் எத்துணை கடினமானது? முதலும் முடிவும் இவையெனக் கண்டு பிடிப்பதற்கு இயலாவகையில் இராமபாணங்களால் துளைக்கப்பட்டு

49. தொல்காப்பியத் தேவர் இயற்றிய திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் (உ. வே. சா. பதிப்பு), சென்னை, (1908), ப. 2.

50. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு (உ. வே. சா. பதிப்பு), திருப்பனந்தாள், 1952, ப. 5.

மக்கிக் கிடந்த ஏடுகளை வைத்துக்கொண்டு பொறுமையோடு ஆராய்ந்து பதிப்பிப்பதெனின் அதற்கு எத்துணைப் பேரூக்கமும் பொறுமையும் ஆய்வறிவும் வேண்டும்?

ஒரு நூலினைப் பதிப்பிக்கும்போது, பதிப்பாசிரியர் அந்நூல் எழுதப் பெற்றுள்ள மொழியில் விரிபுலமை பெற்ற சான்றோராகவும், பல பேரறிஞர்களும் பாராட்டும் தகுதி வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். தாம் பதிப்பிக்கும் நூலில் வரும் அரிய செய்திகள் பிற நூல்களால் வலிமையுறும் எனில் அடிக்குறிப்பின்கண் அந்நூற் பகுதியை அப்படியே எடுத்துக்காட்டுதல் வேண்டும். பல சிறந்த விழுமிய தொடர்களைப் பதிப்பித்தலும் வேண்டும். நூலில் காணப்படும் அருஞ்சொற்களுக்கு உரையும் சிற்சில இடங்களில் விளக்க உரையும் காட்டுதல் வேண்டும். அந்நூலால் வெளிப்படும் மக்களின் செயல்கள், நாகரிகம், பழக்க வழக்கங்கள், போன்ற இன்னபிறவும் எளிதில் உணருமாறு எழுதி வைத்தல் வேண்டும். இத்தன்மைகள் யாவையும் மனத்துள்கொண்டு பதிப்பித்தவர் உ. வே. சா.

6. உயர்ந்த உழைப்பாளர் - இமயப்புலமை.

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பது பட்டினத்தார் வாக்கு. உலக முன்னேற்றத்தின் ஒவ்வோர் அணுவும் உழைப்பின் வெளிப்பாடே.

உழைப்பு தன்னளவில் பயன்படுவதிலும், உலகுக்குப் பயன்படுவதாக அமையின் அது அருமை மிக்கதாகும்.

திறங்கள், சிலர்சிலர்க்குச் சிலச்சில வகைகளில் அமைகின்றன. அத் திறங்கள் உலகுக்குப் பயன்படாமல் வாளா ஒழிந்தால், அத்திறங்களை அவர் பெற்றிருந்ததால் பயனொன்றும் இல்லை.

தேடித் தொகுத்த தேட்டு :

சாமிநாதன், "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" வாழ்க்கையர். தேனீக்கள் தேடித் தேடித் தேனைத் தொகுத்துத் தேக்கி வைப்பது போல அறிவைக் கிடைக்கும் இடத்தெல்லாம் சென்று தொகுத்தவர். விறகுத்தலையரென ஏடு கிடைக்கும் இடங்களுக்கெல்லாம் அலைந்து களைத்தவர்.

தமிழின் அறிவுக் கருவூலம் எனத்தகும் நூற்சுவடிகளையெல்லாம் பெற்ற குழந்தையாய், பேணும் பெற்றோராய், பெறலரும் தெய்வமாய் - எண்ணி எண்ணித் திளைத்து இறும்பூது எய்தியவர். காணாதனவற்றைக் கண்டுக் கண்டு களிப்புற்று, அக் களிப்பை உலகம் கூடியுண்ண வேண்டும் என்னும் ஆராத் தவிப்பு அடைந்தவர். தம் பிறவி நோக்கு அதற்கென அமைந்ததே என உறுதி கொண்டவர். அவர் தம் உழைப்பின் உவப்பும் வளர்வும் எண்ணிப் போற்றத்தக்கன.

முதற்பதிப்பு :

முதன் முதலாகத் தாம் பதிப்பித்த **வேணுவனலிங்க விலாசச்சிறப்பு** தமக்குப் பெரும் மகிழ்வைத் தந்ததாகக்

கூறியுள்ளார். உ. வே. சா. தம் உழைப்பு அச்சாகி நிலை பெற்று விட்ட மகிழ்வையே அவ்வாறு கூறியதாகக் கொள்ள வேண்டும்.

இதனால் ஊக்கம் பெற்றுத் தம் ஆசிரியரின் திருக் குடந்தைப் புராணத்தை அடுத்ததாகப் பதிப்பித்தார். தம் ஆசிரியர் நூலுக்குத் தாம் விளக்கம் எழுதுவது தம் தகுதிக்கு அப்பாற்பட்டது என்பது போலத் தன்னடக்கம் கொண்டு நூலைப் பதிப்பித்திருக்கின்றார்.

சிந்தாமணி :

இங்ஙனம் சிறு சிறு நூல்களைப் பதிப்பித்திருப்பினும் அவரே பதிப்பாசிரியர் என்னும் நிலைக்கு முற்றிலுமாக உயர்ந்தது **சீவகசிந்தாமணி** நூல் பதிப்பால்தான். 1890 இல் பதிப்பித்த சிந்தாமணி நூலே, பல நூல்களை அவர் நன்குப் பதிப்பித்த நிலைக்கு அடிப்படையானது எனலாம். உ. வே. சா. இந்நூலை வெளியிடும் முன் உழைத்த உழைப்பு, தொடர்ந்து வந்த துன்பம், தோன்றிய சிக்கல்கள், கிடைத்த கண்டனங்கள் ஆகியவை பலப்பல. ஒரு செயல் ஆக்கம் பெறுவதற்கு உதவு பவர்களைக் காட்டிலும் எதிர் நிலையில் நின்று செயல்படு பவரே நிரம்ப இருப்பர் போலும் !

சிற்றிலக்கிய நூல்களையே அறிந்து கொண்டு அவற்றையே பாடங் கேட்டுக் கொண்டிருந்த நிலையில் சேலம் இராமசாமி வழியே சீவகசிந்தாமணி நூல் பற்றிய செய்தியைச் சாமிநாதன் அறிந்ததை முன்பு குறித்தோம். அந்நூல் தமக்குக் கிடைத் தால் படித்து அச்செய்தியைச் சொன்ன இராமசாமிக்கே பாடஞ் சொல்ல வேண்டும் என்னும் உறுதியான எண்ணங் கொண்டார் சாமிநாதன். திருவைகுண்டம் கவிராயரிட மிருந்து ஏட்டுப்பிரதி வாங்கி அதனைக் காகிதத்திலும் எழுதி வைத்திருந்தார் இராமசாமி. அக் காகிதக் கட்டினை ஆவ லுடன் வாங்கித் தமிழ் ஆர்வங்கூடிட முயன்று படித்தார். பல செய்திகள் அவருக்கு விளங்கவில்லை; எனினும் தம் உழைப்பை நம்பலானார். இன்னும் சிந்தாமணி பிரதிகள் கிடைக்குமா எனத் தேடலானார்.

திருவாவடுதுறை ஆதீனத்தலைவர், சாமிநாதனின் ஆசிரியரான மீனாட்சி சுந்தரம் எழுதி வைத்திருந்த சிந்தாமணி ஏட்டுப் பிரதியைத் தந்தார். இவ்விரு படிகளையும் ஒப்பிட்டார் சாமிநாதன். முதலிலேயே ஒரு வேறுபாடு புலப்பட்டது. இராமசாமி கொடுத்த நூலில் மூலமும் பொழிப்புரையும் இருந்தன. மடத்து நூலில் நூல் முழுவதற்கும் மூலத்தோடு சிறப்புரையும் இருந்தது. உள்ளே நுழைந்து இரண்டு உரைகளையும் படிக்கத் தொடங்கியபோது இரண்டும் ஒன்றாகவே இருந்தமையை அறிந்தார். இரண்டும் ஒன்றாக இருக்கும் போது பெயர் மாற்றம் (பொழிப்புரை, சிறப்புரை) எப்படி நிகழ்ந்திருக்கக்கூடும் என முயன்று ஆராயலானார்.

அவர் முயற்சி வீண் போகவில்லை. நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினார். அதில் சைன வழக்கங்கட்கு முரணாகச் சில செய்திகள் இருந்தமையைச் சைனர்கள் சொல்லினர். அதனால் நச்சினார்க்கினியர் தம்மைச் சைனராகச் சொல்லிக் கொண்டு சிற்றாம்பூர் சைனமடம் சென்று, சைன நூல்களையும், வழக்கங்களையும் அறிந்து புதிய சிறப்புரையை எழுதினார் என்பதை அறிந்தார்.[1]

இரண்டு உரைகளின் பெயர் வேறுபாடே அவரைச் சிந்திக்க வைத்தது. அதனால் துருவித் துருவி நூலை ஆய்ந்திடும் எண்ணம் அவருக்கு அதிகம் ஏற்பட்டது. சிந்தாமணியுள் பல செய்திகள் விளங்காது தொல்லைப்பட்டார். கட்டியங்காரன் என்னும் சொல்லைக் கட்டியக்காரன் என்று கருதினார். அதனை நூலைக்கொடுத்த இராமசாமி திருத்தியிருக்கிறார். சிந்தாமணியில் இருக்கும் சமணசமயக்கருத்துக்களை அறிந்து கொள்ளவும் பெருமுயற்சி செய்யலானார். சமணரான சந்திரநாதன் அவர்களையும் விடூர் அப்பாசாமி அவர்களையும் தாமே போய்ச் சந்தித்தார்.

ஒரு நூலை அறிந்து கொள்ள, அறிமுகமே இல்லாதவரைத் தம் தகுதி, நிலை போன்றவற்றை எல்லாம் கருதாமல் அறிமுகப்படுத்திக் கொள்ள விழையும் மனம் பலர்க்கும் இருப்பதில்லையே! அந்த மனம் சாமிநாதனுக்கு இருந்தமையால், தமிழ் பெற்ற நலம் மிகப் பெரிதாம் என்பதை அவர் தம்

1. என் சரித்திரம், பக். 539-540.

பதிப்புகளையும் அவற்றின் பதிப்புரைகளையும் படிப்பார் இனி தின் அறிவர்.

சந்திரநாதன், சிந்தாமணிக் கதையையும், சில விளக்கங் களையும் சாமிநாதனுக்குக் கூறினார். சிந்தாமணிக்கு வாய் மொழியாக ஓர் உரையுள்ளதையும் அறிந்தார் சாமிநாதன். அதில் சமண சமயச் சார்பான குறியீடுகள் கலக்கப் பெற் றுள்ளன எனவும் அறிந்தார். 'வீரன் தாள்நிழல்—சமவசரணம்' என்பது பெரிய ஜைனாலயம் என அறிந்தார். அவ்வாலயத்தின் படம் குணபாலன் என்பவரிடம் இருப்பதைத் தெரிந்து அவர் வீட்டிற்குச் சென்றார்.

குணபாலன் வயது முதிர்ந்தவர்; பணம் படைத்தவர். உள்ளூரில் உள்ள கல்லூரியில் பணிபுரிந்து வந்த சாமி நாதனைப்பற்றிக் கேள்விப்பட்டும் இருந்தார். எனவே அவர் சாமிநாதனை நன் முறையில் வரவேற்றார்.

சாமிநாதன் அவரிடம் சமவசரணம் பற்றிக் கேட்டார். அவர் தமக்குத் தெரிந்ததைக் கூறிவிட்டு, தம்வீட்டில் இருந்த சமவசரணம் குறிக்கும் படம் ஒன்றையும் எடுத்துக் காட்டி னார். சாமிநாதன் அதனைப் பார்த்ததும் மகிழ்ச்சி எய்தினார். தமக்கிருந்த சில சந்தேகங்களை சாமிநாதன் சொன்னார். சில வற்றிற்கு நல்ல பதில்களைத் தந்தார் குணபாலன். சில வற்றை அவரால் தெளிவாக இயம்ப இயலவில்லை.

மறுநாள் வருமாறு சாமிநாதனிடம் சொன்னார். ஏதாவது புத்தகத்தைப் பார்த்துப் பதில் சொல்லுவாரோ என எண்ணித் தம் வீடு போய்ச் சேர்ந்தார் சாமிநாதன்.

மறுநாள் குறித்த வேளையில் குணபாலன் வீட்டிற்கு விரைந்தார் சாமிநாதன். வீட்டுத்திண்ணையின் வெளியில் உட்கார்ந்திருந்த குணபாலன் சாமிநாதனைக் கண்டவுடன், "வாருங்கள், உட்காருங்கள்" என்று அன்பு மொழி மொழிந்து விட்டு, வீட்டிற்கு உள்ளே போனார்.

ஏதோ புத்தகம் எடுத்துவரச் செல்லுகிறார் போலும் என நினைத்தார் சாமிநாதன். ஆனால் எவ்வளவு வேகமாக வெறுங்கையோடு உள்ளே சென்றாரோ அவ்வாறே வெளியே

வந்தார். வந்தவர் சாமிநாதனைப் பார்த்து, "சரி, இப்போது உங்கள் சந்தேகங்களை யெல்லாம் சொல்லுங்கள்", என்றார்.

சாமிநாதன் ஒரு சந்தேகம் கேட்டார். குணபாலன் அதைக் கேட்டு சன்னல் வழியாக உள்ளே சொன்னார். உள்ளிருந்து ஒரு மெல்லிய குரல் பதில் பகர்ந்தது. அக்குரல் ஒரு முதிர்ந்த பெண்பாலார் குரல் என்று தோன்றியது. அளித்த அவ்விடை தெளிவாக இருந்தது. இப்படியே ஐயப் பாடுகளைச் சாமிநாதன் சொல்லச் சொல்ல, குணபாலன் அவற்றினைக் கேட்டுக் கேட்டு, சன்னல் வழியே உள்ளே அனுப்ப அனுப்ப, உள்ளிருந்து அந்த குரலிலே விடை வந்து கொண்டிருந்தது. உள்ளிருந்து வரும் விடைகளை நன்றாகத் தெரிந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார் சாமிநாதன்.

இப்படி நிகழும் போது உள்ளிருந்த குரல், "இவர் பவ்ய ஜீவன் போலிருக்கிறதே!," என்றது.

அதனைக் கேட்ட சாமிநாதனின் உடல் மயிர்க்கூச் செறிந்தது; மகிழ்ச்சி அவரை ஆட்கொண்டது.

காரணமென்ன ?

அருக பரமேஷ்டியின் பக்தி அவருக்கு அதிக மென் றெண்ணி உவகை கொள்ளவில்லை. சைனர் கூறும் மோட்ச பதம் அவருக்கு எய்தும் என்றும் மகிழ்வு அடையவில்லை.

சிந்தாமணியை ஆய்வு செய்ய ஓரளவு தகுதி தமக்கு இருக்கிறதென அந்த மெல்லிய இனிய மேதாவிக் குரல் கூறி ஒப்புதல் நல்கி விட்டதென எண்ணி மகிழ்ந்தாராம்.

"பவ்ய ஜீவன்" என்பது சைனர்களுள் கிரமமாக மோட்சம் அடைவதற்குத் தகுதியான நிலைமையில் இருக்கும் ஆத்மாவைக் குறிக்கும். இது சாமிநாதனுக்கு முன்னரே தெரியுமாம். எனவேதான் அவருக்கு அளப்பிலா மகிழ்ச்சி ஏற்பட்டது.

நச்சினார்க்கினியர் பட்டபாடு சாமிநாதன் அறிவார். சிந்தாமணியை ஆராய்வதற்குத் தமக்குத் தகுதி ஏது ? நடுக்

காட்டில் வழிதெரியாது திகைப்பவனைப் போலிருக்கும் தாம் இதனைச் செய்ய முடியுமா? அச்சமும் ஐயமும் அவரைப் பிடித்திருந்தன. அந்நிலையில் உள்ளவருக்குப் "பவ்ய ஜீவன்" என்ற பட்டம் ஒரு சைன அறிவாளி மூலம் கிடைத்தால் அவருக்கு மனக்கிளர்ச்சி ஏற்படத்தானே செய்யும்? ஏற்பட்டது.

"உள்ளே இருந்து பேசுபவர்கள்...........?", வாக்கியத்தை முடிக்காமலே பவ்யமாக "பவ்ய ஜீவன்" கேட்டார் குணபாலனிடம்.

"என் பார்யை", என்றார் குணபாலன் திருப்தி நிறைந்த மனத்துடன்.

தம்மைவிட தம் மனைவி அறிவு மிக்கவள் என்று சொல்லாமல் சொல்லுவதில்தான் எத்தனை எத்தனை திருப்தி, எத்தனை எத்தனை மகிழ்ச்சி குணபாலனுக்கு.

சாமிநாதனின் இருதயம் நன்றி உணர்வுடன் உருகிற்று.[2] ஒரு நூல் எச்சமயம் சார்ந்ததோ அச்சமயப் பின்னணியிலேயே அறிந்து கொள்ள அவர் உழைத்த உழைப்பு இவற்றால் நன்கு தெரிய வரும்.

அவரது ஆர்வமும், உண்மையை அறிய எதையும் பொருட்படுத்தாமல் உழைக்கும் உழைப்பும் சேலம் இராமசாமிக்கு நம்பிக்கை ஊட்டியது. அதனால், "சிந்தாமணியின் பெருமையை நீங்கள் இப்போது நன்றாக உணர்ந்திருக்கிறீர்கள்; இந்த அருமையான காவியம் படிப்பாரற்று வீணாகப் போகாமல் நீங்களே பதிப்பிக்க வேண்டும்; அதைப் போன்ற உபகாரம் வேறு ஒன்றும் இல்லை" என ஊக்கமூட்டினார்.[3] முதலில் பதிப்பித்த சிற்றிலக்கிய நூல்களுக்கு எவ்வாறு வாய்ப்புக் கிடைத்ததோ அவ்வாறே சிந்தாமணிப் பதிப்புக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

சிந்தாமணியைப் பதிப்பிக்கத் துணிந்தார் சாமிநாதன். நூலைக் கற்பதற்கே வேறு படிகளைத் தேடியவர் அவர். அதனால், பதிப்பிக்கும்போது மிகுந்த எச்சரிக்கையாகவே செயலாற்றினார்.

---

2. நல்லுரைக் கோவை, நான்காம் பாகம் பக். 136-144
3. என்சரித்திரம் ப. 548.

பவர் என்பார் நாமகள் இலம்பகத்தை மட்டும் முன்னர் பதிப் பித்திருந்தார். அவரிடம் முழுநூலும் இருக்கும் என்பதால் முயன்று பல படியை ஆங்கே பெற்றார்.

திருவாவடுதுறை மடத்தின் தலைவர் திருநெல்வேலியிலிருந்து சில படிகளை வரவழைத்துத் தந்தார். மடத்திலேயே பழைய படி ஒன்று இருந்ததையும் தேடியெடுத்தார்.

இவ்வளவு படிகள் கிடைத்தும் ஐயத்திற்கு இடமான பல பகுதிகள் அந்நூலில் இருந்தனவாம். அப்படியானால் எத்தனை முறை அந்நூலின் படிகளையெல்லாம் படித்திருப்பார்; ஆராய்ந் திருப்பார்? அந்த உழைப்பைப் போற்றியாக வேண்டுமன்றோ!

நல்ல பாடமுள்ள வேறு படிகளுக்காகப் பலரையும் விசாரித் தார். மடல் எழுதிக் கேட்டார். தஞ்சையில் விருஷபதாசர் வீட்டில் சிந்தாமணிச்சுவடி இருக்கும் செய்தி கிடைத்தது. முதன் முறையாக ஏடுதேடும் பயணத்தை மேற்கொண்டார்.

ஒரு நூலைப் பதிப்பிக்கப் பலபடிகள் இருந்தும் கூட, அவற்றால் நிறைவடையாமல், மேலும் சுவடி இருப்பதனை அறிந்து அவ் ஊருக்குப் பயணப்படுவது எல்லார்க்கும் தோன் றும் கருத்தாகாது.

அந்த முதற்பயணமே சோதனையாக அமைந்தது. சிந்தாமணியையே வணங்கி வருபவர் விருஷபதாசர். அதனால், அதை எடுக்க மாட்டேன் என்றும் அப்படியே எடுத்தாலும் சமணருக்கே தருவேன் என்றும் கூறிவிட்டார். எவ்வளவோ இரகசியங்கள் பொருந்திய சிந்தாமணியைத் தம் சமயத்திற்கு முரணாகத் தரமாட்டேன் என்றும் கூறினார்.

சாமிநாதன் தாம் கும்பகோணத்தில் வேலை பார்ப்பதாகவும், திருவாவடுதுறை மடத்திற்கு வேண்டியவர் என்பதையும் எடுத்துக் கூறினார். ஆசிரிய நிலையும், மடத்தின் மதிப்பும் ஏடு பெறத் துணையாம் என எண்ணிச் சொல்லிய, அக்கருத்தே அவருக்கு எதிராக நின்றது! சைவர் சமணரைத் துச்சமாக மதிப்பவர். அவருக்குச் சுவடி தரவே கூடாது என்பது போல, மறுத்து விட்டார். பின்னே பெரு முயற்சி செய்து வேறொருவர்

வழியே அப்படியைப் பெற்றார். ஆனால், அந்தப் படியில் சிறப்பு உரை இல்லை. அதைப்பற்றியெல்லாம் அறிந்து கொள்ளாம லேயே படி வைத்திருந்தவர் அவரைத் தொல்லைப்படுத்தி விட்டார்.

இப்படியெல்லாம் தொல்லைப்பட்டு 23 படிகளைச் சிந்தாமணி நூலுக்குத் திரட்டிய பின்னர் பதிப்புப் பணியைத் தொடங்கினார். நூல் அச்சாகிக் கொண்டிருந்த காலத்திலும் ஏடுதேடும் பணியை நிறுத்தினாரல்லர். கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சின்னசாமியிடம் ஒரு படி உள்ளதை அறிந்தார். அப்பிரதி, 20 படிகளைப் பார்த்து ஆய்ந்து எழுதப்பட்டது என்பதையும் அறிந்தார். அதனையும் வாங்கிப் பார்த்தார்.

தொடர்ந்து குற்றாலம், திருநெல்வேலி எனப் பயணம் செய்தார். திரிகூடராசப்பக் கவிராயர் வீட்டிலும் தேடினார். சில கவிராயர்களிடம் சில பகுதிகள் கிடைத்தன. திருநெல் வேலி கால்டுவெல் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் குமாரசாமி யின் கையெழுத்துப் படியைப் பெற்றார். அது முழுமையாகவும் திருத்தமாகவும் இருந்தது. பதிப்பிக்கும்போது மிகுந்த துணை செய்தது. சாமிநாதனின் விடா முயற்சியும் உழைப்பும் பதிப்பிக்கும் பணியைச் செம்மைப்படுத்தின.

பாடல்களை ஒப்பிட்டுப் பொருள் அறிந்து பதிப்பிப்பதோடு சாமிநாதன் நின்றாரல்லர். சிந்தாமணி நூலில் ஓர் ஆய்வே நிகழ்த்தி விட்டார். நூலாய்வுக்கு நச்சினார்க்கினியர் உரை உதவியது. நச்சினார்க்கினியர் தாம் மேற்கோள் காட்டும் நூலையோ நூலாசிரியரையோ குறிப்பிட்டு உரைத்தாரல்லர். நச்சினார்க்கினியரின் மேற்கோள் குறிப்புக்களைக் குறித்து வைத்துக் கொண்டு, அவற்றையெல்லாம் தெளிவாக இடமும் பொருளும் தெரிந்து கொண்ட பின்னரே நூலை அச்சிட்டார். இன்னநூல் எனச் சுட்டாத அந்த இலக்கியக் குறிப்புக்கள் எந்தெந்த நூல்களில் உள்ளன என ஆராய்வதே பெரும் ஆய்வாக இருந்திருக்கும்! இப்படி நூலைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தொகுத்தார் சாமிநாதன்.

சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்கும்போது சாமிநாதனின் மனம் அதிலேயே மூழ்கியிருந்தது. "என் நினைவு முழுவதும்

சிந்தாமணி மயமாக இருந்தது; காலையில் எழுந்தவுடன் சிந்தாமணி முகத்தில்தான் விழிப்பேன். எத்தனையோ இரவுகள் சிந்தாமணி ஆராய்ச்சியில் மனமொன்றி இருப்பேன்; எனக்குச் சிந்தாமணியும், சிந்தாமணிக்கு நானும் துணையாகப் பொழுது போவதே தெரியாமல் ஆராய்ச்சி நடைபெறும்'' என அவரே குறித்துள்ளார். 4

இந்த உழைப்பு அவருக்குப் பல செய்திகளை உணர்த்தியது. நூலைப் படிக்க முடியாமல் பல இன்னல்களும் தோன்றின. புள்ளி உண்டா இல்லையா, கொம்பா, சுழியா, ரகரமா, காலா('ா') றகரமா, உரையா, மூலமா, மேற்கோளா எனப் பல சிக்கல்கள் இருந்தன. பாடவேறுபாடுகளால் பல குழப்பங்கள் ஏற்பட்டன. உரைக்கு மூலமும், மூலத்திற்கு உரையும் கிடைக்காது தடுமாறிய இடர்கள், மேற்கோள் எதற்காகக் காட்டப்பட்டது என அறிந்து கொள்ள இயலாமல் போன நிலை, இப்படிப் பலப்பல இன்னல்களை ஓயாத உழைப்பின் மூலம் மெல்ல மெல்லக் களைந்தார்.

பல சிற்றிலக்கியங்களில் விளக்கம் காணமுடியாதவற்றிக்கு வெளிச்சம் காட்டியது சிந்தாமணி. நாமகள் இலம்பகம் 58ஆம் செய்யுள் அச்சாகும் போது 'ஏக்கழுத்தம் என்றார் பிறரும்' என்ற நச்சினார்க்கினியர் உரையைப் படித்தார். சிறுபஞ்ச மூலம், நீதிநெறி விளக்கம் ஆகிய நூல்களில் 'எக்கழுத்தம்' என எண்ணியிருந்தது ஏக்கழுத்தம் எனத் திருத்தம் பெற்றமையால் மகிழ்ந்தார் சாமிநாதன். துன்பங்கட்கிடையேயும் இங்ஙனம் ஒரு சில புதுச்செய்தி கிடைத்தாலும் பெரிய வரவாக மகிழ்ந்தார்.

தாம்பட்ட இன்னல்கள் போதாவென்று பதிப்புப் பணியில் ஈடுபட்டோர்பலர், தாம்தாம் சிந்தாமணியைப் பதிப்பிக்கப் போவதாகவும், பதிப்பிப்பதாகவும், அச்சுறுத்தினர்.

பணம் உள்ளோர் தாம் பதிப்பிப்பதாகக் கூறியுங்கூடத் தாமே ஆய்ந்து விட்டமையால் தாள் வாங்கக் கூடப்பணமின்றித் தொல்லைப்பட்ட சாமிநாதன் பதிப்பிக்கத் துணிந்தார்.

---

4. அது, ப. 569

சிந்தாமணி வெளியானதும் பலர் பாராட்டுக்கள் கிடைத்தன. அந்த வாய்ப்பை உருவாக்கிய சேலம் இராம சாமியே, பெரிய செயலைச் செய்து முடித்த சாமிநாதனே சிலப்பதிகாரம் முதலியவற்றையும் அச்சிட வேண்டுமென நினை வூட்டினார். பதிப்புப் பணியில் பெயர் பெற்று விளங்கிய சி. வை. தாமோதரம் சிந்தாமணி அச்சாகுங் காலத்தில், தாள் வாங்கப் பணமின்றித் தவித்த சாமிநாதனுக்குத் தாளைக் கடன் வாங்கிக் கொடுத்து உதவியதைப் போலவே சிலப்பதிகாரப் பதிப்பிற்கும் தூண்டுகோலாக நின்றார்.

1887இல் சீவகசிந்தாமணியை வெளியிட்ட சாமிநாதன் உடனேயே சிலப்பதிகாரப்பதிப்பைத் தொடங்கினாரல்லர். சிலப்பதிகாரத்திற்கும் பல படிகளைத் தேட விரும்பினார். சில பகுதிகளுக்கு உரையும் கிடைக்கவில்லை. எனவே, பத்துப் பாட்டைப் பதிப்பிக்கலானார்.

பத்துப்பாட்டு :

1889ஆம் ஆண்டு பத்துப்பாட்டை வெளியிட்டார். இந் நூலின் முகவுரையும் ஆய்வாகவே விளங்குகின்றது. பத்துப் பக்க அளவில் பத்துப்பாட்டிற்கு முகவுரை எழுதிப் பதிப்பித்த சாமிநாதன் மீண்டும் மூன்றாம் முறை அந்நூலைப் பதிப்பித்த போது இருபத்திரண்டு பக்கத்திற்கு முகவுரை எழுதினார். இடிந்ததாக எண்ணாமல் மீண்டும் உழைத்த உழைப்பையே இது காட்டும்.

மதுரைக் காஞ்சிக்கு அவர் எழுதிய விளக்கம் அவரது உயர்ந்த சிந்தனையையே நமக்கு காட்டுகிறது. "போர்புரிந்து பகைவரை வெல்வதையே கருதித் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பல்வேறு நிலையாமையை அறிவுறுத்தப்புகுந்த ஆசிரியர், முதற்கண்ணே தம் கருத்தைப் புலப்படுத்தாமல் அவன் முன்னோருடைய நல்லியல்புகளையும் அவனுடைய கொடை, வீரம், நற்குணம் முதலியவற்றையும் எடுத்துப் பாராட்டிப் புகழ்ந்து, பின்பு தம் கருத்தைக் குறிப்பாகச் சில அடிகளாலே புலப்படுத்திப், பின்னர் மதுரையின் பெருவளத்தைப் பரக்கக் கூறியிருத்தலால், அவரது உலகியலறிவையும் மன்னவர்களிடத்து ஒழுகும் முறை

யையும் புலப்படுத்துகின்றது''.[5] கூறுவோனுக்கும் கேட்போனுக்கும் இடையில் ஒரு செய்தி பரிமாறப்படுகிறது. கேட்போனின் மனநிலை, அறிவு நிலை, உணர்வு நிலை ஆகியவற்றை அறிந்த உளவியலாளரைப் போன்று புலவர் பாடியுள்ளார். இதனை உள்ளவாறே உணர்ந்து குறிப்பை எழுதியுள்ளார் சாமிநாதன்.

உளவியலை அறிந்தே எழுதப்பட்ட மற்றொரு நூலான குறிஞ்சிப்பாட்டிற்கும் இது போன்ற சிந்தனையுள்ள விளக்கத்தையே எழுதியுள்ளார். ''ஓரரசனுக்கு இது கூறப்பட்டதாதலின் அவனுக்கேற்பத் தோழியின் நிலையை, 'இகல் மிக்கடவு மிருபெருவேந்தர், வினையிடைநின்ற சான்றோர்போல' என விளக்கியும், நாய்களுக்கு உவமை கூறுகையில், 'மனை பாழ் படுக்கும் துன்னருந்துப்பிற் பகைப்புறங்கண்ட பல்வேலிகளைஞரின்' எனச் சொல்லியும், மாலைக்காலம் பலவகை நிகழ்ச்சிகளை முன்னிட்டுக் கொண்டு வருதலை, 'சினைஇய வேந்தன் செல்சமங்கடுப்பத் துணைஇய மாலை துன்னுதல் காணூஉ' என உவமை கொண்டு அறிவித்தும், அரசர்களையும் வீரர்களையும், பற்றிய செய்திகளை ஆசிரியர் எடுத்தாண்டமை பாராட்டற்பாலதாம்''[6] இங்ஙனம் செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் தரும் சிறப்பு மரபினைச் சாமிநாதனே தோற்றுவித்தார்.

எட்டுத்தொகை :

எட்டுத்தொகை நூல்களைத் தனித்தனியே பதிப்பித்தார். நூற்பொருளை நேரடியாகவே சொல்லிவிடும் மரபைக் கொண்டவர். அவர் அதனால் பதிற்றுப்பத்திலும் இவ்வாறு நூற்பொருளை நேரடியாகக் கூறியுள்ளார். தாம் உழைத்த உழைப்பின் பயனைப், பிறர் துய்க்கவேண்டும் என்றும் பிறர் மீண்டும் உழைத்துத் துன்பப்படவேண்டாம் என்றும் கருதி நூலின் செய்தியை எளிதில் விளங்கும்படிச் செய்திடுவார்.

---

5. பத்துப்பாட்டு. (உ. வே. சா. பதிப்பு) 1931.
6. பத்துப்பாட்டு (உ. வே. சா. பதிப்பு) 1931.

குறுந்தொகை நூலை மிகுந்த உழைப்புடன் ஆய்ந்து பதினாறு பக்க முகவுரையோடு முதலில் பதிப்பித்தார். ஆனால் அடுத்து நூலாராய்ச்சி என்னும் தலைப்பில் நூறு பக்க அளவில் அரிய ஆய்வை நிகழ்த்தியுள்ளார். சங்க இலக்கியத்தில் ஆய்வு செய்வோருக்கு வழிகாட்டும் முதன்மை ஆய்வாகவே இப்பகுதி விளங்குகிறது.[7] இந்த ஆய்வில் சங்க இலக்கியத்தில் உள்ள அகப்பாடல்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு உ. வே. சா. தம் உழைப்பை நல்கியுள்ளார்.

சங்க இலக்கியத்தை அணுகும் மனப்பான்மையை உருவாக்கி விட்டுப் பின்னரே நூலுக்குள் நுழைய வைக்கிறார் உ. வே. சா. நூலுக்குள் வேறு ஐயங்கள் இடை இடையே தோன்றுதல் கூடும் என எண்ணினார். அதனால், அடிப்படை ஐயங்களையெல்லாம் போக்கத் துணிந்தார். முதல், கரு, உரிப் பொருள்கள் என வரையறுத்துக் கொண்டு அவற்றைப் பற்றிப் பாடும் காரணங்களைத் தொகுத்துள்ளார்.

''முதல் கரு உரியென்னும் மூவகைப் பொருள் வரையறையும் கவிச்சுவையை மிகுதிப்படுத்தவே போந்ததென்று தோன்றுகிறது. உலகத்தில் குறிஞ்சிநிலத்துள்ளாரே அளவளாவுவது, பாலைநிலத்துள்ளாரே பிரிவது...என்ற வரையறையில்லை. ஆனால், கவிஞன் அமைக்கும் உலகத்திலோ இவ்வரையறைகள் காணப்படுகின்றன. இது நாடக வழக்காகும். நாடகத்தில் அரங்கில் நிகழும் நிகழ்ச்சிக்கு ஏற்ப களனொன்றை நாடகப் புலவன் அமைத்துக் கொள்வதும், ஓவியப்புலவன் தான் எழுதப்புகும் ஓவியத்திற்கு ஏற்ற நிலைக்களனை எழுதிக் கொள்வதும் போன்றது இது. பிரிவைப் புனையும் ஆசிரியன் துன்ப உணர்ச்சியை மிகுதிப்படுத்த வேண்டி நீரில்லாத வறுஞ்சுரத்தையும் ஓய்ந்த யானையையும் தான் கூறும் நிகழ்வோடு இயைபுபடுத்துகின்றான்''. 7

கவிதைச் சுவைக்காகப் பாகுபடுத்தப்பட்டிருக்கும் நிலையை அறிவால் எண்ணிப்பாராமல் உணர்வால் இணைந்து, இயைந்து பார்க்க வேண்டும் என்று கூறியுள்ள சிந்தனை எண்ணிப்பார்க்கத்தக்கது.

---

7. குறுந்தொகை, (உ. வே. சா. பதிப்பு) 1983). அண்ணாமலை நகர், பக் 18-19

அது போலவே பருவங்களைப் பாகுபடுத்தியிருக்கும் நிலையிலும், ஐயம் வரக்கூடும் எனச் சிந்தித்துள்ளார். குறிஞ்சித் திணைக்குரிய ''கூதிர்ப்பருவம்'' பற்றியும் விளக்கியுள்ளார்.

''ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர்க்காலம். இப்பருவத்தில் குளிர்காற்றுவீசும்; மழை பெய்த பின்பு எஞ்சிய துளிகளை மேகம் துளிக்கும் ; அதனைச் சில்பெயலென்பர். இப்பருவத்திற் கரும்பு பொதியவிழும் ; ஈங்கைக் கொடி மலரும். கூதிர்ப்பருவத்தில் வீசும் வாடையின் குளிரினால் மக்கள் நடுங்குவர்; விலங்குகளும் பறவைகளும் துன்புறும். இக்காலத்தில் தலைவரோடு இருத்தலைத் தலைவியர் விரும்புவர்.''[8]

காற்றைப் பற்றி, அதிலும் தென்றல் காற்றைப் பற்றி எளிமையாக அறிந்து கொள்ளுமாறு விளக்கியுள்ளார்.

'பெரும் பொழுதுகளில் வீசும் காற்றுகளிற் சில வகையுண்டு தென்றிசையிலிருந்து வரும் காற்றைத் தென்றலென்பர். தென்றலென்ற சொல் இந்நூலில் வராவிடினும் அசைவளியென்னும் பெயரில் அது குறிக்கப்படுகின்றது. மெல்லென நடத்தலை அசைதலென்பர். மெல்லென வருவதாகலின் தென்றல் அப்பெயரை உடையதாயிற்று. இக்காரணத்தினாலேயே மந்த மாருதமென்னும் பெயர் அதற்கு வட மொழியில் அமைந்தது. இக்காற்றை இளவேனிற்குரியதாகக் கூறுவர்''. [9] என்கிறார்.

தெரிந்ததைப் பற்றியதற்கே இவ்வளவு நெடிய விளக்கம் தரும் உ. வே. சா. நமக்குத் தெரியாததற்கும் நீண்ட விளக்கம் தந்துள்ளார். 'ஞாழல் மரம்' பற்றிய விளக்கம் நல்ல எடுத்துக்காட்டாகும்.

''இது நெய்தல் நிலத்துக்குரிய மரம் ; கடற்கரையோரத்தில் வளர்வதாகலின் இதன் வேரில் நண்டுகள் வளையமைத்து வாழும். புன்னையும் இம்மரமும் சேர்த்துக் கூறப்படும். இதன் மலர் சிறிய வடிவினது. அது வெண் சிறுகடுகையும் ஆரல் மீன் முட்டையையும் போலத்தோன்றும். அம் மலர் நறுமண

8. அது ப. 27.
9. அது பக். 29

முடையது''. [10] இவ்விளக்கங்களையும் அகரவரிசைப்படுத்தியே கூறியுள்ளார்.

இக்குறிப்புக்களை உ. வே. சா. இலக்கியத்தின் மூலம் அறிந்தவற்றிலிருந்தே தந்துள்ளார். இலக்கிய வழியே எல்லா நுட்பக் கருத்துக்களையும் திரட்ட முடியும் என்பதற்கும் உ. வே. சா அவர்களே வழிகாட்டினார் எனலாம்.

இங்ஙனம் ஒரு நூலுக்குள் நுழையும் முன்பு எந்த ஐயமும் தோன்றாதவாறு செய்து தந்த டாக்டர் உ. வே. சா. அவர்களைப் பற்றி நினைக்கும் போது அவர்தம் உழைப்பையும் அவர்தம் இமயமலைப் புலமையையும் கண்டு நாம் வியக்க வேண்டியவர்களாகவே உள்ளோம்.

சங்கப்பாடல் ஒன்றின் ஆசிரியர் பெயரையோ முதற் குறிப்பையோ நினைவிற்குக் கொண்டுவர இயலாத நிலையில் நம்மில் பலபேர் உள்ளனர். ஆனால், பாடலில் வரும் ஓர் அரிய சொல் அல்லது அழகிய தொடர், உவமை இவற்றுள் ஒன்றை நினைவில் வைத்திருப்போம். அவற்றைக் கொண்டே பாடலைக் கண்டுபிடிக்க உ. வே. சா. வகுத்துள்ள அகராதி நமக்கு உதவும். நினைவாற்றலே குறைந்து போனாலுங் கூட உ. வே. சா. உழைப்பு உறுதுணையாக நிற்கும். மீண்டும் நாம் உழைக்க வேண்டியதில்லை. நம் உழைப்பை அடுத்த வளர்ச்சிக்கட்டத்திற்குப் பயன்படுத்தலாம். அந்த அளவு எளிமைப்படுத்தியிருக்கின்ற பெரியவர் அவர். குறுந்தொகை நூலுக்கு 90 பக்கங்களில் அகராதியைத் தந்துள்ளார். இது போலவே சங்க இலக்கிய நூல்கட்கெல்லாம் அகராதி உருவாக்கியுள்ளார். இவற்றையெல்லாம் தொகுத்துச் சங்க இலக்கிய அகராதியை உருவாக்கலாம் என்னும் கூற்றும் சிந்திக்கத்தக்கது. [11]

புறநானூறு போன்ற சிறந்த நூல்களுக்குச் சிறந்த உரைகளும் இருந்தன. இருந்தும் உ. வே. சா குறிப்புரையும் எழுதினார். இவ்வுரை பழைய உரையாசிரியரை ஒட்டியே அமைந்து

10. அது பக்கம் 38

11. டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள். ப. 98.

மேலும் விளக்கம் தந்தது. இது உ. வே. சா. அவர்களின் இலக்கிய இலக்கணப் பயிற்சியைப் புலப்படுத்தியது.

குறுந்தொகை முகவுரையில் நூலிலுள்ள பொதுச் செய்திகளை அறிமுகப்படுத்தியது போலவே ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் அப்பாடல் செய்திக்கு அறிமுகவுரைதந்துள்ளார். பாடலுக்குத் தலைப்பாகப் பாடலில் வரும் பாத்திரத்தின் கூற்று உ. வே. சா. அவர்களால் எழுதப்பெற்றுள்ளது. அடைப்புக் குறிக்குள் பாடலின் துறையைத் தெளிவாகவும் விளக்கியுள்ளார். பாடலின் பொருளைத் துறையோடு இயைபு படுத்தி விடுவதால் பொருட்சிறப்பு நன்கு புலனாகின்றது.

''இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையதென்பதை தலைவன் வண்டை வினாவுதல் வாயிலாகப் புலப்படுத்தி நலம் பாராட்டியது'' இரண்டாம் பாடல். இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவண்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்பு தோற்ற நலம் பாராட்டியது என்ற துறையுடன்பொருந்துமாறு விளக்கியுள்ளார்.

அந்தத்துறை பாடலின் அடியில் தரப்பெற்றுள்ளது. அந்தத்துறையைக் கூட எளிமையாக்க முனைந்திருக்கின்றார். பாடவேறுபாட்டையும் அங்கேயே தந்திருக்கின்றார்.

''இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற (பி-ம் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவழித் தலைமகன் தலைமகளை, இயற்கைப் புணர்ச்சிக் கண் இடையீடு பட்டு நின்ற) தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய் தொட்டுப் பயிறல் முதலாயின அவண்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது (பி-ம். நிகழ்த்திப் பாடுமாற்றால் கூடிய தலைமகள் தனது) அன்பு தோற்ற நலம் பாராட்டியது.

அடுத்த பகுதியாகப் பதவுரையைத் தந்து உரையாசிரியரின் உரையைத் தந்துள்ளார்.

அதற்கு முடிவுரை என்று சுருக்கமாகத் தம்முரையை எழுதியுள்ளார். இதற்கு மேல் விசேடவுரையையும் எழுதியுள்ளார்.

இப்பாடலின் தொடருக்கு அல்லது சொல்லுக்கு மேற்கோள் பல காட்டி விளக்கம் தந்துள்ளார் மேற்கோள் ஆய்வை உருவாக்கியவர் உ. வே. சா. அவர்களே.

"கொங்கு... வாழ்க்கையென்பது இளவேனிலாயிற்று, தும்பி. கொங்கு தேரும் காலம் அதுவாதலின்" (தொல். அகத் 16: அஞ்சிறை, இகமென்பதன்முன் சிறையென்பதுவரின் இடையெழுத்துக்கெடும் (நன். 222, சங்)" என்றும்,

"1-2 கொங்கு ... தும்பியென்பது ஒன்பதெழுத்தான் வந்தது; காமஞ்...கண்டன மொழிமோவென்பது பத்தெழுத்தான் வந்தது" (தொல். செய்-49, இளம்) என்றும் விளக்கி, இலக்கிய இலக்கணப் புலமையைக் காட்டியுள்ளார். தம் முடிவுரையில் மேலும் பல விளக்கங்களைத் தந்துள்ளார். இவற்றோடு அமையாமல் பாடலில் இருக்கும் வரலாறு அல்லது வரலாற்றுச் செய்தியையும் சான்றுடன் விளக்கியுள்ளார்.

ஒப்புமையுள்ள பகுதிகளைப் பிற இலக்கிய நூல்கள் வழியே ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

ஒரு பாடலுக்குச் செய்திகளைச் சொல்வதற்கு உழைத்த உழைப்பே சொல்லும் தரமன்று. இவ்வாறாகச் சங்க இலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம் எனப் பலவற்றுக்கும் ஆராய்ச்சியுரை, குறிப்புரை, சிறப்புரை, ஒப்புமை உரை, அருஞ்சொல் அகராதி என எழுதியும், பதிப்பித்தும் உழைத்த அப் பெருந்தகையைத் தமிழ்த்தாத்தா என்றழைப்பது முற்றும் பொருத்தம் தானே.

இலக்கண நூல் :

துறைதோறும் தமிழ்த் தொண்டு செய்த தமிழ்த் தாத்தா இலக்கண நூற்பதிப்பிலும் பங்கெடுத்துள்ளார்.

நன்னூல் இலக்கண நூலே, உ. வே. சாமிநாதனின் இளமைக் காலத்தில் பலரால் பெரிதும் சொல்லப்பட்டு வந்தது. அதனால் உ. வே. சா. நன்னூலைத் தெளிவுறத் தெரிந்து கொண்டால் நல்ல புலவராக மதிக்கப்படும் நிலையை உணர்ந்து அதன் மேல் ஆர்வம் காட்டினார். தம் பன்னி

ரண்டாம் வயதிலேயே சாமிநாதன், கார்குடி கஸ்தூரியிடம் இலக்கணப் பாடம் கேட்டார். பின்பு தஞ்சை சீனிவாசனிடமும், நன்னூல் பாடம் கேட்டார். நன்னூல் முழுவதையும் நாள் தோறும் ஒப்பித்து வந்தார். பின்பு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்களிடமும் தியாகராசரிடமும், அவரிடம் பாடம் கேட்ட இராகவனிடமும் நன்னூலைக் காண்டிகையுரையுடன் பாடம் கேட்டார். சுப்பிரமணிய தேசிகரும் பாடம் சொல்லித் தந்துள்ளார். ஆனால், அவர் விருத்தியுரையைப் பாடஞ் சொன்னார்.

இப்படியே பிற இலக்கண நூல்களையும் ஆர்வத்துடன் பயிலலானார். செங்கணம் விருத்தாசலத்திடமும் திருவாவடுதுறை ஆதீனத்திடமும் யாப்பருங்கலக்காரிகையைப் பாடம் கேட்டார்.

தண்டியலங்காரம், பாட்டியல் நூல்கள், இலக்கண விளக்கம் போன்ற நூல்களையெல்லாம் தாமே பயின்றார். தாம் கற்றதோடு கற்பிக்கவும் செய்தார். எளிமையாகக் கற்பித்தால்தான் எளிதில் மாணாக்கரால் பின்பற்ற முடியும் என்பதனைக் கண்டமையால், எளிமையாக எழுதி எல்லோ ரையும் பயிலுமாறு செய்வதற்கு அந்நூல்களைப் பதிப்பிக்கவும் முனைந்தார்.

ஐந்திலக்கணச் செய்திகளையும் அமைத்துப் பாடலுக்கு விளக்கம் சொன்னார்; எழுதினார்; பதிப்பித்தார். இவை எல்லோரையும் கவர்ந்தன. செய்யுளியற்றும் ஆற்றலுக்கு வகையும் செய்தன.

புறப்பொருள் வெண்பா மாலையையும் (1895), மயிலை நாதர் உரையுடன் நன்னூலையும் (1918), சங்கர நமச்சிவாயர் உரையுடன் அதேநூலையும் (1925), பதிப்பித்தார்.

தமிழ் நெறி விளக்கம் 1937இல் கலைமகளில் முடிவுற்றது. உ. வே. சா. அவர்களின் காலத்திற்குப் பின் 1947இல் நூல் வடிவில் வெளியானது.

உரையுடன் புறப்பொருள் வெண்பா மாலையையும் மயிலை நாதரின் உரையுடன் நன்னூலையும் முதலில் பதிப்பித்தவர் டாக்டர் உ. வே. சா. அவர்களேயாவார்.

இலக்கண நூலானாலும், அதற்கும் விரிவான முகவுரை எழுதியுள்ளார். அருஞ்சொற்களுக்கு அகராதியைத் தொகுத்துள்ளார். இக்காலத்து வழக்கில் குறைவாகப் பயின்று வரும் சொற்களைக் குறித்துள்ளார். இலக்கணக் குறிப்புக்களையும் வழங்கியுள்ளார். மூன்றே மூன்று இலக்கண நூல்கள்தாம் இவரால் பதிப்பிக்கப் பெற்றன என்றாலும் அவை அவரது முழு உழைப்பையும் பெற்றன.

இலக்கண நூல்களைத் தாம் முதலில் பதிப்பித்த போது கையாண்ட முறையை உ. வே. சா. பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''உழிஞைப் படலத்தின் பின்னிற்றற்குரிய நொச்சிப் படலம் எல்லாப் பிரதிகளிலும் அதற்கு முன்னே காணப்பட்டமையால் அது அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது. உரையிலுள்ள சில மொழிகள் யான் அறிந்த மட்டில் இக்காலத்து உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் காணப்படாமையால் அதனைப் புலப்படுத்த வேண்டி அவற்றின் முதலிறுதிகளில் இவ்விரு ( ) தலைப் பகரங்கள் அமைக்கப்பட்டன. பின்னும் இந்நூலிலும் உரையிலும், விளங்காதவைகள் சிலவுள; அவை விளங்கியபின் இவற்றைப் பதிப்பிக்க விருப்பமிருந்தும் கிடைத்த கையெழுத்துப் பிரதிகளை உடையவர்களிடம் விரைவிற் சேர்ப்பிக்க நேர்ந்தமையால், இன்னும் இயன்ற வரையில் ஆராய்ந்து மற்றொரு சமயத்துப் பதிப்பிக்கலாமென்று எண்ணி ஒருவாறு பதிப்பித்தேன்'' 12. சாமிநாதனின் அடக்கம், கடமையுணர்வு, அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள், வாய்ப்பிருந்தும் பயன்படுத்தவியலாமை, அறியாதவற்றை ஒப்புக் கொள்ளும் பெருந்தன்மை ஆகிய எல்லாம் இவ்வெளிய முன்னுரையில் அடங்கியுள்ளன

நூலில் உள்ள பாட வேறுபாடுகள் முப்பத்தாறினையும் அடிக்குறிப்பில் காட்டுவதோடு மேற்கோள்கள், ஒப்புமைப் பகுதிகள், கருத்து விளக்கங்கள் ஆகியவற்றையும் மறவாமல் குறித்துள்ளார்.

---

12. புறப்பொருள் வெண்பாமாலை, (உ. வே. சா. பதிப்பு) சென்னை-1895, பக். 4-5

உரை நடைப்படுத்துதல் :

பழங்காலத்தும் இடைக்காலத்தும் செய்யுள் நடையில் எழுந்த இலக்கியம் முதலியவற்றை, 'இக்கால மொழிநடையில் உரை நடைப்படுத்தி எளிமைப்படுத்திய பின்பே புலரும் ஈர்க்கப்பட்டுப் படிக்கின்றனர். அதனால் அக்கால நடையைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்தும்போது அக்கருத்துக்களை இக்கால நடையில் சொல்ல வேண்டும். அப்படிச் செய்கிற போது கால, இட-இடை வெளிகள், மொழியின் சிறப்பு ஆகியவற்றால் தடைகள் தோன்றும். இவற்றை மனங் கொண்டு, அறிவியல் நோக்கில் ஆய்ந்து செயல்பட்டால் வெற்றிகிட்டும். இல்லையானால் சலிப்பைத் தோற்றுவிக்கும் நடையாக இக்கால நடை மாறிவிடக்கூடும்.

உ. வே. சா. இதற்காக உழைத்து வெற்றி கண்டார். பழைய உரையைத் தழுவிச் செய்யுள் தொடரைப் பொருட் பொருத்தமுற ஒழுங்கு படுத்தி வெளியிட்டார். பொழிப்புரையைப் பதவுரையாக மாற்றியும் எளிமையாக்கினார். குறிப்புரைகளை இன்றியமையாத இடங்களில் அமைத்தார். அவற்றில் பொருள் விளக்கம், ஒப்புமைப் பகுதிகள் ஆகியவற்றின் மூலம் கருத்தைத் தெளிவாக விளக்கினார்.

பதிப்புதோறும் திருத்தம் :

இலக்கண நூலாயினும், இரண்டாம் பதிப்பின் போது சுவை கூட்டியும், திருத்தியும் பல மாற்றங்களைச் செய்வது சாமிநாதனின் இயல்பாக இருந்தது. ''புறப்பொருள் வெண்பாமாலை'' நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரை மாற்றம் பற்றி அவர் கூறும் கருத்து இதனை நன்கு விளக்குகின்றது.

''இப்பதிப்பில், அத்திருத்தங்கள் ஆங்காங்கு அமைக்கப் பெற்றும் முற்பதிப்பில் வேறு வேறாக இருந்த அரும்பத அகராதி முதலியவை ஒருங்கே தொகுக்கப் பெற்றும், முதற் பதிப்பிற் சேர்க்கப் பெறாதனவும் மூலம், உரை இரண்டிலும் உள்ளனவாய்த் தமிழ் நூல்களில் ஆராய்ச்சிக்கு இன்றியமை யாதனவுமாகிய பற்பல அரும்பதங்கள், பற்பல விஷயங்கள், இன்பம் விளைவிக்கும் அநேக தொடர்மொழிகள், பல உவமைகள் ஆகிய இவைகள் நூதனமாகச் சேர்க்கப் பெற்றும்

உள்ளன. மேற்கூறிய அரும்பதங்களுட் பெரும்பாலானவற்றிற்குப் பொருள்கள் எழுதப் பெற்றுள்ளன''... என்று குறித்துள்ளார். இவ்வளவு மாற்றங்களைச் செய்தும் நிறைவுற்றாரல்லர்.

''இந்நூல் சம்பந்தமாகத் தொகுக்கப் பெற்றிருக்கும் குறிப்புக்கள் பலவற்றை ஒழுங்கு படுத்தி இப்பதிப்பில் வெளியிட எண்ணியிருந்தும் சில இடையூறுகளால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை'' என்று எழுதியுள்ளார். உழைப்பு முழுமையையும் பயன்படுத்தியும் அப்படியே பதிப்பிக்க இயலாவண்ணம் முட்டுக்கட்டை இருந்தமையை வேதனையுடன் அவர் மனம் சிந்தித்திருக்கின்றது என்பது இதனால் விளங்கும். மூன்றாம் பதிப்பில் அவற்றையெல்லாம் சேர்த்து வெளியிட்டு மன நிறைவடைந்தார்.

நன்னூலுக்கு முதலில் உரை எழுதியவர் மயிலை நாதர். அவர் உரை மதிப்பிழந்திருந்த நிலையைக் கண்டு டாக்டர் உ. வே. சா. வருந்திப் பதிப்பித்தார். அதன் முகவுரையில், ''நன்னூலுக்கு முதலிற் செய்யப்பெற்றதும் இலக்கண விளக்கவுரை, மேற்கூறிய விருத்தியுரை முதலியவற்றிற்கு ஆதாரமாக உள்ளதுமான இந்த மயிலைநாதருரை, சில நூற்றாண்டுகளாகப் படிப்பாரும், படிப்பிப்பாருமின்றிப் பெயர் வழக்கமுமற்றுக் கிடந்தமையாலும், சில சில பகுதிகள் பிற்காலத்தவர்களால் மறுக்கப்பட்டிருப்பினும், தமிழ்நாட்டின் பழைய நிலைமையையும் அக்காலத்துப் புலவர்களுடைய கோட்பாடுகளையும் இவை போன்ற அரிய பலவற்றையும் தெரிவித்ததாலும் இதனைப் பதிப்பிக்கத் துணிந்தேன் என்றார்''.

வரலாற்றுக்குச் சான்று தரும் உரையாகவும், புலவர் கொள்கைகளைக் கொண்டதாகவும், இவ்வுரை விளங்கும் உண்மையை உணர்ந்து துணிந்து பதிப்பித்துள்ளமை அவரது கரையிலா தமிழ் ஆர்வத்தைக் காட்டும். இந்த உரை மயிலைநாதர் உரை என்று அறிவதற்கே ஓர் ஆராய்ச்சியை நிகழ்த்தியிருக்கின்றார்.

''இவ்வுரையைப் பெரும்பாலும் உபயோகித்துக் கொண்டோர் இதன் பெருமையைத் தெரியாவிடினும், இதன் கருத்துக்களை மறுக்குமிடங்களுள் ஒன்றிலேனும் இவ்வுரையாசிரியர்

பெயரை எழுதியிருப்பின், நன்னூலுக்கு மயிலை நாதருரையென்று ஒன்றுண்டென்பதாவது தெரிந்திருக்கும்; ஆயினும், 'நன்னூலுக்குச் சைனருரையென்று ஒன்றுண்டு; அது பயனற்றது' என்ற ஒரு செய்தி மட்டும் கன்ன பரம்பரையில் வழங்கி வந்தது. இவ்வுரை ஏட்டுப்பிரதிகளுள் மிகப் பழையவான சிலவற்றின் தலைப்பில், 'மயிலை நாதருரை' என்பது காணப்பட்டது. அங்ஙனம் காணப்படாதிருப்பின், இக்காலத்தில் இஃது இன்னாருடைய உரையென்று தெரிந்துகொள்வதற்கே இடமிராது'' என்பது அது.

நன்னூலைப் பாடம் நடத்தியோரில் பலர் இவ்வுரைச் சிறப்பினை அறியவில்லையென்பதும், குறைகூறியோர் அறியாமல் கூறினர் என்பதும், அவர்களும் உரையாசிரியர் பெயரைக் குறிப்பிடாத குறையுடையோர் என்பதும் சாமிநாதனின் கருத்துக்கள். நாகரிகமாகக் குறிப்பிட்டுவிட்டு, ஆய்ந்தே உரையாசிரியரின் பெயரை அறிந்து கொள்ள முடிந்ததைக் குறிப்பிடுவது அவர் தம் இயல்பு என்பது அறிய முடிகின்ற கருத்துக்களாம்.

மயிலைநாதர் உரையின் சிறப்பினை. உ. வே. சா. பின் வருமாறு தனித்தனிக் குறுந்தலைப்புக்களில், ''மயிலைநாதர் சைனர்; இவரை ஆதரித்தவர் இன்னார்; இவரது உரையியல்புகள் இவை; இவரது காலம் இன்னது; உரையால் விளங்கும் செய்திகள் இவை; இவருடைய கொள்கைகள் இன்னின்னன; உரையில் மேற்கோளாக வந்த இலக்கிய இலக்கண நூல்களின் பட்டியல்கள் என்பவை இவையிவை;'' என எளிமையாக்கியுரைத்துள்ளார்.

பாடவேறுபாடு :

ஏட்டுச் சுவடியிலிருந்து இலக்கியத்தையோ இலக்கணத்தையோ பதிப்பிக்கும்போது எழும் சிக்கல்களுள் ஒன்று **பாடவேறுபாடு**. படி எடுக்கும்போது படி எடுப்போர் சொல், தொடர். அடிகளில் மாற்றம் ஏற்படும்படி படி எடுத்துவிடுவதுமுண்டு. பாடவேறுபாடுகளை ஆராய்ந்து எது சரியான பாடம் எனத் தேர்ந்திட வேண்டும். பாடவேறுபாடுகளைக்குறிக்கவும் வேண்டும். டாக்டர் உ. வே. சா. அவர்களின் பதிப்புக்களில் அமைந்த பன்முகச் சிறப்புக்களில் அவர் அனைத்துப் பாடவேறுபாடுகளையும் சுட்டுவதும், அவை தம்மில் உரிய பாடத்தை உரிய காரணங்களால் தேர்வு செய்வதும் மிக முதன்மை வாய்ந்தவொன்றாகும்.

ஒருவர் உரத்துச் சொல்ல ஒருவர் படியெடுக்கும் வழக்கம் உண்டு. அப்படி உரத்துச் சொல்வோர் உச்சரிப்பில் போதிய அளவு கவனம் செலுத்தவில்லையானாலும், உச்சரிப்பு சில வேளைகளில் தடுமாறி வேறுபட்டாலும் பாடவேறுபாடு தோன்றும். இலக்கியத்தைத் தொடர்ந்து படியெடுத்துக் கொண்டேயிருப்போர், தம்மையறியாமல் மயங்கித் தவறுவதும் உண்டு. இலக்கியத்தில் ஈடுபாடு காட்டாமல் கட்டளையின் காரணமாகக் கீழ்ப்படிந்து படியெடுப்போர் தவறு நிகழ்த்தவும் வாய்ப்புள்ளது. இலக்கிய அறிவு குறைந்தோர் படியெடுப்பினும் இப்படி நிகழலாம். மூல இலக்கியத்திற்கும் அதற்கு உரையெழுதியதற்கும் இடையில் கால இடைவெளி நீண்டு இருப்பதால் எழுத்துமொழியிலும் பேச்சு மொழியிலும் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். அவற்றை அறியாமல் படியெடுப்போர் தவறிவிடவும் வாய்ப்புள்ளது. படியெடுப்போர் தம் கருத்துக்களைப் புகுத்தலும் நேரக்கூடியதே.

இங்ஙனம் தோன்றும் படியெடுப்புச் சிக்கலால் பதிப்பிப்பதில் சிக்கல் தோன்றுவது இயற்கையாம். உ. வே. சா. தாம் பதிப்பித்த நூல்களில், பாடங்களை மேற்கொள்ளுகையில் மிகக் கருத்துடன் ஆராய்ந்து, தகுந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து எஞ்சியவற்றை மூலத்தினடியிலேயே 'பிரதி பாடம்' எனக் குறித்துள்ளார். அவர் தாமாக எம்மாற்றமும் செய்தாரிலர். பிரதிபாடம் சிலரால் பாடமாகக் கருதப் பெறலாம். ஒருவேளையில் அது சரியான பாடமாகவும் இருக்கலாம். அதனால் தம்கருத்தையே பிறரும் கொள்ள வேண்டுவதின்று என்ற எண்ணங் கொண்டிருந்தார் சாமிநாதன் என்பது இதனால் விளக்கமாகும்.

வேறுபடிகளுடனோ நூல்களுடனோ ஒப்புநோக்கிப் பார்க்க வாய்ப்பில்லாமல் போகுமானால் தவறைத் திருத்திப் பதிப்பிக்கலாம். அங்ஙனம் திருத்தும்போது ஆசிரியரின் நடையையும் தொடரமைப்பையும் நன்கறிந்தே திருத்த வேண்டும். உ. வே. சா. அங்ஙனம் ஆய்ந்து திருத்திப் பதிப்பித்திருக்கிறார். தவறென்று தெரிந்தவற்றைக் களைந்து சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தங்களைத் திருத்திப் பதிப்பித்திருப்பதாக உ. வே. சா. முகவுரையில் குறித்துள்ளார்.[13]

---

13. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் பக். 2.

பத்துப்பாட்டு போன்ற பெருநூல்களைப் பதிப்பித்தபோது உ. வே. சா. திருமுருகாற்றுப்படையில் ஒரேயொரு பாட வேறுபாட்டினைப் பதிப்பித்துள்ளார். திருமுருகாற்றுப்படை சைவ சமய இலக்கியம். சமயப்பற்றாளர்தம் வழிபாட்டு நூலைச் செவ்வையாகச் செய்திருந்தனர் எனலாம். மற்றும் பெரும் ஆதீனங்கள் கவனஞ் செலுத்திப் படியெடுத்துப் பாது காத்ததும் உண்டு. அதனால் பாடவேறுபாடு குறைந்திருந்தது.

பட்டினப்பாலை, நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு முதலிய நூல்களிலும் குறைவான பாடவேறுபாடுகளே காணப்பட்டன. அகச் செய்திகள் நிரம்பிய இத்தகு நூல்கள் பலராலும் விரும்பிக் கற்கப்பட்டிருக்கும். இதனால் பெரு வழக்காயின்மை பாடவேறுபாடு குறைவானதற்குக் காரண மாகலாம்.

பாடவேறுபாடுகள் குறைவாக இருந்தாலும், பாடலின் பல படிகள் கிடைத்தாலல்லவா நூலை ஆய்ந்து பதிப்பிக்க முடியும்? குறிஞ்சிப்பாட்டின் ஏட்டுச்சுவடி முழுமையாக இல்லாமையால் தாம்பட்ட பாட்டினைக் கட்டுரையாக்கியுள்ளார் உ. வே. சா. தொண்ணூற்றொன்பது மலர்களைப் பற்றிக் கூறியுள்ள குறிஞ்சிப்பாட்டில் மூன்று பூக்களுள்ள ஒரு சுவடி மட்டும் கிடைக்காமல் போயிற்று. அந்த உதிர்ந்த மலர்களைப் பற்றி ஒரு கட்டுரையை 'நல்லுரைக்கோவை' (நான்காம் பாகம்)என்னும் நூலில் எழுதியுள்ளார்.[14] அந்த உதிர்ந்த மலர்களை அறிந் தமையை விளக்கும் குறிஞ்சிப் பாட்டின் கதையையும் சுவை யாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதிப்பு இடர்கள் :

பத்துப்பாட்டுள் ஒன்றான குறிஞ்சிப்பாட்டைக் கூறவந்த அவர் பத்துப்பாட்டின் ஒரு படியும் கிடைக்காமல் பட்ட இடர்ப்பாட்டினைத் தொடக்கமாகக் கொண்டு அக் கட்டுரையை எழுதியுள்ளார்.

---

14. டாக்டர். உ. வே. சா. நல்லுரைக்கோவை (நான்காம் பாகம்) சென்னை, 1952 பக். 45-66.

"பத்துப்பாட்டை நான் ஆராய்ந்து பதிப்பிக்கத் தொடங்கியபோது எனக்கு முதலில் மூலமுள்ள பிரதி கிடைக்கவில்லை. பதவுரை மட்டும் அடங்கிய பிரதிகளே கிடைத்தன. அதன் முதற்பதிப்பில் (1889-ஆம் வருஷம்) உரையிலிருந்து தொகுத்த மூலத்தையே வெளியிட்டேன். அக்காலத்தில் மூலப் பிரதி எங்கேனும் கிடைக்குமோவென்று சிரமப்பட்டுத் தேடியும் பயனில்லை. உரையில் நச்சினார்க்கினியர் கொடுத்துள்ள மூலப் பகுதிகளை இணைத்து எதுகை,மோனை, பொருட்டொடர்பு முதலியவற்றை ஆராய்ந்து ஒரு வகையாக அமைத்துக் கொண்டேன்" என்கிறார்.

மூலமே இல்லாத நூலை, பதவுரையை மட்டும் கொண்டுள்ள சுவடி வழியே மூலபாடம் இதுதான் என ஆய்ந்து பதிப்பித்திருக்கிற உழைப்பு வணங்கத்தக்க உழைப்பாகும். பாடவேறுபாட்டினைக்கூடக் குறித்துவிட வேண்டும் என்ற நடுநிலை உணர்வுள்ளவர், பத்துப்பாட்டுக்கள் அடங்கியுள்ள ஒரு பெருநூல் தொகுதியை மூலப்படி கிடைக்காமலேயே வெளியிட்டிருக்கின்றார் என்றால், அவரது சூழலை ஆராய வேண்டிய கடமையும் உள்ளது. அவரது உறுதியையும், பரந்துபட்ட அறிவையும் போற்றும் கடமையும் உள்ளது.

உத்திமுறை :

குறிஞ்சிப்பாட்டினைப் பதிப்பிக்க இயலாமல் ஓர் இடையூறு இருந்தது என்பதைக் கூறியவர் அந்த இடையூறு என்னவென்றே கூறாமல் குறிஞ்சிப்பாட்டின் கதைக்குள் நுழைந்து விட்டார். கதையின் சுவையை உணர்த்திப் பின்னர் இடையூறினைக் கூறினால் அதன் வலிமையைப் புரிந்து கொள்ள முடியும் என எண்ணிக் கதையைக் கூறியுள்ளார்.

"பத்துப்பாட்டில் எட்டாவது பாட்டாக இருப்பது குறிஞ்சிப் பாட்டென்பது. அது சங்கப் புலவர்களில் தலை சிறந்தவராகிய கபிலரால் ஆரிய அரசனாகிய பிரகத்தன் என்பவனுக்குத் தமிழின் நயத்தைத் தெரிவிக்கும் பொருட்டுப் பாடப்பெற்றது" என வரலாற்றை முன் வைத்து ஆர்வத்தைத் தூண்டியுள்ளார். பிறமொழியாளனுக்குத் தமிழை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என அறிந்து கொள்ளும் ஆர்வமும், தமிழின் நயந்தான் என்ன! என

உணரும் வேட்கையும் ஒருங்கு கலக்க, அக்குறிஞ்சிப்பாட்டைக் கற்றிட மனம் விரைகிறது. அவரும் சுவையைக் கூட்டித் தொடங்கினார்.

"அதன் கண் ஒரு தலைவி தலைவனைக் கண்டு காமுற்று அளவளாவிய செய்தியாகிய களவொழுக்கம் மிகவும் அழகாகச் சொல்லப்படுகிறது".

களவொழுக்கம் என்றவுடன் எல்லார் நெஞ்சமும் ஒருமை யுணர்வுடன் கதைக்குள் நுழைந்துவிடும். எனவேதாம் 'காமுறுதல்' என்ற சொல்லை முதலில் சொன்னார் உ. வே. சா.

"மலைவாணர் மகளாகிய ஒரு தலைவியை அவளுடைய தாய், 'தினைக் கொல்லையைக் காத்துவருவாயாக' என்று கூறித் தோழியுடன் அனுப்பினாள். தலைவியும் தோழியும் தினைக் கொல்லைக்குச் சென்று பரண்மேலிருந்து கிளி முதலியவற்றை ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

"பிறகு அருவியிலே விளையாடி மகிழ்ந்தும், பாட்டுக்களைப் பாடியும் பலவகையான அழகிய மலர்களைப் பறித்துப் பாறை யிலே குவித்தும் தழைகளையெல்லாம் ஆடைபோலக் கட்டி உடுத்தும், மாலை தொடுத்து அணிந்தும், இடையிடையே கிளி களை ஓட்டியும் பொழுது போக்கினார்கள்.

"அப்பொழுது அங்கே ஒரு தலைவன் வந்தான். அவன் அழகும் வீரமும் உடையவன். அவன் தன் தலைமயிரில் எண்ணெயும் மயிர்ச்சாந்தும் பூசியிருந்தான். அகிற்புகையினால் அதனை உலர்த்தினமையால் அதில் வாசனை கமழ்ந்தது. அவ் வாசனை பற்றி வண்டுகள் அவன் குடுமியிலே மொய்த்தன. பல மலர்களை அவன் தன் தலையில் அணிந்து பிச்சி மலரால் தொடுத்த ஒற்றை வடத்தைச் சுற்றிக் கொண்டிருந்தான். ஒரு காதில் அசோகந்தளிரைச் செருகியிருந்தான். பூமாலையும் ஆபரணமும் அவன் மார்பிலே விளங்கின. கையில் வில்லையும் அம்புகளையும் ஏந்தியிருந்தான். இடையிலே கச்சையும் காலிலே வீரக் கழலும் திகழ்ந்தன.

"அவனோடு சில நாய்கள் வந்தன. அவை குரைத்துத் தலைவியையும் தோழியையும் வளைத்துக் கொண்டன. அவர்கள்

அஞ்சி வேறிடத்திற்குச் செல்ல முயன்றார்கள். அப்பொழுது அவ்வீரன் அவர்களை நோக்கி இனிய சொற்களைக் கூறி அவர்கள் அழகைப் பாராட்டினான்.''

''எப்படியேனும் அவர்களோடு பேச வேண்டுமென்பது அவன் விருப்பம். அதனால் பொய்யாக, 'நான் வேட்டையாடி வந்தேன். யானை முதலிய சில மிருகங்கள் எனக்குத் தப்பி இங்கே வந்தன. அவற்றை நீங்கள் கண்டீர்களோ?' என்று வினவினான். மகளிர் இருவரும் நாணமிகுதியால் ஒன்றும் விடை பகரவில்லை.

மேலும் அவன், 'என் வினாவிற்கு ஏற்ற விடை தரா விடினும் என்னோடு ஒரு வார்த்தையாவது பேசக் கூடாதா? என்று சொல்லிவிட்டு ஒரு பூங்கொம்பை எடுத்துக் குரைத்துக் கொண்டிருந்த நாய்களை அடித்து அடக்கினான். தலைவியின் வாயிலிருந்து ஒரு சொல்லேனும் வருமோவென்று எதிர்பார்த்து நின்றான் அவன். ஒன்றும் வரவில்லை.

அப்பொழுது, வேடன் ஒருவனால் தினைப் புனத்திலிருந்து துரத்தப்பட்ட ஒரு யானையானது மதமிகுந்து மரங்களை ஒடித்துக் கொண்டுஅவ்வழியேவந்தது. அதைக்கண்ட அம்மகளிர் இருவரும் அஞ்சி நடுங்கினர். அவர்களுடைய நாணம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. உயிருக்கே ஆபத்துவந்தபோது நாணம் என்ன செய்யும்! உடனே அவ்வீரனருகிலே ஓடிச்சென்று அவர்கள் நடுங்கி நின்றார்கள்.

நினைத்த பொருள் கைவந்தவனைப் போல அவன் மகிழ்ந்து மிகவும் எளிதாக ஓர் அம்பைத் தொடுத்து அந்த யானையின் முகத்தில் எய்தான். அது வெருவி ஓடிவிட்டது. மகளிர் அச்சம் நீங்கினர்.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே ஒரு வகை அன்பு உண்டாயிற்று. பிறகு மகளிர் இருவரும் மலையருவியிலே குதித்து விளையாடுகையில் கால் நிலையாமல் நீரால் இழுத்துச் செல்லப்பட்டனர். அப்பொழுது விரைவில் தலைவன் சென்று அவர்களைக் காப்பாற்றினான். தலைவியைத் தழுவிக்கொண்டு அன்பு காட்டினான். அது முதல் அவ்விருவரும் காதலராயினர். தினந்தோறும் சென்று தலைவன் தலைவியைக் கண்டு

அளவளாவி வந்தான். தலைவி காலையிலே தினைப்புனஞ் செல்லுவதும் கிளியை ஓட்டுவதும் தலைவனைக் கண்டு பேசி அளவளாவி மகிழ்வதும் மாலையிலே தன் வீடு திரும்புவதுமாக இருந்து வந்தாள்.

பின்பு தினைக் கதிர் விளைந்தவுடன் தலைவிக்குத் தினைப் புனம் காக்கும் வேலை ஒழிந்தது. இதனால் அவள் தன் வீட்டிலேயே இருந்தாள். அக்காலத்திலே தலைவன் இராப் பொழுதில் அவளை நாடி வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தான்.

அவன் வரும்போது இராக்காலமாதலின் இடைவழியிலே அவனுக்கு நேரக்கூடும் அபாயங்களுக்கும் தன்ஊரிலும் வீட்டிலும் உள்ள காவல்களுக்கும் பயந்து தலைவி வருந்தினாள். அந்த வருத்தமிகுதியினால் அவள் உடல் மெலிவுற்றது. அம் மெலிவைக் கண்ட தாய் முதலியோர் அதற்குக் காரணம் யாதென்று ஆராயத் தொடங்கினர்.

தலைவிக்கு உண்டான நோய் மருந்தால் தீர்வதன்றென் பதைஅவர்கள் அறிந்திலர். முதியவர்களையும் தெரிந்தவர்களை யும் கேட்டார்கள்; கடவுளுக்குப் பூசை போட்டனர்; அவர்களால் நோயின் காரணத்தை அறிய முடியவில்லை. உண்மையறியாமல் அவர்கள் வருந்துவதையும், தான் தலைவனை மணம் செய்து கொள்வதற்கு வழியின்றி துன்புறுவதையும் தலைவி உணர்ந்து யோசித்தாள். 'நம்முடைய காதலை வெளிப்படுத்தாவிடின் அதனையறியாத இவர்கள் ஏதேனும் செய்யத்துணிவார்கள். அதனால் நம்முடைய காதலுக்கும் கற்புக்கும் குறை நேரும். ஆபரணங்கள் உடைந்துவிட்டால் மறுபடி திருத்தியமைத்துக் கொள்ளலாம். ஒழுக்கமும் கற்பும் வழுவினால் மறுபடியும் அமைத்துக்கொள்ள முடியுமா? எப்படியேனும் நம் நிலையைத் தாய்க்குத் தெரிவிப்பதுதான் பரிகாரம்' என்று துணிந்தாள்; துணிந்து தன் உயிர்த்தோழிக்கு அதனை அறிவித்தாள். அத் தோழி அதனைக் கேட்டு அவள் விருப்பத்தின்படியே செவிலித் தாய்க்குத் தலைவியின் காதல் வரலாற்றைச் சொல்லுகிறாள்''.

இந்த முறையில் குறிஞ்சிப்பாட்டு அமைந்துள்ளது என அப் பாட்டின் முழுப் பொருளையும் விளக்கியுள்ளார் உ. வே. சா. நூலில் உள்ள வருணனைகள், பழக்க வழக்கங்கள், பண்பாடு,

உளவியல் ஆகியவை நிரல்பட அமைந்துள்ள பான்மையை அழகு பட விளக்கியுள்ளார். எளிய சொற்களால் இனிய ஒழுக்கத்தை எடுத்துரைத்துள்ளார்.

"தலைவியும் தோழியும் பல மலர்களைப் பறித்துப் பாறையிலே குவித்த செய்தி கூறப்படுமிடத்தில் 99 மலர்களின் பெயர்கள் வருகின்றன. இவ்வளவு பூக்களின் பெயர்களை எதற்காக அடுக்கி இங்கே சொல்ல வேண்டும்? என்று யோசித்தேன். ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சிறப்பை அறிவுறுத்த வந்த கபிலர், 'தமிழர்கள் இயற்கையின் எழிலை நன்குணர்ந்தவர்கள். நிலப்பாகுபாடுகளையும் மரஞ்செடி கொடிகளின் இயல்புகளையும் தெளிவாக ஆராய்ந்தவர்கள். அவர்களுக்கு வார்த்தைப் பஞ்சமில்லை' என்பதை அவ்வரசன் தெரிந்துகொள்வதற்காக இவ்வாறு பாடியிருக்க வேண்டுமென்று கருதினேன்.

மாலைக் காலத்தை எவ்வளவு அழகாக அவர் அதில் வருணித்திருக்கிறார்!

'சூரியன் அத்தகிரியிலே மறைகிறான். மான் கணங்கள் மரத்தடியிலே வந்து கூடுகின்றன. பசுக்கூட்டங்கள் வயிறார மேய்ந்துவிட்டுத் தம்முடைய கன்றுகளை நினைந்து விளித்துக் கொண்டே மந்தைகளிற் புகுகின்றன. அன்றிற் பறவை பனை மரத்தில் இருந்து துணையை அழைக்கின்றது. பாம்பு இரை தேடும் பொருட்டு மணியை உமிழ்கின்றது.

'ஆடு மேய்ப்பவர்களெல்லாம் தம்முடைய புல்லாங்குழலில் ஆம்பற்பண்ணை வாசிக்கின்றனர். ஆம்பலரும்புகள் இதழ் விரிக்கின்றன.

'வீடுகளிலெல்லாம் சுமங்கலிகள் விளக்கேற்றுகின்றனர். அந்தணர் அந்திக்கடனைச் செய்கின்றனர்.

"கிளைகளின்மேல் அமைந்த பரண்களில், வேடர்கள் கொடிய மிருகங்களை அச்சுறுத்தக் கொள்ளிக்கட்டையால் தீ உண்டாக்குகின்றனர். மேகங்கள் மலையைச் சூழ்கின்றன. காட்டிலே 'கல்'லென்ற ஒலி உண்டாகின்றது. புள்ளினங்கள் தத்தம் கூடுகளில் வந்து ஒலிக்கின்றன. இப்படி மாலை வந்தது".

இவற்றைப் படிக்கப் படிக்க மனக்கண்முன் காட்சிகள் விரியும்; பலமுறை படிக்கத்தூண்டும்.

இந்நிலையில் மலர்களை வரிசையாகச் சொல்லும் பகுதியின் இடையே சில அடிகள் விட்டுப்போனால் அழகு சிதையுமல்லவா? செங்காந்தள் பூ முதல் செம்பூ வரையில் உள்ள மலர்களின் பெயர்களிடையே செங்கொடுவேரி என்னும் பூவிற்கும் கூவிளம் பூவிற்கும் இடையிலே சில மலர்கள் காணப்படவில்லை. எத்தனை மலர்கள் உதிர்ந்து போயினவென்று அவருக்கு விளங்க வில்லை. அவற்றைத் தேடிக் கோத்தால்தான் பாமாலை முழுமை யுறும். அதனால் ஏடுதேடி நிரப்புதற்கு முனைந்தார் சாமிநாதன்.

தம்மை ஆதரிக்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் தரும புர ஆதீனத்திற்கும் பகைமை இருந்து வந்ததையும் பொருட்படுத் தாமல், ஏடுதேடித் தருமபுரம் சென்றார். சில உதிர்ந்த சுவடி களைத் தேடிப்பெற்றார். அவற்றுள் அவர் தேடிய உதிர்ந்த மலர்க்ள் இருந்தன. அவர் அடைந்த மகிழ்வுக்கு அளவு இருக்குமா ?

தமிழுக்குப் பகையில்லை என்பதை மெய்யாக்கினார் டாக்டர் உ. வே. சா.

விடுபட்ட மலர்கள் மூன்றென்பதையும் அறிந்தார். மொத்தம் 99 மலர்கள் எனவும் கணக்கிட்டார். பத்துப்பாட்டும் முழுமை யான பதிப்பாக வெளி வந்தது. சுவடிக்குறை படியெடுப்போரால் நிகழ்வது போலவே, உதிரும் ஏடுகளாலும் நிகழும் என்பதையும் அறிய முடிகின்றது. அப்படிப்பட்ட நிலையில் கடினமாக உழைக்க வேண்டிய நிலை இருந்தமையையும் அறிய முடிகின்றது.

ஒரு நூலை வெளியிடும் முன்பு ஏட்டுப்படிகள் பலவற்றையும் பொறுமையாகத் தேடவேண்டும். பல ஏட்டுச் சுவடிகளையும் பார்த்துப்பாட வேறுபாடுகளைத் திரட்டி, மூலபாட ஆய்வு செய்ய வேண்டும். மூலபாடத்திற்கு ஏட்டுப்பிரதி கிடைக்கவில்லையா னால் உரைப்பகுதியை வைத்து ஒழுங்கு செய்து எதுகை மோனை இன்னபிற யாப்பமைதி வருமாறு மூலபாடத்தை வரையறுத்து எழுதவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் காலமும் முயற்சியும் நிரம்பவாகும். பொறுமையும் இடையறா உழைப்பும் தேவை. இந்த

ஆய்வுவழி இன்பம் கிட்டும் என்னும் ஆர்வநிலை கொண்டவரே ஈடுபட முடியும். உண்மையை அறியப் பகையை மறக்கவும் வேண்டியிருக்கும். தடுமாற்றம் சலிப்பு ஏற்படாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும் வேண்டும். இவை சாமிநாதனுக்குக் கைவந்த கலை.

''இப்படித் தடுமாறித் தடுமாறிச் சிரமப்படுவதில் எனக்கு அலுப்புத்தோன்றவில்லை. மேலும் உற்சாகமே உண்டாயிற்று. ஏதேனும் ஒரு மேற்கோளாக, ஒரு விஷயமோ, ஒருபாடமோ தெரியாமல் மயங்கித் தவித்து நின்று பிறகு விளங்கினால் அதற்கு முன்பு பட்ட சிரமங்களெல்லாம் மறந்து போகும். பின்னும் பதின்மடங்கு ஊக்கம் ஏற்படும்,'' 15 என்னும் அவர் கூற்றே அவரது ஆய்வின் வெற்றியைப் புலப்படுத்தும்.

குறிப்புரை :

குறிப்புரைக்கும் தம் உழைப்பை நல்கியுள்ளார் உ. வே. சா. குறிப்பாகச் சொல்லும் உரைதாமே என மேம்போக்காகக் குறித்தாரல்லர். உரையாசிரியர்வழியே மேலும் விளங்கஞ் செய்வது தாமே குறிப்புரை எனக்கருதினாரல்லர். குறிப்புரைகள் வழியே சிறந்த பதிப்பாசிரியராக அமையும் வண்ணம் உழைத்துள்ளார். பிற்காலத்தில் இந்நூல்களை ஆராயப்புகுந்தோர் பலருக்கும் ஆய்வுச் செய்திகளை வழங்கும் களஞ்சியங்களாக இக்குறிப்புரைகள் திகழ்ந்தன; திகழ்ந்து வருகின்றன. உ. வே. சா அவர்களின் பன்னூல் அறிவும், மிகச் சிறந்த நினைவாற்றலும், அறிவியல் ஒழுங்கு நியதியோடு கூடிய ஆராய்ச்சித்திறனும் இக்குறிப்புரைகளால் வெளிப்பட்டன. முதற்கண், நூல் இறுதியில் வைக்கப்பட்ட குறிப்புரை, பின்னர் மூலத்தின் கீழே அவ்வப் பக்கத்தின் அடிக்குறிப்பாகவே குறிக்கப்படலாயின.

நூலிலோ நூலுக்கு விளக்கமாக அமைந்த உரையிலோ காணும் குறிப்பிடத்தக்க சொற்கள், தொடர்கள், அடிகள் முதலியவற்றிற்கு இணையானவை வேறு இலக்கிய, இலக்கண நூல்களில் காணப்படக்கூடும். அவற்றையெல்லாம் தொகுத்துக் குறிப்புரையில் தந்துள்ளார்.

---

15. என் சரித்திரம், ப. 560.

இம்முறையோடு மட்டுமல்லாமல் நூலினுள் உள்ள உவமைகள், மரபுச் செய்திகள், புராணக் கதைகள், வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவற்றிற்கு விளக்கங்களையும் எழுதியுள்ளார். இவ்விளக்கங்களுக்குச் சான்றுகளாக உள்ள பிற இலக்கிய இலக்கண நூல்களின் மேற்கோள்களையும் இணைத்துள்ளார். நூலின் பழைய உரை சில இடங்களில் சிதைந்து போயிருந்தால் அதற்கும் தாமே உரைவகுத்துள்ளார்.

ஆராய்ச்சியும் குறிப்புரைகள் வழியே நடத்தியுள்ளார். திணை, துறை போன்றவற்றின் பொருத்தங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். மன்னர்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள் இவற்றைச் சுட்டிக்காட்டி வரலாற்றையும் வரைந்துள்ளார்.

நூலிலும் உரையிலும் காணும் சுவையான பகுதிகளுக்கு மேலும் இனிய விளக்கமும் செய்துள்ளார். இசை முதலிய கலைக்குறிப்புக்களையும் தந்துள்ளார்.

சிற்றிலக்கியங்கள் பலவற்றிற்கும் இவரே குறிப்புரை எழுதியுள்ளார். பேரிலக்கியங்கட்குப் பழைய உரைகள் இருக்கின்றனவாதலால் அவற்றிற்குக் கீழே குறிப்புரைகளை எழுதியுள்ளார். சமய இலக்கியமாயிருந்தால் அச்சமய நூல்களிலிருந்து பல குறிப்புக்களைத் தந்துள்ளார்.

சான்றாக, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் 51-ஆம் பாடலில்வரும் 'மும்முரசு' என்னும் சொல்லுக்கு 'வீரமுரசு' 'தியாகமுரசு' 'மணமுரசு' என்பன (புறநா. 58:12 உரை) என்று குறிப்புரை வழங்கியுள்ளார். புறநானூற்றின் உரை வழியே மும்முரசுகள் எவையென்பதனை அறிந்தமையால் இவ்விளக்கக் குறிப்பு அவரால் எழுத முடிந்தது. அஃது அனைவருக்கும் பயனாயிற்று.

'கரும்புக்காடு' என்னும் பொருளில் 'கன்னல்பைங்காடு' என்னும் தொடர் 55-ஆம் பாடலில் வந்துள்ளது. அதற்கும் கரும்பல்லாது 'காடறியாப் பெருந்தண்பணை' (புறநா. 16;15—16) 'கரும்பலாற் காடொன்றில்லாக் கழனி சூழ் பழனநாடும்' (சீவக. 2902)'' என்ற இருபேரிலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டியுள்ளார்.

81-ஆம் பாடலில் அம்பிகையைச் சிவனுக்குத் தாயென்றார் குமரகுருபரர். "சத்தித் தத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றுதலின் அம்பிகையைச் சிவபிரானுக்குத் தாயாகக்கூறினார் என்று விளக்கம் தந்துவிட்டு, இக்கருத்தினைக் குமரகுருபரரே சிதம்பரச் செய்யுட் கோவையின் 33-ஆம் பாடலில் கூறியுள் ளார் என முதலில் குறித்தார். பின்னர்த் திருவாசகம், திருச் சிற்றம்பலக் கோவை, திருமந்திரமாலை, சிவஞானசித்தி ஆகிய சைவ சமய நூல்களிலிருந்தும் மேற்கோள்களைக் காட்டி யுள்ளார்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் காப்புப் பருவத்தின் இரண்டாம் பாடல் சிவபெருமானைப் பற்றியது. 'சிகர வடவரை' எனத் தொடங்கும் அப்பாடலின் சந்தக்குழிப்பைக் கூறியுள்ளார். "தனன தனதன தன்ன தனதன தனன தனதன தய்யனத் தாத்தன" எனக் குறித்துள்ளார். சந்தக்குழிப்புள்ள பாடல்களுக்கெல்லாம் இவ்வாறு குறிப்புரையைத் தந்துள்ளார். 11, 21, 22, 31, 51 முதலிய பாடல்களின் சந்தக்குழிப் புகளைக் காண்க. அவரது இசையறிவு இதற்குப் பயன் பட்டுள்ளது.❀

'கோசர்' என்னும் மன்னவரைப் பற்றிய குறிப்பு குறுந் தொகையில் வந்தவுடன் அவர் சங்க இலக்கிய முழுமையிலும் கோசர் பற்றிய குறிப்புக்களை எடுத்து மொழிந்துள்ளார். கோசர் ஆலத்துப் பொதியிலில் இருந்தனர் என்றும், கோசர் நன்மொழி கூறினர் என்றும், அவர் நான்கு வகையினர் என்றும், கோசர் மொழி உண்மையாயிற்று என்றும் குறுந்தொகையின் 15-ஆம் பாடலைக் கொண்டு சான்றுகளைக் காட்டியுள்ளார். கோசர் சூழ்ச்சி மிக்கவர் என்று 83-ஆம் பாடல் கூறும் என்பதையும் குறித்துள்ளார். குறுந்தொகையல்லாது புறநானூறு (169, 396) அகநானூறு (15, 90, 113, 196, 205, 216, 251, 262)

❀ 'தமிழர் இசை' என்னும் ஆயிரம் பக்கநூல் டாக்டர் அ. நா. பெருமாள். அவர்களால் எழுதப் பெற்று ஓர் இசை வரலாறு நூலாகவே தமிழுலகில் பிறங்குகிறது. இந்நூலின் போக்குகள் பதிப்புச் செம்மல் டாக்டர் உ. வே. சா. ஒவ்வொரு துறை பற்றியும் எடுத்து விளக்கும் உத்திமுறையைக் கொண்டமைந்த பாங்கினது என்பதை இங்கு நினைக்கலாம்.

மதுரைக் காஞ்சி (508-9, 773) சிலப்பதிகாரம் (உரைபெறு. 2, அரும்பத) போன்ற இலக்கிய நூல்களிலிருந்தும் பாடல், அல்லது வரிகளைக் குறிப்பிட்டுச் சான்றுகளைத் தந்துள்ளார்.

கோசர் என்ற சொல்லிற்கு "ஒருவகை வீரர் என்ற விளக்கம் தருவதுடன் அமையாது, அவ்வீரர்களுடைய பல் வேறு இயல்புகளையும் விரிவாகப் புலப்படுத்தியுள்ளார். இன்று வழக்கில் இல்லாத சொல்லென்பதால் குறிப்புரையை நன்கு விளக்கியுள்ளார்.

சொல்லாய்வு :

உலக வழக்கில் பயின்றுவரும் சொற்களையும் சொற்றொடர்களையும் கூட அகர வரிசைப்படுத்தித் தந்துள்ளார். குமரகுருபர சுவாமிகள் இயற்றிய சிற்றிலக்கிய நூல்களைப் பதிப்பித்தபோது, குமரகுருபரர் உலக வழக்குச் சொற்களைக் கையாண்டமையைத் தொகுத்துள்ளார்.

"அப்பா (161), அமர்க்களம் செய்தல் (694) அருமைப் பிள்ளை (426) அருவருப்பு (451, 534) இந்தா (114), இன்று நாளையிலே (137), இன்றைக் குழந்தை (417), உடுப்பு (539) உளதோ இல்லையோ (187), எட்டிப்பிடித்தல் (79), ஓடியாடித்திரிதல் (79), கம்முதல் (367), காயம், (659), கிழம் (530), கிழவி (115), குஞ்சு (184), குத்தகை (335) கொட்டிப் போதல் (436), சரக்கு (696), சிணுங்குதல் (441), சிறுபிள்ளை (352), செட்டு (111), செலவாய் விடுதல் (661), திக்கு (416, 686), துவக்குதல் (159), துளையமாடுதல் (401) நாளை யின்றென நவிற்றல் (593), நேரிட்டிடப்பட்ட (362), பயல் (621) பரபரப்பு (295), பாவி (383), பிஞ்சி (184) பெண் பிள்ளை (33, 663) பொழுதைக்கு (128), முகப்பு (95, 155, 697) வரத்து (181), வேலை 90, 690)."

"அந்த (345), எந்த (1 : 116), மார் (538), நஞ்சு (நைந்து, 674) என்பன பொன்ற மரூஉ மொழிகளையும் இவர் ஆள்கின்றார். மலையாள வழக்காகிய சோதித்தல் (வினாதல் 1 : 97), நங்களுக்கு (107) என்பன இவர் செய்யுட்களில் வந்துள்ளன. ஹிந்துஸ்தானிச் சொற்களாகிய சலாம் (6), கபாய் (12, 505) என்பனவற்றையும் பிறதிசைச் சொற்களாகிய துரை (29, 72, 83, 93) சலாபம் (48) என்பனவற்றையும் இவர் விலக்கின்றி உபயோகிக்கின்றார்".[16]

---

16. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு ப. 87,

இவ்வாறே தமிழ்நாட்டு வட்டார வழக்குகளையும் டாக்டர் குறித்துள்ளார். குமரகுருபரர் தென்பாண்டி நாட்டுக்காரர்; திருவைகுண்டம் சொந்த ஊர். அதனால் 'வைத்து' என்னும் சொல் நடையைப் பயன் படுத்தியுள்ளார் என்றார் (555, 324). அலுவல் (காரியம் 72) திரிய (மீட்டும் 206), தோரணம் வைத்தல் (613) முட்டு (முழங்கால் 643) என்னும் பாண்டிய நாட்டு வழக்கு களையும் தொகுத்துள்ளார்.

காலந்தோறும் வழங்கிவரும் சொற்களும், பொருளும் இலக்கிய மொழிநடை ஆய்வுக்கும் மொழியியலின் பிறதுறை ஆய்வுகட்கும், கால ஆய்வுக்கும் பயன்படும் என்பதால் இவற்றையெல்லாம் திரட்டி வழங்கியுள்ளார்.

பாடலின் பொருளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவும் சொற்பொருளின் தெளிவுக்காகவும் இவை பயன்படும்.

மேலும் உ. வே. சா. பதவுரையிலும் மெருகு சேர்த்துள்ளார். பதவுரையில் பொருள் தெளிவு பெறும் பொருட்டு, அடிப்படையான தொடரமைப்பினை ஒழுங்குற அமைத்துள்ளார். தொக்கு (மறைந்து) உள்ளவற்றை விரித்துரைத்துள்ளார். சொற்பொருளை மட்டும் கூறினாலே புரிந்து கொள்ள முடியும் என்னும் பகுதிகளில் அதனை மட்டுமே கூறியுள்ளார்.

அரிய பழைய வழக்குச் சொற்களுக்குத் தம்காலத்து வழங்கும் சொற்களை எழுதிப் பாடற்பொருளைக் கற்போருக்கு நன்கு உணர்த்தியுள்ளார். பழந்தமிழ்ச் சொற்களில் பல இன்று வழக்கத்தில் இல்லை. சில சொற்கள் பொருளில் மாற்றம் பெற்று வழங்குகின்றன. சில சிறப்புப் பொருள் பெற்று உயர்ந்த சொற்களாகப் பேசப்பட்டு வருகின்றன. சிறப்புப் பொருளில் வழங்கி வந்த சொற்கள் அச்சிறப்பினை இழந்து எளிய நிலையில் பயின்றும் வருகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம் மொழியின் மரபு மட்டுமல்ல; இலக்கிய மரபும்தான் என்பதையுணர்ந்துள்ளார். இவ்வாறெல்லாம் ஈடுபட்டு உ. வே. சா. பணிகள் புரிந்ததற்குக் காரணம் அதனால் பொருள் மயக்கம் வந்துவிடக்கூடாது என்பது கருதியேயாகும்.

சிற்றிலக்கியங்களுள் உலா இலக்கியமும் ஒன்று. அதில் ஏழுபருவ மகளிர் பற்றிக் கூறப்பட்டுள்ளது, அரிவை, மடந்தை

என்பன ஏழுவகைப் பருவங்களுள் இரண்டு. இவ்விரண்டு சொற்களும் இடைக்கால இலக்கியமான உலா இலக்கியத்தில் பொருட்சிறப்பினைப் பெற்றன. ஆனால் சங்க இலக்கியத்தில் இவ்விரண்டு சொற்களும் 'பெண்' என்னும் பொதுப் பொருளிலேயே வழங்கி வந்தன. சிற்றிலக்கிய நூல்களில் தோய்ந்த சாமிநாதன் குறுந்தொகைக்கு உரை எழுதியபோது மறவாமல் இதனைக் குறித்துள்ளார். "அரிவை யென்றது, பருவங்குறித்தன்று" (குறுந். 2) "மடந்தை இங்கே பருவம் குறியாது தலைவியென்னும் துணையாய் நின்றது" (குறுந். 209) என உணர்ந்து சிக்கல் எழாமல் குறித்துள்ளார்.

சொற்கள் இணைந்து தொடராகும். அவற்றுள் சிலமரபுத் தொடராகப் பின்னர் மாறக்கூடும். அத்தகு மரபுத் தொடர்கள் பெரிதும் ஒரு பொருளை விளக்கும் அடைகளாகப் பொருந்தும். இவற்றைக் கூர்ந்து ஆராய்ந்துள்ளார். அடைகள் பொருளின் இயல்பை எந்த அளவுக்குப் புலப்பட வைத்துள்ளன என விளக்கியுள்ளார். காரணகாரிய வழி இந்த அடைகள் எவ்வளவு தூரம் பொருந்தி வந்திருக்கின்றன என்று காட்டியுள்ளார். ஒரு பொருளுக்கே பல அடைகள் வருமானால் அவற்றின் வரிசைச் சிறப்பினை, ஒழுங்கின் நுட்பத்தினை, பல்லாற்றானும் அப்பொருளுக்குப் பொருந்தியுள்ள தன்மையையும் எடுத்துக் கூறியுள்ளார். சொற்பொருள் விளக்கமாகமட்டும் அமைக்காமல் கவிதையின் விளக்கமாகவே அமைக்கும் அந்தச் சிந்தனையுழைப்பு சாமிநாதனுக்கு நிரம்ப இருந்தது.

கவிதையின் ஓசை நயம், நடைத்திறன், உவமை, மெய்ப்பாடு, குறியீடு, குறிப்புப் பொருள், வெளியிடும் உத்தி ஆகியவற்றைப் பற்றி எல்லாம் விளக்கினால்தான் ஒரு கவிதையை நன்கு யாவரும் புரிந்துகொள்ள இயலும். உரையாசிரியர்கள் இவற்றை மனங்கொண்டே சங்க இலக்கியத்திற்கும் காப்பியத்திற்கும் உரை எழுதினர்.

கவிதையில் சொற்கள் செறிவாகவே இருக்கும். தேவையற்ற சொற்களைக் கவிஞன் கையாளவே மாட்டான். தேர்ந்த சொற்களைத் தகுந்த இடங்களில் கையாளுபவன்தான் கவிஞன். அவ்வாறு கையாளும் அறிவுவளமும் கவிஞனுக்குக் கட்டாயம் வேண்டும். அதனால்தான், கும்பகருணன், வீடண

னைக் ''கவிஞரில் அறிவின் மிக்காய்'' என விளித்தான்[17] அவர்களைக் காட்டிலும் அறிவில் சிறந்தவர் அரியர். அதனால் கவிஞரின் படைப்பு சிறப்புடையதாக விளங்குகின்றது.

''நள்என் றன்றே யாமம் சொல்அவிந்து
இனிதுஅடங் கினரே மாக்கள் முனிவு இன்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே''

என்னும் குறுந்தொகையின் ஆறாம்பாட்டிற்குக் குறிப்புரை எழுதிய உ. வே. சா. 'மாக்கள்' ஐயறிவுடையோர். தாய் முதலியவர்களையே மாக்கள் எனப் புலவர் குறித்தார். தலைவியின் துயரை அறியும் ஆற்றல் இல்லாதவர் மாக்கள் தாமே! அதனால் மாக்கள் எனக் குறித்தார் என விளக்கினார்.

'ஓர்யான்' எனப் புலவர் கூறியமையும் சிந்தனைக்குரியது. உடன் இருந்து துயரத்தை ஆற்றக்கூடிய தோழியும் தன் கடமை மறந்து தூங்கினமையால் தான் மட்டும் தனித்து விடப்பட்டாளாம் தலைவி. அதனால் 'ஓர்யான்' என அவளே குறிப்பதாகத் தேர்ந்த சொல்லைக் கையாண்டார் புலவர் பதுமனார்.

'நள்' என்ற சொல்லும் இங்கே 'செறிந்த' என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. ஆனால் இதற்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றையெல்லாம் விளக்கிச் 'செறிந்த' என்னும் பொருளே ஏற்றமுடைத்து என நிறுவியுள்ளார்.

''நள்'' நளியென்னும் உரிச்சொல் ஈறுதிரிபு; செறிவின் கண் வந்ததென்பர் அடியார்க்கு நல்லார் (சில-பதி-41); நள்ளென்னும் ஓசையுடைத்தாயிற்று எனலுமாம் (நெடுநல் 186); (புறநா 149; 1-2 உரை). நள்-நடுவுமாம் நண்பகல் என்புழிப் போல'' என்று குறித்துள்ளார். இப்படிப் பல்பொருள் வழங்கும் குறுந்தொகைச் சொற்களுக்கெல்லாம் சான்றுகளைத் திரட்டித் தந்துள்ளார்.

---

17. கம்பராமாயணம், யுத்த காண்டம், கும்பகருணன் வதைப் படலம், பா. 31

படியைத் திருத்துதல் :

கவிஞர்களின் சொல் நயம் பாராட்டப்பட வேண்டுமே யொழிய பழித்தற்குரியதன்று. இதனை அறியாமல், காரண காரியங்களை ஆராயாமல் விலக்கவோ மாற்றவோ செய்த ஒருவரை வெருட்டிய தமிழ்ப் பேராசிரியர் தியாகராசர் செயலை, அத் தியாகராசர் துணையால் கும்பகோணம் கல்லூரி ஆசிரிய ரான உ. வே. சா. மறந்தாரல்லர் :

"மதுரையிலிருந்த ஓர் ஐரோப்பியர் தமிழின்பால் விருப்ப முற்று ஒரு பண்டிதருடைய உதவி பெற்றுப் படித்து வந்தார் தமிழ்ச் செய்யுட்களுக்கு ஒருவாறு பொருள் தெரிந்து கொள்ளும் அறிவைப் பெற்றபின்பு தமிழில் மிகச் சிறப்பான நூல் யாதென்று விசாரித்தார். திருக்குறள் ஒப்பற்ற நூலென்பதை அறிந்து அதனைப் படித்தார்; இலக்கண நூலையும் இடையிடையே பயின்று வந்தார்; போப்பையர் எழுதிய இலக்கணத்தைப் படித்தார்; பிறகு யாப்பிலக்கண வசனத்தைப் படித்து அசை, சீர், தளை, தொடை என்பவற்றை ஒரு வகையாகத் தெரிந்து கொண்டார். அதனால் தாம் படித்த நூல்களிலுள்ள செய்யுட் களில் எதுகை மோனை சரியாக அமைந்திருக்கின்றனவா வென்று ஆராயத் தொடங்கினார்.

ஒரு சமயம் அவர்தாம் படித்து வந்த திருக்குறள் புத்தகத்தை எடுத்துத் திறந்தார்; திறந்த பக்கத்தில்

'தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்'

என்ற குறள் அவர் கண்ணிற்பட்டது. 'இதில் எதுகை நன்றாக அமைய வில்லையே' என்று எண்ணினார். எச்சமென்பதற்கு மக்களென்பது பொருளென்று அறிந்து கொண்ட பிறகு, 'ஏன் மக்களென்றே இதை மாற்றி விடக்கூடாது? அப்படிச் செய்தால் எதுகை அழகாக அமையுமே' என்று எண்ணித் தம் புத்தகத்தில் அவ்வாறே திருத்திக் கொண்டார். திருக்குறளைத் திருத்தி விட் டோம் என்ற எண்ணத்தால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டா யிற்று. இப்படியே மேலும் மேலும் சில குறள்களைத் திருத் தினார்" [18]

18. நல்லுரைக் கோவை (நான்காம் பாகம்) பக். 110-111

தாம் படித்த பண்டிதரிடம் இக்கருத்தைக் கூறியபோது, தியாகராசர் போன்றோர் இத்திருத்தத்திற்கு உடன்பட்டால்தான் சரியாகும் எனக் கூறிவிட்டார். தியாகராசரிடம் குறளைத் திருத்தியுள்ளமையைக் கூறினார். கேட்ட தியாகராசர் பதறி எழுந்தார்.

"தலையிலே இரண்டடி அடித்துக் கொண்டு காதைப் பொத்திக் கொண்டார்; 'ஐயோ ! குறளையா திருத்தினீர் ? அது மதிப்புள்ள பழைய நூலாயிற்றே ! இவ்வளவு நாளாக அறிவாளிகள் செய்யாத ஒன்றைச் செய்து விட்டதாக எண்ணமோ ! எச்சமென்னும் சொல்லின் பொருள் மக்களென்பதற்கு உண்டா? ஒருவருக்குப் பிறகு அவருடைய குண முதலியவை எஞ்சி நிற்கும் சந்ததியென்ற காரணத்தைப் புலப்படுத்தும் சொல்லல்லவா எச்சமென்பது! அவ்விடத்தில் அச்சொல் அமைந்ததனால் உண்டாகும் பொருட்செறிவு மக்களென்னும் சொல்லால் உண்டாகுமா ? ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தமிழில் இருந்தாலும் அவை ஒன்றற்கொன்று சிறிது சிறிது வேறுபட்ட பொருளுடையனவாகவன்றோ இருக்கும் ! அவற்றை இடமறிந்து தானே பெருங் கவிஞர்கள் உபயோகிப்பார்கள் ! அது தெரியாமல் திருத்திவிடலாமா ? எதுகை நயத்தைவிடப் பொருள் நயம் அல்லவா சிறந்தது? என்று சொல்லிவிட்டு, குறளைத் திருத்தினவர் முகத்தில் விழிப்பதுகூடப் பாவம்' என்று கூறிக் கொண்டே உள்ளே சென்று கதவைத் தாழிட்டு இடைக்கழித் திண்ணையில் அமர்ந்து விட்டார்" [19]

அந்தத் துரையால் பெரும் இலாபம் வரும் என்று கூட ஆசைகாட்டிப் பார்த்தார்கள். ஆனால் தியாகராசர் உலகம் புகழும் குறளை, வேதமாகப் போற்றும் குறளை மாற்ற மனங் கொண்டவரால் தமக்கு ஒரு பயனும் வேண்டா ; போகச் சொல்லுங்கள் என்றாராம்.

இன்னொருவர் மாணவருக்கேற்ற நன்னூல் என இலக்கண நூற்பாக்களை இருநூற்றுக்கும் மேற்பட்டு விலக்கி ஒரு நூல் அச்சிட்டார். அவரையும் மிகவும் கடிந்து கொண்டார் தியாகராசர். [20]

---

19. அது, பக். 113 - 114
20. அது, பக். 106 - 110

இங்ஙனம் சொல்லின் பொருளாழம் தெரியாதவரும், நூலின் கருத்தாழம் புரியாதவரும் பட்டபாட்டினை அறிந்தவர் உ. வே. சா. அதனால் தாம் பதிப்பித்த பாடல்களில் சில சொற்களுக்குரிய பொருள்கள் இக்காலத்திற்குப் பொருந்தாதது போலத் தோன்றினாலும் அதுபற்றிக் கருத்து ஏதும் கூறாமல் விட்டுச் சென்றார்.

அடைகள் :

அடையாக வரும் சொற்களின் சிறப்பு நிலையையும் குறித்துள்ளார் உ. வே. சா. இந்த அடைகள் கவிதையிலுள்ள நிகழ்ச்சிக்குப் பின்புலமாக இருப்பனவற்றைக் காட்டவல்லன. அதனால், பழைய உரையாசிரியர்களின் திறத்தோடு, இவரும் குறிப்புரை நல்கியுள்ளார். ஆண்யானைக்குத் 'துறுகல்' அடையாகக் குறுந்தொகையின் 36-ஆம் பாட்டில் உள்ளது. இதனை உ. வே. சா;

''களிறு துறுகல்லைப் போலத் தோற்றுதலின் அக்கல்லில் ஏறும் மாணைக் கொடி களிற்றின் மேலும் படர்ந்தது. துறுகல் யானையைப் போலத் தோற்றுமென்பதை இந்நூல் 13-ஆம் செய்யுளாலும் அதன் மேற் கொடிகள் படரும் என்பதை முல்லை யூர்ந்த கல் (குறுந் 275 : 1) என்பதனாலும் உணர்க'' என்று குறித்துள்ளார்.

பாடலில் இடம் பெற்றுள்ள அடைகட்கெல்லாம் விளக்கம் தந்திருக்கும் நயம் அவரைத் தேர்ந்த உரையாசிரியராகவே காட்டுகின்றது.

''நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும் கானலும் தோன்றும்
மடறாழ் பெண்ணையெஞ் சிறுநல் லூரே''

என்னும் குறுந்தொகையின் 81-ஆம் பாடலுக்கு உ. வே. சா. ஊர் வருணணையின் நுட்பத்தைப் புலப்படுத்தி விளக்கியுள்ளார்.

''நெடுந்தூரத்தில் வரும்போது தோன்றும் அடையாளங்களாகிய கடலையும் கானலையும் முன்பும், அணுகிய பின்னர்த் தோன்றுவதாகிய பெண்ணையைப் பின்பும் கூறினார். சிறிய

தாயினும் சிறப்புடையதாகலின் சிறுநல்லூர் என்றார்''. முறை வைப்பைச் சிந்தித்து வருணணையைக்கூட விளக்கும் அவருடைய உரை நுட்பம் போற்றுதற்குரியது.

உவமை :

உவமையை வைத்துப் பாடுவதால் கவிதைப் பொருள் சிறக்கிறது. மனிதரின் உணர்ச்சியை ஆற்றல் வாய்ந்த உவமைகள் செறிவுடன் புலப்படுத்துகின்றன. இந்த உவமைகளால் தம் இயற்பெயர் மறைந்து உவமைத் தொடரால் புகழ் பெற்ற புலவர்கள் குறுந்தொகையில் பதினொருவர் உள்ளனர். கூர்த்த மதித்திறனால் உலகியலில் கண்டறிந்த எளிய இனிய காட்சிகளை அரிய பெரிய உவமைகளாக அமைத்த அப் புலவர்கள் திறமும் அவ்வருந்தொடர் அமைப்பால் அவர்கள் பெயர் நிலைத்த தன்மையும் குறுந்தொகையால் அறியலாம். செம்புலப் பெயல் நீரார், அணிலாடு முன்றிலார். குப்பைக் கோழியார் என உவமைத் தொடரால் சிறப்பிக்கப் பெற்றோருள் கவை மகனாரும் ஒருவர். குறுந்தொகையின் 324-ஆம் பாடல் இவருடையது.

தலைவனிடம் தலைவி இற்செறிக்கப்படுவாளென்பதைக் கூறிய தோழியை நோக்கி 'யான் ஆண்டு வந்து இரவுக் குறியில் தலைவியைக் கண்டு செல்வேன் ; அப்பால் வரைந்து கொள்வேன்' என்று தலைவன் கூற, அது கேட்ட தோழி, நீ நின் அன்பின் மிகுதியால் வழியின் ஏதம் பாராது வருகின்றாய்; இவள் அதற்கு அஞ்சுவாள் என்று கூறி வரைவு கடாய துறையில் அமைந்த பாடல் இது ;

''கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி இவள்தன்
மடனுடை மையின் உயங்கும் யான்அது
கவைமக நஞ்சுஉண் டாஆங்கு
அஞ்சுவல் பெரும என்நெஞ்சத் தானே''

மக்கட் பிறவியில் வகைகள் பல உள்ளன. கவைமகன் என்பது வியப்பான ஒரு பிறவி. தாயின் கருவில் இருபகுதியாகப் பிரிந்து

உருவும் அதன் நிழலும் போல் ஒன்றுபட்டு உருவாகிப் பிறக்கும் ஒட்டிய இரட்டைப் பிள்ளையைத்தான் 'கவைமக' என்று குறுந்தொகை கூறியுள்ளது. உடல்நூல் வல்லார் இதனை 'Siamese twins' என்பர். பத்து இலட்சம் பேருக்கு ஒருவர் இப் பிறவியராக உள்ளமையை ஒரு கணக்குக் கூறுகின்றது. இந்த அரிய பிறவியைப் பயன்படுத்தி உவமையாக்கும் வல்லமையை அன்றே ஒரு புலவர் பெற்றிருந்தார்.

கொல்லுதல் வல்ல கொடிய முதலைகள் திரியும் கானல்வழியாக நீர்நிலையை நீந்திக் காதலியைக் காண இருளில் வரும் காதலனின் அன்பைத் தோழி உணர்ந்தாள். ஆனால், அவ்வழியும் நீர்நிலையும் ஏற்படுத்தும் அச்சத்தால் வருந்தும் காதலியின் உள்ளத்தையும் அறிந்தவள் தோழி. காதலனைக் காண வாராதே எனத் தடுக்கவும் அவளால் முடியவில்லை. காதலியின் அச்சத்தைப் போக்கவும் முடியவில்லை. இருவரால் ஏற்படும் இடர் தோழிக்கே இன்னல் மிக்கதாக இருந்தது. அவள் படும் இடருக்கு, இரட்டைப்பிள்ளைகள் (கவைமக) நஞ்சு உண்டால் இருவர் திறத்திலும்,இரங்கும்தாயின் மனநிலை உவமையாகக் கூறப் பட்டது. ஆதலால் இரு குழந்தைக்கும் ஒருங்கே மருந்தளித்து நஞ்சினைப் போக்குதல் முறையாகுதல் போல'' காதலன், காதலிக்கு நலம் பயக்கும் வகையில் மணந்துகொள்ளுதலே உயர்ந்தவழி என்று தோழி வரைவு கடாவினாள் என்பதே பாடலின் பொருள்.

உ. வே. சா. தரும் குறிப்புரை உவமையை விளக்குவதோடு உவமையின் சிறப்பையும் தெளிவு படுத்துகின்றது.

''நீர் வழியிற்போவாரைக் கொல்லுந்தொழிலுடைமையின், வழி வழக்கறுக்கும், பெருந்துறை யென்றார்; இதனால், நீ அக் கழியின் நீந்தி வருங்கால் நினக்கு ஏதம் நேருங்கொல்லோவென அஞ்சினோம்'' என்னும் குறிப்பை அறிவித்தாளாயிற்று.

நீ நின் அன்பினால் வருதலின் நீ வருதலைத் தடுத்தலும் தக்கதன்று; நினக்கு ஏதம் வருமோவென இவள் உயங்குதலின் இரவுக்குறி நேர்தலும் தக்கதன்று. நும்மிருவருக்கும் துன்பமுண்டாகும் இந்நிலையில் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர் திறத்திலும் இரங்கும் தாயைப்போல யான் இருவர் திறத்தும் இரக்க முடையேன்' என்றாள்.

இவ்வுவமையினால், இரண்டு மகவுக்கும் ஒருங்கே நஞ்சு தீர்க்கும் மருந்து தருதலே தக்கதாதல் போல, இருவருக்கும் நன்மைதரும் வரைவே ஏற்புடைத்தென்ற வரைவுகடாதற் பொருளும் பெறப்படும்.

இச் சிறப்புவமை அல்லது இதுபோன்ற தொடர் பிற இலக்கியங்களில் உள்ளனவானால் அவற்றைத் தொகுத்துத் தருவது அவருடைய மரபு. ஆனால் இச் சிறப்புவமை வேறு இலக்கியத்துள் இல்லை. அதனால் ஒருவாறு ஒப்புள்ள கம்பராமாயண, அயோத்தியாகாண்டத்தின் மந்திரப்படலப் பாடலை (31) ப்பாகக் காட்டியுள்ளார். “இரண்டு கன்றினுக் கிரங்கு மோராவென விருந்தார்” என்பது அது.

டாக்டர் உ. வே. சா. தமிழிலக்கிய இலக்கணப்பரப்பு முழுவதிலும் நீந்திப் பழகிய பேரறிவாளர் ஆதலால் ஒவ்வொரு சொல்லும் தொடரும் எங்கெங்கெல்லாம் கலக்கின்றன, பிரி கின்றன, என்பதை நுனித்தறிந்து கொண்டார். அதனால் பாடல்களில் வரும் உவமைகளாயினும் பிற அணிகளாயினும் அல்லது கருத்து தொடர் போன்ற இன்னபிறவாயினும் எவ்வெவ்வாறு உண்மை நிலையில் இருக்க வேண்டும் என்பதையும் எவ்வெவ்வாறு அவற்றை உறவுபடுத்தி விளக்க வேண்டும் என்பதையும் அவரால் விளக்கிச் சொல்லவும் பதிப் பிக்கவும் முடிந்தது.

உ. வே. சா. அவர்களின் பதிப்புப் பெரும்பணியை மேலாய்வு செய்யப் புகுவார் பாடவேறுபாடு என்னும் ஒருதுறையை மட்டும் கூட எடுத்துக்கொண்டு ஆராயலாம். குறிப்புரைகளை மட்டும் கொண்டும் ஆராயலாம். இலக்கண இலக்கிய மேற்கோள் களைப் பொருட்தொடர்புடன் காட்டிய திறங்குறித் தும் ஆய்ந்துரைக்கலாம். அகராதியைத் தொகுத்தல் வழியும் அவராற்றிய உலைவிலா உழைப்பினைத் தனிநூலாகக் கூட விரித்தெழுதலாம். இத்தகைய பெருமைக்குரிய உயர் பேரு ழைப்புக் கொண்ட நற்றமிழ் உள்ளத்தை நாளும் வணங்கலாம்.

7. பெறலரும் பேறு

பெருவாழ்வு :

19-2-1855 இல் பிறந்தார் சாமிநாதன். நிறைவாழ் வாகிய ஆயிரம் பிறைகண்ட பெருவாழ்வு வாழ்ந்தார்.

குடும்பம் :

உ. வே. சா. அவர்களின் குடும்ப வழிமுறை அவரது அறிவுத் திறத்திற்கு ஊட்டம் அளித்தது. சாமிநாதனின் பாட்டியார் இசையும் தமிழும் இணைந்து விளங்கிய குடும்பத்தில்பிறந்தவர்[1] ; அவரும் இசைத் தேர்ச்சியர். பாட்டனார் தமிழ், வடமொழி, கணக்கு ஆகியவற்றில் திறம் வாய்ந்தவர்; ஆசிரியராக்க் கடனாற்றியவர். சாமிநாதனின் தாய் சரஸ்வதி அம்மாள் இறை பக்தி நிரம்பியவர். அவரின் தந்தை வேங்கடசுப்பு, உடையார் பாளையம் குறுநில மன்னர் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்; இசையறிவு மிக்கவர். இக்குடும்ப வழிமுறை அவருக்கு ஏந்தாய் அமைந்தது.

குடும்பப் பொறுப்பைத் தாமே தாங்கிக் கொண்டு தொண் டாற்றத் துணை செய்தவர் அவரது தந்தை. இதனை, "இள மையில் எனக்கு ஒரு தக்க ஆசிரியரைத் தேடித்தந்ததும், பின்பு தமிழ்ச் சுவடிகளே கதியாகக்கிடந்த எனக்கு லௌகிகத் தொல்லை அணுவளவேனும் இல்லாமற் பாதுகாத்ததும், சிவ பக்தியின் மகிமையைத் தம்முடைய நடையினால் வெளிப்படுத் தியதுமாகிய அரிய செயல்களை நான் மறக்கவே முடியாது"[2] என்கிறார்.

ஆசிரியர் :

நடமாடும் நூல் நிலையம் எனவும், நிகழ்காலக் கம்பர் எனவும், இரட்டைக் கம்பர் எனவும் 'மகாவித்துவான்' எனவும் விளங்கிய பெரும் பேராசிரியர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்

1. என் சரித்திரம், பக். 18
2. என் சரித்திரம், பக். 39.

அவர்களிடம் முறையாகப் பயிலும் பேறு பெற்றவர். இது 1871 ஆம் ஆண்டு தொடங்கி 1876 ஆம் ஆண்டு மகா வித்துவான் விண்ணுலகுஎய்தும்வரை ஐந்து ஆண்டுகள் நிலைத்தது. தம் ஆசிரியர் தொடர்பாலே சைவத் திருமடங்களும், குறுநில மன்னர் இடங்களும், செல்வச் செழுமையர் மாளிகைகளும் வரவேற்றன.

தொழில் :

முறையான ஒரு தொழிலில்......அத்தொழிலிலும், தமிழ் வளத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புக்கென அமைந்த தமிழாசிரியத் தொழிலில்... நாளெல்லாம் கடனாற்றிட வாய்ப் பினைப் பெற்றார். அவரது தமிழ் நெஞ்சமும் தியாக உள்ள மும் கூர்த்த மதியும் தொண்டு மனமும் காரணமாகக் கும்ப கோணம் கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார். 1880ஆம் ஆண்டு கிடைத்தது அப்பதவி. அப்போது சாமிநாதனுக்கு வயது 25. 1903-ஆம் ஆண்டு மாறுதலாகிச் சென்னை மாநிலக் கல்லூரியில் பணியில் அமர்ந்தார். 39 ஆண்டுகள் உழைப்புக்குப் பின்னர் 1919 ஆம் ஆண்டு தமது 64ஆம் வயதில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றார். எனினும் உழைப் பிலிருந்து ஓய்வு பெறவில்லை. அமைதியாகச் சுறுசுறுப்பாக தமிழ்ப்பணி செய்து கொண்டே இருந்தார். 1924 முதல் 1927 வரை சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல் வராகப் பணியாற்றினார். ஓயாது உழைத்து வந்த தமிழ் வடிவம் 28—4—1942 ஆம் நாள் திருக்கழுக்குன்றத்தில் இறைவனடி சேர்ந்தது.

திறம் :

பாட்டியற்றும் வன்மை, உரை காணும் திறம், உரைநடை எழுதும் ஓட்டம், கேட்பவர் உளங்கொள எடுத்துரைக்கும் பேச்சாற்றல், நகைச்சுவை ஆகிய இவை ஒருங்கே அமைந்து விளங்கியமை அவர்தம் பலதிறத் தொண்டுகளுக்கும் அணிக்கு அணி செய்வது போல் விளங்கா நின்றன.

பண்பியல் :

இவ்வெல்லாவற்றினும் மேலாக நாம் முன்னே கண்ட தமிழ்ப்பற்று, தமிழ்த் தொண்டுக்கென்றே தம்மை ஆட்படுத்திக்

கொண்ட தகைமை, அயர்விலா உழைப்பே தவமெனக் கொண்டிருந்த ஆர்வப் பெருக்கு, எதிரிடைகளை எண்ணாமல் ஏற்றுக் கொண்ட போக்கிலேயே போகும் சீர்மை ஆகியவை சாமிநாதனுக்கு ஒருங்கே அமைந்திருந்தமை அவரை வெற்றிமேல் வெற்றிக்கு அழைத்துச் சென்றன.

சாமிநாதன் பதிப்புத்துறையின் மன்னரெனத் திகழ்ந்தமையை மதுரைப் பெரும்புலவர் இரா. இளங்குமரன் ஆக்கியுள்ள 'சுவடிக் கலை' பட்டியலிட்டுக் காட்டுகின்றது.

சில நேர்வுகள் :

''சில பதிப்பாசிரியர்கள் பயின்ற துறை வேறாகவும், பதிந்த துறை தமிழாகவும் இருக்கும். அல்லது பணிசெய்த துறை ஒன்றாகவும் அணிசெய்த துறை ஒன்றாகவும் இருக்கும். ஆதலால் முழுமையாக ஈடுபடுவதற்கு அவர்கள் வேலைநிலை இடந்தருமாறமையவில்லை.''

''சில பதிப்பாளர்கள் சமயச்சார்பு அவர்களைப் பழமை நூற் பக்கம் - சமயஞ்சாரா நூற்பக்கம் - பார்க்க விடவில்லை. ஆதலால் குறிப்பிட்ட நூல்களை ஆராயும் அளவுடன் நின்றனர்''

''பதிப்பாளருள் சிலர் பன்மொழிப் புலமை எய்தி நின்றனர். அப் பன்மொழி தமிழுக்கு ஆக்கந்தந்ததே எனினும் முழுமையாகத் தமிழ் நூல் ஆய்வுக்கே தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவிடவில்லை.''

''அரிய ஆராய்ச்சித்திறம் மிக்கார்க்கும் மனப்பாடத் திறம் வாய்ப்பது அரிது. நூல்நூலாகவே மனப்பாடம் செய்து கொண்டவர்களுக்கு நூலில் வரும் மேற்கோள்களையும் ஒப்புமைப் பகுதிகளையும் நொடிப்பொழுதில் கண்டு குறிப்பதற்கு வாய்க்கும். பிறர்க்கு அவ்வாய்ப்புக் கூடுவது அன்று.''

''தாமே உழல்வதிலும் தக்கதுணைவர்களை வைத்துக் கொண்டு ஆராய்வதிலே அவ்வனைவர் நல்லறிவையும் ஒருங்கு தொகுத்துக் கொள்ளும் வாய்ப்பும் உண்டு. அதற்கு அவர்களை அணுகி வேலை கொள்ளும் திறமும் பொறுமையும் போற்றுதலும் ஆகியன வெல்லாம் அமைதல் வேண்டும்.''

"பதிப்பு நூல்களின் எண்ணிக்கை பெருகப்பெருக அவற்றின் அடைவுகளும் மேற்கோள்களும் பெருகும் வண்ணம் வரன் முறையான தொகுப்புகள் வைத்திருத்தல் பதிப்பை எளிமை யாக்குவதுடன் அருமையாக்கவும் செய்யும்".

"நல்லவை எவரிடத்துக் காணினும் எந்நிலையில் காணினும் அவற்றையெல்லாம் தம்மவையாகப் போற்றி ஏற்றுக்கொள்ளும் நிறைமனமும் நன்றி யுணர்வும் பதிப்பின் மணத்தைப் பெருகப் பரப்பும்'[3]

இவையெல்லாம் சாமிநாதனிடம் ஒருங்கே அமைந்தி ருந்தமை அவர்தம் பதிப்பு மேன்மைக்கு ஏந்தாக அமைந்தது.

தம் ஆராய்ச்சி வகை விரிந்து கொண்டே சென்றதைச் சாமிநாதனே எழுதுகின்றார்;

"சிந்தாமணிப் பதிப்பைக் காட்டிலும் பத்துப்பாட்டில் சில புதிய பகுதிகளைச் சேர்த்தேன். அதைக் காட்டிலும் சிலப்பதிகாரத்தில் சில புதிய பகுதிகளை ஆராய்ச்சி செய்பவர் களுக்கு உதவியாகச் சேர்க்க வேண்டுமென்று தோற்றியது. அவற்றிற்குரிய விஷயங்கள் சிலப்பதிகார மூலத்திலும் உரை யிலும் பல இருந்தன. அடியார்க்கு நல்லார் உரையினால் தெரியவரும் நூல்களைப் பற்றிய குறிப்புக்களை அவசியம் எழுத வேண்டுமென்று ஆசை எனக்கு மிகுதியாக எழுந்தது. நூலாலும் உரையாலும் அறியப்படும் அரசர் முதலியோர் பெயர்களை வகைப்படுத்தி அகராதி வரிசையில் அமைக்க வேண்டும் என்பது மற்றொரு விருப்பம். இப்படி என்னுடைய ஆராய்ச்சி வகை விரிந்து கொண்டே சென்றது"[4]

புலமையர் புகழ்வு :

இனி, ஒரு புலவர் எத்தகு திறமையும் தகுதியும் உடைய வராக விளங்கினாலும், வாழும் காலத்திலேயே பாராட்டப் படுதல் அருமை. ஆனால், சாமிநாதன் வாழ்ந்த நாளிலேயே, புலவர் பரவும் புகழ்ச் செல்வராகவும், அறிஞர் பாராட்டும்

---

(3) சுவடிக்கலை, அரிமாப் பதிப்பகம், சேலம்-3 பக். 143-144
(4) என் சரித்திரம், பக். 964

மேதையராகவும், இதழ்கள் ஏத்தும் ஏந்தலாகவும் திகழ்ந்தமை தமிழக வரலாற்றில் தனிப்பெருஞ் சிறப்பின. தாம்அவர் மதிப்புரைப் பெற்றால்தான் தமிழ்நூல், அவர் பாராட்டுப் பெற்றால்தான் தமிழ்ப்புலவர் என்னும் முடிவு தமிழாய்ந்த புலவர்கள் பெரும் பாலோர் கருத்தாக இருந்தது.

முதுபேரறிஞர் இராஜாஜி, ''முற்காலத்தில் ஸம்ஸ்கிருத வேதங்களையும், இதிகாச புராணங்களையும் வியாஸர் எபபடித் தேடித்திரட்டி உருவாக்கித் தந்தாரோ அப்படியே தமிழ் இலக்கிய ரத்தினங்களை ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையர் இக் காலத்தில் தேடித் திரட்டித் தந்தார். ஆகையால் ஸ்ரீ சாமிநாதை யருக்கு 'தமிழ் வியாசர்' என்றே நாம் புதுப்பட்டம் இடலாம்'' என்றும், ''ஸ்ரீசாமிநாதையர் சோதித்து வெளியிட்ட சிலப்பதி காரம், மணிமேகலை முதலிய நூல்களைத் திறந்து படித்தபின் தான் தமிழ் மொழியின் லாவகமும், நயமும், எளிய நடையில் ஆழ்ந்த பொருள்களை யடக்கும் அதன் அழகும் தமிழரின் பழைய வாழ்க்கை மேன்மைகளும் தாய்மொழியை இளவயதில் மதியாமற்போன என்னைப் போன்ற துர்ப்பாக்கியர்களுக்குத் தெரிய வந்தன'' [5] என்று கூறுகிறார்.

டாக்டர் உ. வே. சாமிநாதனின் தமிழ்த் தொண்டில் உள் ளம் உருகியவர் திரு. வி. க. அவர்களை அவர்களது கூட்டங் களிலும் கோயில்களிலும் கண்டு பலமணிநேரம் உரையாடி மகிழ்ந்திருக்கிறார். அவரது இல்லத்திற்கு மூன்றுமுறைதான் சென்றிருக்கிறார்; காரணம் அவர்தம் தொண்டுக்கு இடர் செய்த லாகாதல்லவா? இவர்கள் சந்திப்பில் பழந்தமிழ்நூல்களைப் பதிப்பிக்கும் பணிபற்றியே பேச்சு நிகழ்ந்தது.

தமிழ்த்தாத்தா ஓலை ஏடுகளை ஒப்பிட்டு ஆன்றோர் பாக்களில் ஆழ்ந்து சென்றிருந்ததால் அவர் முகத்தில் ஒரு வித ஒளிபுலர்வதைத் திரு. வி. க. பாராட்டிக் கூறியுள்ளார்[6].

''தென்னிந்தியர்கள் அறிவுச் சிறப்புக்குக் காரணமான ஆரிய திராவிடக் கலைகளின் அவதார மென்றே ஐயரவர்களைச்

(5) உ. வே. சா. சதாபிஷேக வரலாறு பக். 39

6. திரு. எஸ். டி. காசிராசன், திரு. வி. க. ஓர் இலக்கியம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம் பக். 98, 1983.

சொல்லலாம். அவர் தமிழிடம் கொண்டிருக்கும் காதலுக்கு வேறெந்தக் காதலையும் ஒப்பிட்டுக் கூற முடியாது'' [7] என்கிறார் அரசியல் மேதை எஸ். சத்தியமூர்த்தி.

''ஐயரவர்கள் நடத்திவரும் வாழ்க்கை மிகச்சிறந்தது, வருங் காலத்திலுள்ளோர்க்கெல்லாம் வழிகாட்டியாக உள்ளது. யாவ ராலும் பின்பற்றத் தகுந்தது. நெறிதவறாமை, உண்மை, தூய்மை, தன்னம்பிக்கை முதலிய சிறந்த மேன்மைக் குணங்கள் நிரம்பிய வாழ்க்கை. சின்னஞ்சிறு அசூயைகளுக்கும் சில்லரைக் கோபங்களுக்கும், அவருடைய மனத்தில் இடங்கிடையாது. அவருடைய விசாலமான மனத்திலே பெருந்தன்மையும் பரோபகார சிந்தையும் அன்பும் நிறைந்து குடிகொண்டு விட்டன. அதனால்தான் அவர் திடசாரியாகவும், தீர்க்காயுள் உடையவராயும், குன்றாத ஊக்கமுடையவராயும் சலிக்காத உழைப்புடையவராயும் இருந்து வருகிறார் [8] என்கிறார் கே. வி. கிருஷ்ணசாமி.

சாமிநாதன் பேராசிரிய நிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எண்ணி, அவர்கள் உளநிலையை மதிப்பிட்டுரைக்கிறார் பெ. நா. அப்புசாமி அவர்கள் : ''தன்னை ஒருவன் பரிகசிக்கும் போதும், தன் மனநிலை கெடாமல், அந்தச் சந்தர்ப்பத்தி லுள்ள வேடிக்கையை அநுபவித்துச் சந்தோஷமடைவது மேலானது. அவர்கள் என்றென்றைக்கும் இளமைப் பருவ முடையவர்களாகவே இருப்பார்கள்.[9]

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவரா யிருந்து தமிழ்த் தொண்டாற்றிய எஸ். வையாபுரி அவர்கள் சாமிநாதன் வெற்றியின் ஊடகங்கள் இவையென எண்ணி யுரைக்கிறார். தமிழில் அங்கதம் என எள்ளற் குறிப்பு உண்டு. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் ஆகிய இரு நிலைகளில் அவை இயலும். பழிப்பது போலப் புகழும் பான்மையில் அவர் சாமிநாதனைக் குறிக்கும் குறிப்புகள் சுவைமிக்கவை என்பதுடன், மெய்மை வயப்பட்டவையும் ஆகும்.

---

7. உ. வே. சா சதாபிஷேக வரலாறு பக். 42
8. உ. வே. சா. சதாபிஷேக வரலாறு பக். 46
9. உ. வே.சா. சதாபிஷேக வரலாறு பக். 48.

''முதலாவதாக ஐயரவர்களுக்குத் தமிழ்மொழியைத் தவிர வேறு தெய்வம் கிடையாது. இது எல்லோருக்கும் தெரிந்த பரமரகசியம். ஆகவே, தமிழைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்ற கொள்கையோடு, பகுத்தறிவு ஏற்பட்ட காலந் தொடங்கித் தமிழ்த் தெய்வத்தையே அவர்கள் ஓயாது பூசித்து வருகிறார்கள். கேவலம் ஒரு பாஷையை (அது தாய் மொழியாய் இருந்தால்தான் என்ன?) தெய்வம் என்று கொண்டாடி அந்தத் தெய்வநாயகத்தை இரவும் பகலும் போற்றி வந்து அதற்குத் தொண்டு புரிவதிலேயே வாணாளைச் செலவு செய்த ஐயரவர்கள் ஒரு பெரும் **பிடிவாதக்காரர்** என்பதில் சந்தேகம் என்ன?''

''ஐயரவர்கள் தாம்மேற் கொண்டிருப்பது எவ்வகையான நூலாராய்ச்சியாயிருந்தாலும் சரி, எவ்வகையான கல்வி முயற்சியாயிருந்தாலும் சரி, அதைத் தாமே நேரிற் செய்வார்கள். வேறொருவர் எத்தனை தகுதி வாய்ந்தவராய் இருந்தாலும் அவரிடம் ஒப்புவித்துவிட்டு மேற்பார்வையோடு ஐயரவர்கள் திருப்தியடைந்து விடுவதில்லை. அவர்கள் எத்தனை அரிய நூல்களை நுணுகி ஆராய்ந்து பதிப்பித்திருக்கிறார்கள்! அவர் நேரிலே பார்வையிடாத ஒரு வரியாவது ஒரெழுத்தாவது அந்த நூல்களிலே உண்டா? ஒருவரிடத்தாவது வேலை முழுவதையும் ஒப்புவித்துவிட்டு 'ஹாய்' ஆக இருந்து மேற்பார்வை உத்தியோகம் பார்த்திருக்கிறார்களா? தன் காரியம் முழுவதும் தானே செய்யும் **'ஸ்வகாரியதுரந்தரர்'** என்று இவர்களைச் சொன்னால் அதை அவர்கள் ஒப்புக்கொண்டுதானே தீர வேண்டும்.''

''ஐயரவர்களிடத்தில் அவசரம் என்பதே கிடையாது. எல்லாம் அதி சாவகாசம். ஒரு நூலைப் பதிப்பிக்கத் தொடங்கினால் பல வருஷங்கள் வேண்டும். வருஷக்கணக்கிலேயே வேலை செய்து வருபவர்கள். அவர்கள் தொகுத்து வைத்திருக்கும் அகராதிகளில் **'அவசரம்'** என்ற பதமே கிடையாது.''

''ஐயரவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அவற்றின் பொருட்டு நொந்து கொள்வதும் இல்லை. இடையூறுகளால் நலிந்து புண்

படும் நிலைமையிற்கூட அவர்கள் சாந்தத்தைக் கைவிடு வதில்லை. அதுமட்டுமல்லாமல் இடையூறுகள் நேர்ந்த சந்தர்ப் பங்களில் **நகைச்சுவை** கண்டு அதனை நினைந்து மகிழு வார்கள்.[10]

தமிழ்த்தாயின் அணிகலங்களாகச் சொல்லப்படுவனவற்றை யெல்லாம், அவற்றைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சா. அவர் களின் கொடையாகச் சிறப்பித்து மகிழ்கிறார் சிந்தாதிரிப் பேட்டை தமிழ்ப் பண்டிதர் கா. மு. **சின்னப்பா** :

''அவர் தோன்றாதிருப்பின் தமிழ்த்தாய் சிந்தாமணியாம் சீரிய மணியைச் சிரசில் அணிவாளோ? திவ்விய காப்பியமாம் சிலப்பதிகாரத்தைத் திருப்பாதத்தில் பூண்பாளோ? மாண்பார் மணிமேகலையைச் சிற்றிடையிற் சிறக்கத்தரிப்பாளோ? பரி பாடலாம் சீரிய வளையைக்கரத்தும், பத்துப்பாட்டாம் பசு மணிப் பதக்கஞ்சேர்ந்த வெண்பா மாலையாம் ஒண்மணி மாலையை மார்பகத்தும், புறப் பொருளாம் பொன்மணி மாலை யைக் கழுத்துப் புறத்தும், ஐங்குறுநூறாம் சதமணிமாலை யைக் கண்டத்திடத்தும் அடிமுடியற்றும் அணிமிகு பேரொளி வீசும் பெருங்கதையைக் காதகத்தும், நத்து மூக்குத்தியென நன்னூலை மூக்கினிடத்தும் ஏனைச் சிறு நூல்கள்தம்மைச் சிறு விரல்களிடத்தும் எங்ஙனம் அணிவாள்? எங்ஙனம் அணி வாள்''? [11]

கலைமகள் இதழில் நெடுங்காலம் ஆசிரியராகப் பணியாற்றி வரும் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் டாக்டர். உ. வே. சா. அவர்களிடம் பாடங்கேட்ட தலைமாணாக்கர். அவர் தாம் பேசு மிடங்களிலெல்லாம் தம் குருநாதரைப் பாமலரால் வணங்கித்தான் பேசத்தொடங்குவார். உ. வே. சா. அவர்களைப் ''புலமைப் பெருங்கடல்'' ''முன்னும் பின்னும் கண்டறியாத அற்புதப் பதிப் பாசிரியர்'' என்றெல்லாம் அவ்வாகீச கலாநிதி புகழ்மொழிகளால் வனைவரர். [12]

---

10. உ. வே. சா. சாதாபிஷேக வரலாறு 52-53.
11. உ. வே. சா. சதாபிஷேக வரலாறு, 59
12. என் சரித்திரம், முன்னுரை பக். 17

பதிப்பு ஒப்பீடு :

சாமிநாதன் பதிப்புத் திறம் குறித்துப் புகழ் படைத்த மனோன்மணீயம் ஆசிரியர் பெ. சுந்தரம் ஓர் அரிய பாராட்டு வழங்குகிறார். அந்நாளில் பதிப்புத்துறையில் திகழ்ந்த சி. வை. தாமோதரம் அவர்களையும் சாமிநாதன் அவர்களையும் ஒப்பிட்டு ஆய்ந்து கூறும் அருமையதாய் அமைகின்றது அவ்வுரை; இதனைக்கேட்டு எழுத்தில் வழங்கியவர் முதுபெரும்புலவர் வெள்ளக்கால் பெ. சுப்பிரமணியம் அவர்கள்.

"தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் சூளாமணி முதலிய நூல்கள் பதிப்பிப்பதும், சாமிநாதையர் சிந்தாமணி பத்துப் பாட்டு முதலிய நூல்கள் பதிப்பிப்பதும் தமிழ் மொழிக்கு மிகச் சிறந்த உபயோகமான வேலைகள். இவ்விருவரையும் அறியாதார், இவர்கள் வெளியிட்டிருக்கின்ற நூல்களைக் கொண்டு, முன்னவர் ஆங்கில வாசனை அறியாத பரம வைதிக பரம் பரைத் தமிழ்ப் பண்டிதர் என்றும், பின்னவர் அரிய தமிழ்ப் பாண்டித்தியத்தோடு ஐரோப்பிய அமெரிக்கப் பதிப்பாசிரிய சிரேஷ்டர் போலப்பதிப்பு முறை ஞானமும் படைத்த பல்கலைக் கழகப் பட்டதாரி என்றும் கருதுவார்கள். நான் இவ்வாறு கூறியது தாமோதரம் பிள்ளையிடத்து மதிப்பில்லாமையால் அன்று; சாமிநாதையரது நூற்பதிப்புச் சதுரப்பாட்டில் ஈடுபட்டமையால் என்று கொள்ளவேண்டும்"13 என்பது.

பேராசிரியர் சுந்தரம் கூறிய கருத்து நாவலர் ந. மு. வேங்கடசாமி வாக்கின்வழி வேறொரு வகையாக வெளிப் படுகின்றது.

"தமிழொன்றே வல்லார் ஆராய்ச்சியின் பெற்றி அறியார் என்னும் வெளிற்றுரையாளர் நாணித் தலை கவிழ்க்குமாறு அவருடைய பதிப்புகள் விளங்குகின்றன" என்பது அது. 14

---

13 அது ப. 132
14 அது ப. 143

எல்லாம் பயன்:

உ. வே. சா. அவர்கள் பதிப்பித்துள்ள நூல்களில் எந்தத் தனிப்பட்ட காகிதத்தையேனும் 'இது பயனற்றது எனக்கூறற் கியலுமா என்று எப்போதும் கேட்பார் முதுபெரும் புலவர் சி. செகந்நாதன்.

''பாடஞ்சொல்லுகையில் 'நம்வாழ்வு' முழுவதும் நாம் மாணவராகவும் இவர்கள் ஆசிரியராகவும் இருந்து நாடோறும் பாடம் நடைபெற்றால் அதனினும் வேறு இன்பம் உண்டோ? என்று தோற்றும்'' என்று சாமிநாதர் பாடஞ் சொல்லும் நயத்தைச் சுட்டுகிறார் வித்துவான் சு. கோதண்டராமன் என்பார். 15

''தாங்களில்லாது எப்படி அச்சபை நடக்கமுடியும்?'' என வினா எழுப்பிச் சங்க ஆண்டு விழாவில் கலந்து கொள்ளுமாறு மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் இராசராசேசுவர சேதுபதி சாமிநாதனை வேண்டுகிறார். 16

இலக்கணக் கடல் எனப்படும் சோழவந்தான் அரசஞ் சண்முகனார் தாம் இயற்றிய 'இன்னிசை இரு நூறு' என்னும் நூலை விடுத்து, ''அரிய பெரிய சங்க நூலெல்லாம் ஆராய்ந்த தேவரீருக்கு இது மிக்க அருவருப்பைத் தருமாயினும் அடியே னது அறியாமையான் எழுந்த அவாவை முடிப்பிக்குமாறு சிறிது கடைக்கண்ணோக்கஞ் செய்தருளித்திருத்த வேண்டின் திருத்தியும் நீக்கவேண்டின் நீக்கியும் சேர்க்க வேண்டின் சேர்த்தும்'' அனுப்புமாறு பணிந்து வேண்டுகிறார். 17

இவ்வாறு தமிழகப் புலமைச் செல்வர்களின் ஒருங்கிணைந்த பாராட்டுக்கு ஒருவராக இருந்தவர் சாமிநாதன். ஒப்பாரும் மிக் காரும் இல்லா நிலையில் தம்வாழ்வில் நூறுநூல்களைப் பதிப் பித்துப் பதிப்புத் துறைப் பகலவனெனச் சாமிநாதன் திகழ்கிறார்.

உ. வே. சாமிநாதன் ஆற்றியுள்ள ஒப்பற்ற மாபெரும் செயலின் வெற்றியையும் தன்மையையும் பரிமாணத்தையும், அவருக்கே உரிய நனி சிறப்பான பாணியில் விளக்குகிறார்

(16) அது ப. 158
17, உ. வே. சா. சதாபிஷேக வரலாறு - பக். 155

அவரின் மாணாக்கரும் நண்பருமான தொண்ணூறு வயதாகி பேராசிரியருக்கும் பேராசிரியராக இலங்கி காந்தீயச் செல்வராய் வாழ்க்கை நடத்திக் கொண்டு பழுத்த பழமாய் ஒளிவிட்டு வரும் கே. சுவாமிநாதன் அவர்கள் : ''ஐயரவர்கள் வெளியிட்டிருக்கும் தமிழ் நூல்களின் தொகையையும், அவற்றின் இலக்கியச் சிறப்பையும், அவற்றினுள் பொதிந்து கிடக்கும் சரித்திரச் சாக்ஷியங்களையும் கருதுங்கால் தமிழுக்கு இவர் ஒருவர் செய்திருக்கும் தொண்டு எவரும் எந்தப்பாஷைக்கும் எக்காலத்திலும் செய்ததில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கான்ஸ்டான்டிநோபில் (Constantinople) நகரிலிருந்து தப்பியோடும் கிரேக்க சாஸ்திரிகள் இத்தாலிய தேசத்துக்குக் கொணர்ந்த ஏடுகளே ஐரோப்பா புனர்ஜென்மம் (Renaissance) பெற்றதற்கு ஒரு முக்கியகாரணமென்பர். பாரதியாருக்குக் கவிதையிலும் தமிழரனைவருக்குமே வாழ்க்கையிலும் உயிரும் உத்ஸாகமும் ஊட்டித் தமிழ் நாட்டுக்குப் புனர்ஜென்மம் அளித்தவர் இவரே. எத்தனையோ புலவர்களும், கல்விக் கழகங்களும், அரச குடும்பங்களும் ஒன்று சேர்ந்து, வருஷ காலத்தில் ஐரோப்பாவில் நடத்திவைத்த ஒரு பெரிய காரியத்தை, இந்தத் தமிழர் ஒருவராகச் செய்து முடித்திருக்கிறார்.',

''இவர் செய்த தொண்டின் பரிமாணத்தைக் கணிக்க ஓர் உபமானம் சொல்லலாம் : 1870-ஆம் வருஷத்தில் 'பியோவுல்ப்' (Beowulf) என்ற காவியமும், சாஸர், ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர், (Chaucer, Spencer, Shakespeare) என்ற கவிகளின் நூல்களும் பதிப்பிக்கப்படவில்லையென்றும், ஏடுகளிலே அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன என்றும் வைத்துக் கொள்வோம். மில்ட்டன் (Milton), ஜான்சன் (Johnson) முதலிய பிற்காலத்திய நூலாசிரியர் பிரஸ்தாபிப்பதாலும், சில வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டுவதாலும் மாத்திரமே, அந்த ஆதி கவிகளின் பேர்களும், நூல்களும் சிலர் காதில் விழுவதாக வைத்துக்கொள்வோம். சென்ற அறுபது வருஷத்தில் ஆங்கிலேய வித்துவான் ஒருவர் தோன்றி, தன்னந்தனிமையாய்ப் பழையகால நூல்கள் அத்தனையும் சாஸ்த்ரோக்தமாய் முற்றும் பிழையறப் பதிப்பித்து ஆங்கிலேயருக்குத் தந்ததாக வைத்துக்கொள்வோம். மேல்நாட்டு ஜனங்களிடம் பல நூற்றாண்டுகளாக இவ்வளவு உபேக்ஷையும் குடிகொண்டிராது ; வேறொரு வித்துவானிடம் இவ்வளவு பாண்டித்தியமும், ஊக்கமும், உத்ஸாகமும், விடா

முயற்சியும், புத்திக்கூர்மையும், லௌகிகஞானமும் ஒன்றுகூடி இரா. (ஆனால் இது உவமானந்தானே?) இப்படி ஒரு வித்வான் செய்திருந்தால், மேல்நாட்டார் அவருக்கு என்னதான் கைம்மாறு செய்யமாட்டார்கள்?

"என்ன செய்வார்கள் என்று ஊகிப்பானேன்? ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஐரோப்பா முழுவதும் சர்வகலாசாலைகள் கிளம்பினவே; ஏன்? யாரை முன்னிட்டுக் கிளம்பின? ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ், பாரிஸ் (Oxford, Cambridge, Paris) என்ற சர்வகலாசாலைகளெல்லாம், இவரைப்போன்ற 'மகா மகா உபாத்தியாயர்களை அண்டியன்றோ பிழைத்தன?" 18

பாவலர்கள் பாராட்டு :

"புலவர் பாடும் புகழ் உடையோர் விசும்பில் வலவன் ஏவா வானவூர்தியும் பெற வாய்க்கும்" என்பது தொல் தமிழர் தேர்ச்சி. உரையும் பாட்டும் உடையார் புகழோ உரைக்கவும் கூடா உயர்வினது என்பதும் அவர்கள் தெளிவு. புலவர்தம் உரையும் பாட்டும் ஒருங்கு பெற்ற உயர் உழைப்பாளர் பெரும் புலவர் சாமிநாதன். புலவராக விளங்கியும் 'தமிழ்த் தாத்தா' எனவும் 'தமிழ்தாத்தா' (தமிழ்க் கொடையாளர்) எனவும் வாழ்நாளிலேயே புகழ் பெற்றவர் சாமிநாதன்.

பெரும் பேராசிரியர் பெரும் பாவலர் இரா. இராகவன், சாமிநாதன் உழைப்பை ஒளிப்படம் பிடித்துக் காட்டுகிறார் :

ஏடு தேடி அலைந்தவூர் எத்தனை ?
  எழுதி யாய்ந்த குறிப்புரை எத்தனை ?
பாடுபட்ட பதத்தெளி வெத்தவை ?
  பன்னெ றிக்கட் பொருட்டுணி வெத்தனை ?
நாடு மச்சிற் பதிப்பிக்குங் கூலிக்கு
  நாளும் விற்றபல் பண்டங்க ளெத்தனை ?
கூட நோக்கினர்க் காற்றின தெத்தனை ?
  கோதி லாச்சாமி நாதன் தமிழ்க்கென்றே !

---

18. உ. வே. சா. சதாபிஷேக வரலாறு பக். 134.

பொன்ப லாயிர மும்பொரு வாதுநீ
புரிந்த வண்டமிழ்த் தொண்டினுக் கொண்டுகில்
நின்ப லாயிர மான குறிப்புரை
நீடு செய்புகழ்ப் போர்வைக்கு நேருமோ?
உன்ப ராவுமெய்ந் நூல்வடி வாகுநீ
ஊழி ஊழியும் வாழ்கென ஓதுமிவ்
அன்ப லாலெது வுந்தர வாய்ந்திலேன்
ஐயனேசாமி நாதநின் மெய்யனே!

இவை அவர்தம் பாடல்களில் இரண்டு.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் மறுமலர்ச்சியின் வடிவாகத் திகழ்ந்தவர் **பாரதியார்**. அவர், சாமிநாதரைப் புகழ்ந்தேத்திய பாடல்கள்.

செம்பரிதி ஒளிபெற்றான் ; பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்தது; ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்று
எவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல், இதற்கென்கொல்
பேருவகை படைக்கின் றீரே?

அன்னியர்கள் தமிழ்ச் செவ்வி அறியாதார்
இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மஉறாமஉேறா பாத்தியா
யப்பதவி பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ?

நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
  இன்பவகை நித்தந் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க
  குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
  காலமெல்லாம் புலவோர் வாயிற்
றுதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
  இறப்பின்றித் துலங்கு வாயே!

சங்க இலக்கிய ஆய்வில் அழுந்தியபுலமை பெற்றுச் சங்கத்தார் இயற்றிய அகப்பொருள் நூல்களின் பிழிவெனத் திகழும் 'தமிழ்க்காதல்' இயற்றிய பெருமகனார் அறிவர் **வ. சுப. மாணிக்கம்**. சங்கத்தமிழ் தந்த அத்தமிழ்க் காதல் முகப்பிலே சாமிநாதன் சால்புத் தொண்டை உளங்கொளப் பாராட்டி வாழ்த்தி வணங்குகிறார் :

அவ்விரண்டு பாடல்கள் :

''பார்காத்தார் ஆயிரம்பேர் பசித்தார்க் காகப்
  பயிர்காத்தார் ஆயிரம்பேர் பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்
  மனங்காத்த தமிழ்த்தாய் என்உடமை எல்லாம்
யார்காத்தார்'' எனக்கேட்க, ஒருவன் ''அம்மா
  யான்காப்பேன்'' எனவெழுந்தான் சாமி நாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
  நிலைகாத்த மலையிமயநெற்றி மேலான்

பொய்யாத தமிழ்க்குமரி ஈன்றசாமி;
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத;
செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய;
சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்
எய்யாத திருவடியால் எண்பத் தாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்குஞ் சென்று
நெய்யாத தொன்னூல்கள் நிலைக்க வைத்த
'நீங்காத தமிழ்க்குயிரே நின்தாள் வாழ்க!''

நிறைவு :

தமிழ்த் தொண்டே ஒரு வடிவாகத் திகழ்ந்த உ. வே. சாமிநாதன், தம் எழுத்தாலும் பேச்சாலும் வாழ்வாலும் தமிழ் வடிவாகவே விளங்கி அயரா உழைப்பின் அணிகலனாகக் திகழ்ந்துள்ளார். அவரது உழைப்பும் பொறுமையும் ஆய்வுத்திறமும் பண்பாடும் நமக்கு என்றும் வழிகாட்டிக் கொண்டிருக்கும். அவரது பிறவி நம் தமிழ் மண்ணுக்குக் கிடைத்த பெறலரும் பேறாகும். வளரும் தமிழர்கள் உணர்ந்து செயல்படுமாறு வழி காட்டிய உ. வே. சா. அவர்கள், மூவாத் தமிழ் வாழும் காலமெல்லாம் சாவா உடம்பினராகத் திகழ்வார் என்பது மெய்ம்மை.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் நூல்கள்

முதற் பதிப்பு ஆண்டு	நூலின் பெயர்	உ. வே. சா. பதிப்பித்த அடுத்த பதிப்புகள்	உ. வே. சா அவர்களுக்குப் பிறகு பதிப்பான ஆண்டுகள்
1878	வேணு வனலிங்க விலாசச்சிறப்பு	...	...
1883	திருக்குடந்தைப் புராணம்	...	...
1885	மத்தியார்ச்சன மான்மியம்	...	1943
1887	சீவக சிந்தாமணி	1907, 1922	1942.-1949, 1957, 1969
1888	கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டு விடு தூது	1931	1947
1888	மயிலைத் திரிபந்தாதி	1930	1946
1889	பத்துப் பாட்டு	1918, 1931.	-1950, 56, 61. 74
1891	இலந்தை நகர் தண்டபாணி விருத்தம்	...	1944
1892	சிலப்பதிகாரம்	1920, 1927.	-1944, 50, 55, 1960, 68
1892	திருப்பெருந்துறைப்புராணம்	1913	...
1894	புறநானூறு	1923, 1935.	-1950, 56, 63 1971
1895	புறப்பொருள் வெண்பாமாலை	1915, 1924.	-1946, 1950
		1934, 1942.	-1953, 1963
1898	மணிமேகலை	1921, 1931.	-1949, 56, 65
1898	புத்த சரிதம்	1926	...
1898	மணிமேகலைக் கதைச்சுருக்கம்	...	...
1903	ஐங்குறுநூறு	1920	1944, 49, 57
1903	வீரவனப் புராணம்	...	...
1903	சீகாழிக் கோவை	...	...

1903	திருவாவடுதுறைக்கோவை	1926	...
1904	பதிற்றுப்பத்து	1920, 1941.	1945, 1949
1904	சூரைமாநகர்ப்புராணம்	...	...
1904	திருப்பூவணநாதர் உலா	1923	1944, 1954
1904	காளத்திநாதர் உலா	1925	...
1904	திருத்தணிகைத்திருவிருத்தம்	...	1946
1905	ஸ்ரீதியாகராஜலீலை	1928	...
1905	திருவாரூர்உலா	...	...
1906	திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்	1927	1927
1907	தனியூர்ப் புராணம்	...	...
1907	தேவை உலா	1925	...
1907	மண்ணிப்படிக்கரைப் புராணம்	...	...
1908	திருப்பாதிரிப் புலியூர்க்கலம்பகம்	1919,40	...
1910	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு	1926	...
1912	திருக்காளத்திப் புராணம்	...	...
1918	பரிபாடல்	1935	...
1918	நன்னூல்-மயிலைநாதர்உரை	...	...
1924	பெருங்கதை	1935	1953, 1968
1924	உதயணன் கதைச் சுருக்கம்	...	...
1925	நன்னூல்-சங்கர நமச்சிவாயர் உரை	...	...
1928	சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்	...	1962
1930	தமிழ்விடுதூது	1932, 1941	...
1930	தக்கயாகப்பரணி	...	1945, 1960
1931	சொக்கநாதர் உலா	...	...
1932	கடம்பர் கோயில் உலா	...	...

1932	பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது	...	1950, 1952
1932	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு	...	...
1932	பழனி இரட்டைமணிமாலை	...	...
1932	பழனி பிள்ளைத்தமிழ்	...	...
1932	களக்காடு சத்யவாகீசர் இரட்டை மணி மாலை	...	...
1932	மதுரை மும்மணிக்கோவை	...	...
1933	சங்கரலிங்கவுலா	...	...
1933	திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா	...	1944
1933	பாசவதைப்பரணி	...	...
1933	மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம். பகுதி-1	1938	...
1934	வலிவல மும்மணிக்கோவை	...	...
1934	சங்கரன் கோயிலந்தாதி	...	...
1934	விளத்தொட்டிப்புராணம்	...	...
1934	மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம். பகுதி-2	1940	...
1935	உதயணகுமார காவியம்	...	...
1935	ஆற்றூர்ப்புராணம்	...	...
1935	பழமலைக்கோவை	...	1946
1935	கலைசைக்கோவை	...	...
1935	திருவிலஞ்சி முருகனுலா	...	1956
1936	மான் விடுதூது	...	1956
1936	திருமயிலை யமகவந்தாதி	...	...
1936	நான் கண்டதும் கேட்டதும்	7 பதிப்புக்கள்	...
1936	திருவள்ளுவரும் திருக்குறளும்	...	...

1936	மகா வைத்தியநாதையர்	...	1945
1936	கனம் கிருஷ்ணையர்	...	...
1936	கோபால கிருஷ்ணபாரதியார்	...	...
1937	குறுந்தொகை	...	1947,55,62
1937	தமிழ்நெறிவிளக்கம்	...	1947
1937	சிராமலைக்கோவை	...	...
1937	திரு ஆரூர்க்கோவை	1941	...
1937	நல்லுரைக்கோவை பகுதி-1	7 பதிப்புக்கள்	1958
1937	,, பகுதி-2	5 பதிப்புக்கள்	1954
1938	திருக்கழுக்குன்றத்துலா	...	...
1938	அழகர் கிள்ளை விடு தூது	1941	1944
1938	திருமலை யாண்டவர் குறவஞ்சி	...	...
1938	சிவசிவ வெண்பா	...	...
1938	திருக்காளத்தி இட்டகாமிய மாலை	...	...
1938	நல்லுரைக் கோவை பகுதி-3	4 பதிப்புக்கள்	1952
1939	தணிகாசலப்புராணம்	...	...
1939	புகையிலை விடுதூது	...	1956
1939	குமரகுருபரர் பிரபந்தங்கள்	...	1947, 1952
1939	மகர நெடுங்குழைக்காதர் பாமாலை	...	1947
1939	புதியதும் பழையதும்	12 பதிப்புக்கள்	...
1939	நல்லுரைக்கோவை பகுதி-4	5 பதிப்புக்கள்	1952
1940	வில்லைப்புராணம்	...	...
1940	திருக்குற்றாலச் சிலேடை வெண்பா	...	...
1940	கபாலீச்சுரர் பஞ்சரத்தினம்	...	...
1940	நினைவு மஞ்சரி பகுதி-1	...	...
1942	நினைவு மஞ்சரி பகுதி-2	...	...1944, 53

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்.

1. இளங்குமரன். இரா., சுவடிக்கலை, அரிமாபதிப்பகம்: சேலம்.

2. கணபதி பிள்ளை, மு., ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள், சென்னை, 1967.

3. காசிராசன், டாக்டர் இரா., டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள், சென்னை, 1985.

4. காசிராசன், எஸ். டி., திரு. வி. க. ஓர் இலக்கியம், சிதம்பரம், 1983.

5. குளோரியா சுந்தரமதி, டாக்டர்., டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப்பதிப்புகள், சென்னை, 1984.

6 சாமிநாதையர், டாக்டர் உ. வே., என்|சரித்திரம், சென்னை, 1982.

7. ...., நல்லுரைக்கோவை (நான்காம் பாகம்), சென்னை, 1952.

8. (பதிப்பு) அழகர் கிள்ளை விடுதூது, சென்னை, 1957.

9. ...., கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், சென்னை, 1872.

10. ...., குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு, திருப்பனந்தாள், 1952.

11. ...., குறுந்தொகை, அண்ணாமலை நகர், 1983.

12. ...., கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள், சென்னை, 1932.

13. ...., சங்கர நயினார் கோயிலந்தாதி, மதுரை, 1934.

14. ...., சிராமலைக் கோவை, மதுரை, 1937.

15. ...., சீவக சிந்தாமணி, சென்னை, 1969.

16. ...., தமிழ்விடுதூது, சென்னை, 1966.

17. ...., திருக்கழுக்குன்றத்துலா, சென்னை, 1938.

18. ...—....................., திருத்தணிகைத் திருவிருத்தம், மதுரை, 1941.

19. ...., திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், சென்னை, 1908.

20. ...., திருப்பூவணநாதருலா, சென்னை, 1956.

21. ...., திருமயிலைத் திரிபந்தாதி, சென்னை, 1946.

22. ...., திருமயிலை யமகவந்தாதி, சென்னை, 1975

23. ...., திருவிலஞ்சி முருகன் உலா, சென்னை, 1956.

24. ...., பத்துப்பாட்டு, சென்னை, 1931

25. ...., பதிற்றுப்பத்து, சென்னை, 1941.

26. ...., பரிபாடல், சென்னை, 1948.

27. ...., பழநிபிள்ளைத்தமிழ், மதுரை 1932.

28. ...., பாசவதைப்பரணி, சென்னை, 1933.

29. ...., புகையிலை விடுதூது, சென்னை, 1939.

30. .... , புறப்பொருள் வெண்பாமாலை சென்னை, 1895.

31. .... , பெருங்கதை, சென்னை, 1968.

32. .... , மான்விடுதூது, சென்னை, 1936

33. சுந்தரஜயர் (பதிப்பு) டாக்டர் உ. வே. சா. சதாபிஷேக வரலாறு, சென்னை, 1936.

34. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், சென்னை.

35. சொல்விளங்கும் பெருமாள், டாக்டர். பூ., டாக்டர் உ. வே. சா. பதிப்புப் பணி-ஓர் ஆய்வு, மதுரை, 1981.

36. ஞானப்பிரகாசம் வி.மி., அறவாணன், க. ப., (பதிப்பு) தற்காலத் தமிழ் முன்னோடிகள், சென்னை, 1975.

37. தாமோதரன், டாக்டர் அ., திருக்குறள் மேற்கோள் விளக்கம், மதுரை, 1970.

38. .... , தொல்காப்பியம் (மூலம்)

39. நாச்சிமுத்து, டாக்டர் கி., டாக்டர் உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள், சென்னை, 1986.

40. பெருமாள், அ. நா., 'தமிழர் இசை' உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113, 1984.

41. கலைமகள் இதழ் (ஜுன் 1942)

42. தினமணிச்சுடர் 4 - 3 - 1978.

43. கழக வெளியீடு திரு.வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் சென்னை, 1969.

சிறப்புப் பெயர் அகராதி

அகப்பொருட் கோவை-49
அங்கதன் தூது- 46
அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்-26
அச்சுச் சட்டம்-18
அச்சுப் பொறி-18
அடிமடக்கு-38
அடியார்க்கு நல்லார்-109
அணிலாடு முன்றிலார்-103
அநுபந்தம்-86
அப்புசாமி. பெ. நா., - 111
அம்பலக்காடு-18
அயோத்தியா காண்டம்-105
அரசஞ் சண்முகனார்-115
அரிச்சுவடி-8
அரியலூர்-8
அருணாசலப்புராணம்-53
அரும்பத உரை-31
அலங்காரம்-9
அவரை நிழல்-40
அழகர் அந்தாதி-26
அழகர் கிள்ளை விடுதூது-45
அறிவியல் வளர்ச்சி-18
அன்றிற் பறவை-91
அனுமன் தூது-46
ஆக்ஸ் போர்டு-117
ஆண்பாற் கைக்கிளை-49
ஆண்யானை-102
ஆரல் மீன்-76
ஆரிய திராவிடக்கலை-110
ஆற்றூர்ப்புராணம்-53
ஆறுமுக நாவலர்-120
இங்கிலிஷ்-12
இசை-9
இட்டகாமிய மாலை-58

இடைச்செருகல்-21
இந்திர விழ வூரெடுத்த காதை-29
இயற்றமிழ்-16
இரட்டைக் கம்பர்-106
இரத்தின சபாபதி மாலை-8
இரத்தினச் சுருக்கம்-43
இராகவன்-117
இராசகோபாலன்-20
இராசராச சேதுபதி-115
இராமசாமி-65
இராமதாச சதகம்-9
இராமையர்-57
இராஜாஜி-110
இலக்கணப் பரப்பு-105
இலக்கண விளக்கம்-37
இளவேனில்-76
இளங்குமரன். இரா.,-108
இறை வணக்கப் பாடல்-47
இறையனார் அகப்பொருள்-21
ஈங்கைக்கொடி-76
உடையார் பாளையம்-106
உத்தமதானபுரம்-11
உதயணன்-44
உதிர்ந்த சுவடி-92
உபாசனை-16
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்-23
உழிஞைப்படலம்-81
உள்ளுறை-40
உளவியலாளர்-74
உருவகம்-55
உருத்திர கணிகையர்-51
உரோமானிய எண்-32
உரையாசிரியர்-22, 93
எக்கழுத்தம்-72
எட்டுத்தொகை-21
எழுத்துப்பணி-30
எழுதா எழுத்து-18

என் சரித்திரம்-5
ஏர்க்களம்-54
ஐந்திணைக் கோவை-49
ஐம்பெருங்காப்பியம்-25
ஐரோப்பியர்-100
ஓலைச்சுவடிகள்-31
ஓலைப்பூ 42
ஔவையார்-2
கட்டியக்காரன்-66
கட்டியங்காரன்-66
கடம்பர் கோயிலுலா-50
கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது-44
கடற்கரை-76
கணபதி, ச. கு.,-3
கணபதிப்பிள்ளை மு., 31
கந்தபுராணம்-27
கபிலர்-87
கம்பர் அந்தாதி-26
கம்பராமாயணம்-41
கயிறு சார்த்திப்பார்த்தல்-62
கலித்தொகை-21
கலித்துறை அந்தாதி-57
கலைமகள்-46
கவிராஜ ஈசுவரமூர்த்திப் பிள்ளை-5
கவைமகன்-103
கழுதை விடுதூது-45
களக்காட்டுச் சத்திய வாகீசர் இரட்டைமணி
மாலை-58
களத்தூர் வேதகிரி-20
கன்னல்பைங்காடு-94
கனகசபை-20
காசிராஜன். இரா.,-23
காஞ்சிப்புராணம்-53
கார்குடி-11
கார்குடி கஸ்தூரி-80
கால்டுவெல் கல்லூரி-71

கிருஷ்ணசாமி, கே. வி.,-111
கிருஷ்ணவாத்தியார்-8
கிளர்மணி-2
கிளவிக் கொத்து-36
கிறித்துவக் கல்லூரி-71
குடந்தை மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்-61
குடந்தை யந்தாதி-26
குடும்பச்சொத்து-16
குணபாலன்-67
குணமாலை-44
குப்பைக்கோழியார்-103
கும்பகருணன்-98
கும்பகோணம்-11
குமர குருபர சுவாமிகள்-62
குமாரசாமித் தம்பிரான்-24
குருநாதர்-27
குளோரியா சுந்தரமதி-23
குறவஞ்சி-59
குறிஞ்சிப்பாட்டு-74, 86, 90
குறிப்பகராதி-36
குறுந்தொகை-75
குறுநிலமன்னர் அவைக்களப்புலவர்-106
குன்னம்-10
கூவிளம்-பூ-92
கேம்பிரிட்ஜ்-117
கொட்டையூர் சிவக்கொழுந்து-20
கொலுமண்டபம்-23
கோசர்-95
கோடல் மரபு-2
கோடீச்சுரக் கோவை-48
கோதண்டராமன். சு.,-115
கோபாலகிருஷ்ண பாரதியார்-16
கோவாநகர்-18
சங்கரலிங்க உலா-50
சங்கீதம்-17

சடகோபர்-9
சத்திய மூர்த்தி எஸ்.,-111
சதாசிவ தத்துவம்-95
சந்திரநாதன்-66
சமவசரணம்-67
சமஸ்கிருத வித்துவான்-12
சவ்வாது விடுதூது-46
சரபேந்திர பூபாலக்குறவஞ்சி-60
சரளிவரிசை-8
சரஸ்வதி அம்மாள்-106
சாமுவேல்-20
சாவா உடம்பு-120
சிதம்பரம் மீனாட்சித் தமிழ்க்கல்லூரி 107
சிலப்பதிகாரம்-27
சிலாசாசனம்-49
சிலேடை-33
சிலேடைவெண்பா-59
சிராமலைக்கோவை-48
சிவசாமி 8
சிவஞான சித்தியார்-27
சிவஞானபோதம்-27
சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழ்-61
சிவசிவவெண்பா-59
சிவநேசன்-46
சிவபக்தி-7
சிற்றம்பலக் கவிராயர்-6
சிற்றிலக்கியம்-15
சிறு பொழுது-39
சின்னப்பா. கா. மு.,-113
சின்னப்பன்-61
சீகாழிக் கோவை-35, 48
சீவகசிந்தாமணி-22, 27
சுந்தரம். பெ., 114
சுப்பிரமணியத் தம்பிரான்-24
சுப்பிரமணியதேசிகர்-23, 80

சுவடிக்கலை-5
சூடாமணி நிகண்டு-20
சூரை மாநகர்ப் புராணம்-53
செகந்நாதன். சி.,-115
செங்கணம் விருத்தாசலம்-12, 80
செங்கோடுவரி-92
செந்தமிழ்-46
செம்புலப்பெயல் நீரார்-103
செருமானியர்-18
செவந்திபுரம்-33
சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-26
சேதுப் புராணம்-53
சேலம் இராமசாமி-25
சேனாவரையர்-21
சைவ நூல்கள்-20
சொக்க நாதருலா-42
சொல் விளங்கும் பெருமாள்,பூ., -23
சோளப்பொரி-13
ஞாழல் மரம்-76
ஞானப்பிரகாசம்-19
தக்கயாகப்பரணி-55
தஞ்சை சீனிவாசன்-80
தஞ்சை நகரம்-19
தஞ்சைப் பெருவுடையார் உலா-50
தஞ்சை வாணன் கோவை-26
தணிகாசலப் புராணம்-53
தணிகைப் புராணம்-21
தண்டியலங்காரம்-38
தமிழ் அடியார்-6
தமிழ்க்கோயில்-1, 4
தமிழ்த்தாத்தா-1, 79
தமிழ்த்தீர்த்தங்கரர்கள்-6
தமிழ் நாயன்மார்கள்-6
தமிழ்நெஞ்சம்-39
தமிழ் நெறி விளக்கம்-80
தமிழ்ப் பஞ்சம்-18

தமிழ்ப்பிக்குகள்-6
தமிழ்மகள்-6
தமிழ் விடுதூது-2, 37
தமிழ் வியாசர்-110
தமிழாசிரியர்-29
தமிழாலயம்-5
தமிழார்வம்-10
தருமபுரம்-92
தல புராணங்கள்-24
தனியூர்ப் புராணம்-53
தாண்டவராயக் கவிராயர்-57
தாமோதரம் சி. வை.,-1, 20, 21, 73
தியாக முரசு-94
தியாகராசர்-100
திரிசிர கிரியுலா-42
திரிபந்தாதி-57
திவ்வியப் பிரபந்தம்-44
திருக்கழுக்குன்றக்கோவை-48
திருக் காளத்திப் புராணம்-53
திருக் குடந்தைப் புராணம்-65
திருக்குடந்தை திரிபந்தாதி-41
திருக்குற்றாலப் புராணம்-53
திருக்குறள்-8
திருக்கோவையார்-26
திரு ஞானசம்பந்தர்-52
திருத்தணிகை சரவணப் பெருமாள்-20
திருத்தணிகைத் திருவிருத்தம்-61
திருத்தணிகை விசாகப் பெருமாள்-70
திரு நாகைக் காரோணப் புராணம்-27
திருப்பாதிரிப் புலியூர்க்கலம்பகம்-61
திருப்பூவண நாதருலா-33,50
திருமந்திரமாலை-95
திரு மயிலைத்திரிபந்தாதி-56
திருமயிலையமக வந்தாதி-56
திருமலையாண்டவர் குறவஞ்சி-60
திருமூலர்-6

திருவாவடுதுறை அம்பலவண தேசிகர்
பிள்ளைத் தமிழ்-61
திருவாவடுதுறைக்கோவை-34
திருவாவடுதுறை மடம்-70
திருவாரூர்க் கோவை-48
திருவாரூர் நான்மணிமாலை-58
திரு. வி. க.-1, 110
திருவேங்கடாசலம்-20
திருவிடைக் கழி முருகர் பிள்ளைத்தமிழ்-61
திருவாலவாய்த் திருத்தாண்டகம்-47
திருவிடை மருதூர்-24
திருவிலஞ்சி முருகன்உலா-51
திருவிளையாடற் புராணம்-10, 27
திருவெண்காட்டுப் பெரிய நாயகி
பிள்ளைத்தமிழ்-61
திருவேங்கடமாலை 59
தினைக்கதிர்-90
தீபாவளி-11
துகில் விடு தூது-43
துணைக் கருவிகள்-29
துறுகல்-102
தூதிற்குவாயில்கள்-47
தூதுப் பொருள்-45
தெலுங்குக் கீர்த்தனங்கள்-9
தென்பாண்டிநாடு-97
தேசிகவிநாயகம்-30
தேரழுந்தூர்-32
தேவாரம்-44
தேவையுலா-50
தொண்டை மண்டலம்-19
தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள்-51
தொல்காப்பியம்-37
நச்சினார்க்கினியர்-54
நந்தனார் சரித்திரக் கீர்த்தனை-16
நல்லுரைக்கோவை-86
நன்னூல்-79
நாச்சிமுத்து. கி., 23
நாமகள் இலம்பகம்-70
நாலடியார்-8
நாவுக்கரசர்-2
நாராயணதீட்சிதர்-58
நானூற்றுக்கோவை-49
நிகண்டு-20
நிகழ்காலக் கம்பர்-106

நினைவாற்றல்-57
நீதிநெறிவிளக்கம்-21
நீதிபதி-25
நெஞ்சுவிடுதூது-46
நெடுநல்வாடை-86
நெல்விடுதூது-43
நைடதம்-20, 27
நைஷத நூலாசிரியர்-41
பஞ்சரத்தினம்-60
பட்டினத்தார்-64
பட்டினப்பாலை-86
பணவிடுதூது-45
பத்துப்பாட்டுச் சுவடி-5
பதிற்றுப்பத்தந்தாதி-57
பதினெட்டு மொழி-52
பதினெட்டு வருணனை-39
பதுமனார்-99
பரணி-48
பரம்பரைச் சொத்து.17
பரிகாரம்-90
பவ்ய ஜீவன்-68
பவர்-70
பழந்தமிழ்ச் சொற்கள்-97
பழநி பிள்ளைத்தமிழ்-60
பழ மலைக்கோவை-48
பழனி இரட்டை மணிமாலை-58
பழைய உரையாசிரியர்-77
பாசவதைப் பரணி 55
பாட வேறுபாடு-84
பாபநாசம்-11
பாரதம்-20
பாரதியார்-118
பாரிஸ்-117
பிடிவாதக்காரர்-112
பிரகத்தன்-87
பிரபுலிங்க லீலை-20, 27,
பிரம்ம வித்தியா நாயகி பிள்ளைத்தமிழ்-61
பிரம்மாணம்-41
புகலூர் அந்தாதி-26
புகையிலை விடு தூது-43,44
புதுவை நயனப்பன்-20
புலமைப் பெருங்கடல்-118
புறப்பொருள் வெண்பாமாலை-80, 82,
புன்னைக்காயல்-18

பூங்கொம்பு-89
பூலோகசிங்கம் பிள்ளை. பொ.,-20
பெரிய புராணம்-27
பெருங்கதை-31
பெருமண நல்லூர் திரு வெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்-61
பேராசிரியர்-21
பொருநராற்றுப்படை-35
போர்க்களம்-54
மகாவித்துவான்-12
மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்-24, 25
மட்டோலைப் பூவையார்-42
மடத்தின் தலைவர்28
மணமுரசு-94
மணவாள நாராயண சதகம்-8
மணிமேகலை-27
மதுரை-100
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்-23
மதுரைக் காஞ்சி-73
மந்திரப்படலம்-105
மயிலை நாதர் உரை-83
மலைபடுகடாம்-35
மலையாள வழக்கு-96
மழவை மகாலிங்கம்-20
மறைசையந்தாதி-26
மனோன் மணியம்-114
மஹாமஹோபாத்தியாயர்-1
மாணிக்கம் வ. சுப.,-119
மாணிக்கவாசகர்-48
மாணைக்கொடி-102
மாநிலக்கல்லூரி-107
மாயூரப் புராணம்-27
மான்நேயம்-34
மாறனலங்காரம்-38
மான்விடுதூது-34
மீனாட்சிசுந்தரம்-11
மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்-26, 95
முகவை இராமானுசக் கவிராயர்-20
முகில் விடுதூது-45
முடிகொண்டான் பாரதியார்-16
முத்தமிழாகார அச்சுக்கூடம்-33
முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ்-26'60
முத்து வேலாயுதப்பண்டாரம்-9
முதலை-104

முருகாற்றுப்படை-35
முல்லை அந்தாதி-26
முல்லைப்பாட்டு-86
மும்முரசு-94
மூதுரை-8
யமகவந்தாதி-57
யானைப்பசி-13
யாப்பருங்கலக் காரிகை-80
யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர்-81
ராமன், மு. கோ., 30
வசைப்பிரபந்தம்-45
வசைவிடுதூது-43
வடமலையப்பப் பிள்ளையன்-58
வடல் மொழி-7
வறுஞ்சுரம்-75
வாசவதத்தை-44
விசேடவுரை-78
வில்லிவாக்கம் தாண்டவராயன்-20
வில்லைப்புராணம்-53
விருஷபதாசர்.70
விளத்தொட்டிபுராணம்-53
விவிலியநூல்-31
வீடூர் அப்பாசாமி-66
வீரசோழியம்-21
வீரசைவர்-9
வீரமுரசு-94
வீரவனப் புராணம்-53
வெண்பா வந்தாதி-57
வெள்ளக்கால். பெ. சுப்பிரமணியம்-114
வெள்ளிடை மலை-28
வேங்கடசாமி. ந. மு., - 114
வேங்கட சுப்ப ஐயர்-38
வேங்கடராவ்-11
வேமன்ன சதகம்-9
வேணுவனலிங்க விலாசச் சிறப்பு-23, 32
வேலுப்பிள்ளை. ஆ., -22
வையாபுரி. எஸ்.,-111
ஜகந்நாதன். கி. வா..-113
ஜைனாலயம்-67
ஸ்ரீ கச்சியப்ப முனிவர்-44
ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம்-24
ஸ்வகாரிய துரந்தரர்-112
ஹிந்துஸ்தானிச் சொற்கள்-86

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1.	தமிழில் விடுகதைகள்	... ரூ. 12-00
2.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார் ? எவர்?	... ரூ. 6-00
3.	தமிழர் தோற்கருவிகள்	... ரூ. 10-00
4.	தமிழும் தமிழரும்	... ரூ. 5-00
5.	தமிழர் இசை	... ரூ. 70-00
6.	ம.பொ.சி.யின் இலக்கியநூல்கள்-ஓர்மதிப்பீடு	... ரூ. 20-00
7.	இளங்கோவின் இலக்கிய உத்திகள்	... ரூ. 12-00
8.	திராவிட மொழி இலக்கியங்கள்	... ரூ. 35-00
9.	உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள்	... ரூ. 12-00
10.	தமிழ் இலக்கியக் கொள்கை-9	... ரூ. 20-00
11.	தொல்காப்பியம் புணரியல்	... ரூ. 10-20
12.	தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல்	... ரூ. 12-00
13.	தொல்காப்பியம் - விளிமரபு	... ரூ. 6-00
14.	தொல்காப்பியம் - பெயரியல்	... ரூ. 12-00
15.	தொல்காப்பியம் - வினையியல்	... ரூ. 20-00
16.	பிரபந்த தீபிகை	... ரூ. 12-00
17.	கண் மருத்துவம்	... ரூ. 50-00
18.	வர்ம சூத்திரம்	... ரூ. 10-00
19.	தன்வந்திரி குழந்தை வாகடம்	... ரூ. 14-00
20.	வெள்ளைக்காரன் கதை	... ரூ. 7-00
21.	மெய்க்கீர்த்திகள்	... ரூ. 20-00
22.	சிந்து இலக்கியம்	... ரூ. 8-00
23.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	... ரூ. 6-00
24.	தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்	... ரூ. 12-00
25.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-1	... ரூ. 12-00
26.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-2	... ரூ. 22-00
27.	இஸ்லாம் வளர்த்த தமிழ்	... ரூ. 15-00
28.	உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்	... ரூ. 10-00
29.	டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்	... ரூ. 10-00
30.	தமிழரின் தாயகம்	... ரூ. 10-00
31.	பாவாணரும் தனித்தமிழும்	... ரூ. 12-00
32.	தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு	... ரூ. 10-00
33.	செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள்	... ரூ. 25-00
34.	மொழி பெயர்ப்பியல்	... ரூ. 10-00
35.	தமிழர் திருமணம்	... ரூ. 25-00
36.	தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்	... ரூ. 35-00
37.	தமிழ்தந்த வ. உ. சி.	... ரூ. 15-00
38.	எண்பத்திரண்டில் தமிழ்	... ரூ. 90-00
39.	மகாமதிப்பாவலர்	... ரூ. 11-00
40.	உலக முதன் மொழி தமிழ்	... ரூ. 12-00
41.	Siddha Medicine (Heritage of the Tamils)	... Rs. 45-00
42.	Cultural Heritage of the Tamils	... Rs. 20-00
43.	Literary Heritage of the Tamils	... Rs. 50-00
44.	Tamil Drama	... Rs. 20-00
45.	Dr Mu. Va	... Rs. 20-00
46.	Thiru Murugan	... Rs. 5-00
47.	A Study of the Perunkatai	... Rs. 12-00
48.	Tamil Writers Directory	... Rs. 10-00
49.	Dissertations on Tamilology	... Rs. 10-00
50.	Tamil-Text (An-Auto Instructional Course)	... Rs. 25-00
51.	Siddha Medical Manuscripts in Tamil	... Rs. 8-00
52.	Karaikkal Ammaiyar	... Rs. 6-00
53.	Heritage of the Tamils-Temple Arts	... Rs. 50-00
54.	Tolkappiyam (An English Translation)	... Rs. 25-00
55	Heritage of the Tamils Education & Vocation	... Rs. 50-00